வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
SUTANTIRAN

194 A, BANDARANAIKE STREET, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.




புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1994 கார்த்திகை திங்கள் 1-ம் நாள் (17—11—1963) ஞாயிற்றுக்கிழமை ஐ. ஆகிர் 29 | இதழ் 25

# இங்கும் ஒரு காந்தீய ஆசிரமம்

## "மெய்ம்மை சேரில்லம்" என பெயரிட முடிவு

### தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுத் தந்தையின் அழைப்பு

வட இலங்கையில் காந்திய முறைக்கமைய ஓர் ஆசிரமம் அமைக்கப்படவிருக்கிறதென்றும், அதற்கான திட்டங்கள் தயாராகிவிட்டன என்றும், அந்த ஆச்சிரமத்திற்கு "மெய்ம்மை சேரில்லம்" என்று பெயரிடப்படும் என்றும் 'சுதந்திரனு'க்குத் தகவல் கிடைத்துள்ளது.

இத்திட்டத்துக்கு தமிழரசுத் தந்தையின் பூரண ஆதரவும், ஆசியும் கிடைத்திருப்பதோடு, உத்தேச ஆசிரமத்தில் சேர்ந்து தொண்டாற்ற தமிழ் பேசும் மக்கள் முன்வரவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆட்சி பீடமேறியவர்களின் அதிகார வெறிக்குள்ளாகி சீரழிந்து வரும் தமிழ் பேசும் சமுதாயம், விடுதலை பெற்று விமோசனம் அடைய ஒரே ஆயுதம் அகிம்சைதான். அந்த ஆயுதத்தைச் செப்பனிடவும், அவ்வாயுத பாணிகளைத் தயாரிக்கவும் தகுதியான இடம் ஆசிரமமே என்பதனை

(9-ம் பக்கம் பார்க்க)



சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த மட்டுவில் தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கத்தால் பாதயாத்திரைக் குழுவினருக்கு மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. படங்கள்:- 1. உடுவில் பிரதிநிதி தர்மலிங்கம் உரை நிகழ்த்துகிறார். 2. தொண்டர்களுக்காகத்தயாராகும் மதியஉணவை சாவகச்சேரி பிரதிநிதி மேற் பார்வையிடுகிறார். 3. மாதர்களுக்கும், மாணவர்களுக்கும் உரிமைப்போர் பற்றி விளக்கம் தருகிறார் சாவகச்சேரிப் பிரதிநிதி திரு.வி. நவரெத்தினம். 4. மக்களுடன் கலந்துரையாடிக் கருத்துப் பரிமாறிக் கொள்ள திரு. நவரெத்தினத்துக்கு நல்ல அவகாசம் கிடைத்திருக்கிறது. 5. உணவின் பின்னர் சற்று உறங்கும் பொழுதிலும் உரையாடலுக்கு என்ன அவசரமோ என்று திருவாளர்கள் தர்மலிங்கத்தையும், நவரெத்தினத்தையும், வட்டுக் கோட்டை திரு. சு. இராசா வினவுகிறார் போலும்.

# கதிர்காம யாத்திரிகர்கள் கள்ளத் தோணிகளாம்

## கைது செய்தது மிருகச் செயல் என தமிழரசுத் தலைவர் கண்டனம்

'கதிர்காம புனித ஸ்தலத்திலிருந்து 43 இந்து யாத்திரிகர்களையும் சாதுக்களையும் 'மிருகத்தனமாகக் கைது செய்து கும்பெனித் தெரு முகாமில் மனிதத் தன்மையற்ற நிலையில் தடுப்புக்காவலில் வைத்திருப்பதை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்'.

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் பட்டிருப்புப் பிரதிநிதியுமான திரு. சி. மூ. இராசமாணிக்கம் பிரதமருக்கு ஒரு தந்தியை அனுப்பியுள்ளார்.

அத்தந்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

"தென்வியட்நாமில் டியம் ஆட்சியில் பௌத்தர்கள் இம்சைக்குள்ளாக்கப்பட்டதை ஆட்சேபித்து தங்கள் அரசாங்கமும் இலங்கைப் பௌத்தர்களும் குரல் எழுப்பியதை யாம் அறிவோம். கதிர்காமத்தில் உங்கள் பொலீசாரின் செயல் வியட்நாம், டியம் ஆட்சியின் செயலையே ஒத்திருக்கிறது. என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நீங்கள் உடனடியாக இதில் தலையிட்டு இவர்களை உடனடியாக விடுவிப்பது மாத்திரமின்றி, தங்களின் இராணுவமும் பொலீஸ் படையும் இவ்விழி செயல்களில் ஈடுபடுவதை

(9-ம் பக்கம் பார்க்க)

தீமைகளைப் பொசுக்கும் தீபத் திருநாளாம் தீபாவளி தினத்தில், தன் இனத்தைச் சூழ்ந்துள்ள இருளை அகற்ற இந்தச் சிறு சுடர் போதுமா? என்று இச் சின்னஞ்சிறு செல்வி சிந்திக்கிறார் போலும்.



"மெய்கண்டான்"

| | |
|---|---|
| திருக்குறட் கலன்டர் No. 1 (சிகப்பு) | 1-85 |
| நன்மொழிக் கலன்டர் No. 2 | 1-05 |
| மாதக் கலன்டர் (பஞ்சாங்கக் கலன்டர்) | -65 |
| சிங்கள கலன்டர் (No. 1 கலன்டர் அளவுள்ளது) | 1-75 |
| ரேபின் கலன்டர் (பிளாஸ்ரிக் ஸ்ரான்டுடன்) | 4-75 |
| தகரப் படம் (அழகிய பல மாதிரிகள்) | 2-10 |
| No. 1. பிளாஸ்ரிக் தமிழ் டயறி(பிளாஸ்ரிக் கவருடன்) | 2-25 |
| No. 2. பிளாஸ்ரிக் திருக்குறள் டயறி " | 1-75 |
| No. 3. பிளாஸ்ரிக் டெஸ்க் டயறி " | 2-95 |
| No. 4. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-75 |
| No. 5. பிளாஸ்ரிக் இங்கிலிஷ் டயறி " | 1-40 |
| No. 6. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி'A' (பக்கம் 1ம்நாள்) | 3-10 |
| No. 7. பிளாஸ்ரிக் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம்நாள்) | 2-60 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்றிக் கவர்) | 2-95 |
| பிளாஸ்றிக் சிங்கள டயறி " | 1-75 |
| பேர்ஸ் சிங்கள டயறி | 2-60 |
| பிளாஸ்ரிக் நியமன (Appointments) டயறி | 4-50 |
| No. 1. பேர்ஸ் தமிழ் டயறி(பேர்ஸ் சகிதம்-With Purse) | 3-10 |
| No. 2. பேர்ஸ் திருக்குறள் டயறி " | 2-60 |
| No. 4. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-60 |
| No. 5. பேர்ஸ் இங்கிலிஷ் டயறி " | 2-10 |
| No. 6. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'A' (பக்கம் 1ம் நாள்) | 3-85 |
| No. 7. பேர்ஸ் பிஸ்னஸ் டயறி 'B' (பக்கம் 2ம் நாள்) | 3-35 |
| No. 8. அலுவலக (Official) டயறி (பிளாஸ்ரிக் கவர்) | 4-50 |
| வலற் டயறி (Wallet Diary-மிகச் சிறந்தது) | 5-50 |
| ஜெம் டயறி (Gem Diary) | 1-35 |
| ஜெம் பேர்ஸ் டயறி (Gem Purse Diary) | 2-05 |

இன்னும் பல உண்டு.

மற்றும் விபரங்களுக்கு

மெய்கண்டான் அச்சியந்திரசாலை

161, செட்டியார் தெரு,

கொழும்பு-11.

போன் : 79141

கிளை:

10, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்.

(போன் : 236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை தமிழுக்கு அரியணை தந்துள்ள ஒரே நாடு சிங்கப்பூர்

## இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இது நல்ல படிப்பினை

**த**மிழ் அன்னைக்கு அரியாசனத்தில் சரியாசனம் வேண்டி நடைபெறும் கிளர்ச்சி நம் நாட்டில் வலுவடைந்து உச்ச நிலையை அடைந்துள்ளது. தமிழ் பிறந்த தமிழகத்திலும் மொழிக் கிளர்ச்சி வலுவடைந்துள்ளது. ஆனால், தமிழ் பேசும் மக்கள் மிகவும் சிறுபான்மையினராகவுள்ளதும்-இடைக்காலத்தில் சென்று குடியேறிய நாடுமான சிங்கப்பூரில் தமிழ் அன்னைக்கு, அந்நாட்டின் அரியாசனத்தில் சரியாசனம் கிடைத்துள்ளது. மலாய், சீனம், ஆங்கிலம் ஆகியவற்றுடன் தமிழும் சம நிலையில் வைக்கப்பட்டுள்ளது. சிங்கப்பூரில் தமிழ் மொழியின் நிலைபற்றி, 'மலேஷியா மலரில்' அதன் ஆசிரியர் எஸ். எஸ். சர்மாவினால் எழுதப்பட்ட கட்டுரையின் மறு பிரசுரமே இது. 'தமிழுக்கு அரியணை தந்துள்ள ஒரே நாடு சிங்கப்பூர்' என்ற பெருமையை அந்நாடு தட்டிக்கொண்டுவிட்டது. மலாய் நாட்டில் சமயப் பிரசாரம் செய்து வரும் வண்ணை திரு. சி. எஸ். எஸ். மணிபாகவதர் அவர்கள் இவ்வெளியீட்டை நமக்கு அனுப்பி வைத்துள்ளார். கட்டுரை கீழே தரப்படுகிறது:-

"தமிழ் பிறந்த தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற போராட்டம் நடந்து வருகிது. இலங்கையில் தமிழுக்குச் சரி இடம்தர வேண்டுமென்று கிளர்ச்சி செய்து வருகிறார்கள். ஆனால் சிங்கையிலோ மலாய், சீனம், ஆங்கிலம் ஆகியவற்றுடன் தமிழும் ஆட்சி மொழியாகத் திகழ்கிறது. இந்தப் பன்மொழித் திட்டம் இங்கே வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது. நான்கு பிரதான மொழி பேசும் இனத்தினரின் ஒற்றுமைக்கு ஊன்றுகோலாகத் திகழ்கிறது இந்தத் திட்டம்.

சிங்கை மக்கள் தொகை இனவாரிப்படி உள்ள விகிதம் வருமாறு:

சீனர்: 11,41,800.

மலாய்க்காரர்: 2,07,300.

இந்தியர், பாகிஸ்தானியர்: 1,29,500 (82 சதவிகித தமிழர்)

இதரர்: 46,300.

சிறுபான்மையினராக விளங்கும் தமிழரின் மொழிக்கு சமத்துவம் தந்திருப்பது தமிழ் கூறும் நல்லுலகம் சிங்கை அரசை நெஞ்சார வாழ்த்தக் கடமைப் பட்டுள்ளது.

### சட்டமன்றத்தில் தமிழ்!

சிங்கை சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் தமிழுட்பட நான்கு மொழியிலும் பேசுவதற்கும் ஒரே சமயத்தில் அதன் மொழிபெயர்ப்பை அவரவர்கள் விரும்பும் மொழியில் அறிந்துகொள்வதற்கும் வசதி செய்யப்பட்டுள்ளது. ஓர் உறுப்பினர் சீன மொழியில் பேசுகிறார் என்றால் அதன் தமிழ், மலாய், ஆங்கில விளக்கங்களை உடனே அறிந்துகொள்ளலாம். நான்கு மொழிச் சிக்கலை நவீன கருவிகளின் மூலம் எளிதுபடுத்திவிட்டது சிங்கை சட்ட மன்றம்.

சிங்கையிலுள்ள அறிவிப்புப் பலகைகளில் தெள்ளு தமிழ் கொஞ்சுவதை எங்கும் காணலாம். பிரிட்டிஷ் காலனித்துவ காலத்திலும் தமிழுக்கு ஓரளவு இடமளித்திருந்தார்கள். ஆனால் அந்த நாளைய மணிப்பிரவாள அறிவிப்புகளுக்கும் இப்போதைய விளக்கங்களுக்கும் எத்தனை வேற்றுமை! ஓர் அலுவலக வாசலில் No Admittance. என்று ஆங்கிலத்தில் ஓர் அறிவிப்பு இருக்குமானால் தமிழில் "உட்பிரவேசிக்காதே" என்று தந்திருப்பார்கள் காலனித்துவ நாளில். இன்றோ 'அலுவல் இருந்தால் மட்டும் உள்ளே வருக' என்று அழகாக, இடமறிந்து பொருட் செறிவுடன் தருகிறார்கள்.

**எஸ் எஸ் சர்மா**

சிங்கையிலுள்ள பொது அறிவிப்புப் பலகைகளில் மட்டுமல்ல, அரசினர் அலுவலகங்களிலும் தமிழுக்குத் தக்க இடம் தந்துள்ளார்கள். அரசினர் அறிவிப்புகள், குறிப்புகள் அனைத்திலும் தமிழ் விளக்கம் காணலாம்.

மருத்துவ மனைகளில், மருந்து அருந்தும் விதத்தின் குறிப்புகளையும் இதர விவரங்களையும் அதை வாங்குவோர் அறிந்த மொழிகளில் ஒட்டிக் கொடுக்கிறார்கள். முன்போ இவை தமிழில் மட்டுமே இருந்தன.

தண்ணீர், மின்சாரக் கட்டணங்கள் செலுத்துவதற்கான அறிவிப்புக்கள் நான்கு மொழிகளிலும் விளக்கமுடன் தரப்படுகின்றன வருமானவரி மனுக்களும் மற்றும் எண்ணற்ற பத்திரங்களும் வெளியீடுகளும் நான்கு மொழி விளக்கங்களில் உள்ளன.

சிங்கை வானொலியிலும் டெலிவிஷனிலும் தமிழ் பரி

(13-ம் பக்கம் பார்க்க)




சின்னஞ்சிறிய சிங்கை[illegible] அரசாங்கப் [illegible] பலகைகளிலெல்லாம் தமிழ் இடம் பெற்றுள்ளதைப் பாருங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதைப் பூங்கா

### குருதி தந்த கூத்து

—எருவில் மூர்த்தி—

அன்றொருநாள் நடுநிசியில் அயலவர்கள்
எல்லோரும் அயர்ந்த தூக்கங்
கொண்டவராய், கார்காலம், குளக்கரையில்
தவளைகளின் குரல்கள் போல
எண்திசையும் எதிரொலிக்க எழுப்புகின்ற
குறட்டைகளுக் கிடையே தூக்கங்
கண்டிலனாய் நித்திரையைக் கவர்ந்திழுக்க
வழிதேடிக் களைத்துப் போனேன்.

சிந்தையதும் ஏதேதோ சிவனற்ற
கற்பனையால் செம்பி நாட்டுச்
சந்தையதாய்க் குழம்பியது; சகதியிடை
ஆங்கேயோர் செண்ப கப்பூ...!
செந்தமிழர் பிரச்சினைதான்! சிக்கலுள்ளே
யான் மெள்ளச் சென்ற போது
நொந்ததுவும் எதனாலோ நுதல் மேடு?
அங்கேயோர் நுளம்பர் ஆமாம்!

குந்தியிருந் தவர்எனது குருதியினை
ஒருசிறிது குடிக்கும் போது
தந்திரமாய்க் கையெடுத்துத் தாக்கியதாற்
பயனில்லை; தப்பிக் கொண்டார்!
"தொந்திரவு சனி...!" என்று தூசித்து
முடிப்பதற்குள் தூர நின்று
விந்தையது! அன்னவரும் வெறிகொண்டே
ஏதேதோ விளம்ப லானார்!

"ஒப்பரிய தமிழ்க்குருதி ஓடுதடா
என்னுடைய உடலில் இன்று!
எப்பெரிய படையெனினும் எதிர்த்ததனைத்
தூளாக்க என்னால் ஆகும்!
முப்பெரிய அரசுகளின் முடிமன்னர்
என்னுடைய முன்னோர்; அந்தச்
செப்பரிய சந்ததியின் சேய் இன்று
நான்!" என்று சீற லானார்!

"வில்எங்கே? எனது நெடு வேல்எங்கே?
பகை சாடும் விறல் வாள் எங்கே?
பொல் எங்கே? தடிஎங்கே? புகல்எங்கே
பகைவர்க்கு? பொறுக்கேன் இங்கே!
நில் அங்கே!" என்றவரும் நெடுநேரம்
எனைப் பொருத நிலையைக் கூறச்
சொல் எங்கே உண்டென்று சுழன்றிட்டேன்
தமிழுக்குள்; சோர்வு அங்கே!

### பொன் நாள்

—புலவர் வேல்மாறன்—

எம்முடைய இதயமடா இன்பத்தமிழ் இதயம்—என்றும்
எம்முடைய உதயமடா இன்பத்தமிழ் உதயம்
எம்முடைய வீடுமடா இன்பத்தமிழ் வீடு—என்றும்
எம்முடைய நாடுமடா இன்பத்தமிழ் நாடு.

எந்தமுயிர் இவ்வுலகில் வாழுகின்ற போது—எம்மைச்
சிங்களர்தாம் ஆட்சிகொண்டே அடிமையாக்கி வாழ்வதோ?
சொந்தமொழி சுவைத்தமொழி தமிழ்மொழிதான்
இருக்க—நாம்
சுவையற்ற சிங்களத்தைக் கற்றுவாழ்வ தெப்படி?

ஈழகமும் சாவகமும் எழில்மலயாத் தீவுகள்—தமிழ்
இந்தியாவின் தாய்மையிடம் எந்தவிடம் எங்குமே
வாழுகின்ற தமிழன்னை எமதன்னை தம்பி—இவட்கு
வையகத்தில் எம்மொழியும் ஈடில்லைத் தம்பி.

மானமுமே வீரமுமே கொண்டநல்ல மறவரே—தமிழ்
மாநிலத்தில் வாழ்ந்தகதை யாவருமே அறிவரே
போனகதை சொல்வதிலே என்னபயன் கண்டீர்—என்றே
போகுமுயிர் தமிழுக்கே இணையென்று சொல்வீர்.

போரினுக்கு மகனைவிட்ட புனிதமான பூவையர்—தமிழ்ப்
புவியினிலே வாழ்ந்ததினைப் புறப்பாடல் கூறுமே
வேரினிலே தமிழினமே மானவீரம் கொண்டதே—என்றும்
மேதினியில் மேன்மையுற்று வாழ்ந்திடுவோம் தோழரே.

சங்கவாழ்வு தந்ததடா தங்கமுள்ள சுரங்கம்—இதைத்
தரணியெலாம் அறிந்தபின்னும் அடிமையென
வாழ்வதோ?
பொங்குதமிழ் ஆட்சியினை அறமுள்ள போரிலே—நாம்
பொலிவாகப் பெறும்நாள்தான் எம்வாழ்வின்
"பொன்நாள்"!




பொ. கிருஷ்ணசாமிபிள்ளை, கொழும்பு-11.

கே: சாதி வேற்றுமைகளுக்குப் பொறுப்பு யார்? பெண்களா? ஆண்களா?

ப: நிலப் பிரபுத்துவ சமுதாயத்தின் பிற்போக்கான கோட்பாடுகளே சாதி வேற்றுமைக்குக் காரணம்.

ஃ

நா. சின்னத்தம்பி, அம்பாறை.

கே: அண்ணா தமது கட்சியின் பெயரை மாற்றியது போல தமிழரசாரும் தங்கள் கட்சியின் பெயரை மாற்றி 'தமிழ் பேசும் மக்கள் ஐக்கிய முன்னணி' என்று நாமம் சூட்டினால் என்ன?

ப: அண்ணா கட்சிப் பெயரை மாற்றவில்லையே. த. பே. மக்களின் ஐக்கிய முன்னணியே தமிழரசுக் கட்சி. எனவே கட்சிப் பெயரை மாற்ற வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஃ

வே. தம்பிராசன் சகோதரர்கள், லெட்சுமி தோட்டம்.

கே: தமிழரசுக் கட்சியின் கீழ் நாம் தமிழர் என்ற இயக்கம் இயங்கி வருவதாகவும் அதை முளையிலே கிள்ளவே நாம் சிங்களவர் என்ற இயக்கத்தை ஆரம்பித்திருப்பதாகவும் ஒரு சிங்கள வகுப்புவாதத் தலைவர் கூறியிருக்கிறாரே!

ப: அவருடைய எந்த இயக்கத்துக்கும் சிங்களப் பொது மக்களின் ஆதரவு அறவே கிடையாது. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில ஆசாமிகள் அவர் கையில் உண்டு. அவர்களே அவருடைய அரசியற் கட்சி, தொழிற் சங்கம், விவசாயிகள் சங்கம், நாம் சிங்களவர் இயக்கம் ஆகிய எல்லாவற்றிலும் உறுப்பினர்கள். அவருடைய தொகுதியைத் தவிர வேறு எங்கு அவர் பொதுக் கூட்டம் நடத்தினாலும் 50 பேருக்கு மேல் சிங்களவர்கள் கூடுவதில்லை. இதிலிருந்தே 'நாம் சிங்களவர்' இயக்கத்தின் செல்வாக்கு புலனாகும்.

ஃ

சு. பாலகிருஷ்ணன், பம்பலப்பிட்டி.

கே: துர்நடத்தையுடைய பெண்ணொருத்தி ஒருவனுக்குக் காதலியாகி, ஈற்றில் மனைவியாகி வாழ முடியுமா?

ப: முடியும்—நடத்தையைத் திருத்திக் கொண்டால்.

கே: தென் வியற்னும் புரட்சி எதைக் காட்டுகிறது?

ப: மக்களின் ஒரு சாராரைத் துன்புறுத்தினால், அணைத்த கையே குழி தோண்டும் என்பதைக் காட்டுகிறது.

ஃ

கு. களஞ்சியம், சண்டிலிப்பாய்.

கே: மலையக மக்களும் எமது மொழிப் போராட்டங்களில் கலந்துகொள்ள மாட்டார்களா?

ப: நிச்சயம் கலந்துகொள்வார்கள், காலம் வரும் போது.

ஃ

தவராஜா குலேந்திரன், ஊர்காவற்றுறை.

கே: தி. மு. கழகம் முன்னேறுவதற்குரிய காரணங்கள் எவை?

ப: நல்ல திட்டம், சிறந்த அரசியல் உபாயங்கள், துணிவு மிக்க தலைமை, உள் கட்சி ஜனநாயகம் ஆகியவைகளே.

ஃ

எம். எஸ். செ. சந்தனம், தொரணியகலை.

கே: மனிதன் ஏன் தவறு செய்கிறான்?

ப: தன்னைத் திருத்திக் கொள்ள.

ஃ

கே. கண்ணதாசனைப் பார்த்திருக்கிறீர்களா?

ப: ஏன், அவர் எல்லோராலும் பார்க்கப்படவேண்டிய நபரா?

ஏ. எம். பெத்தையா, பதுளை.

கே: அண்ணா துவக்கிய மக்கள் கழகம் எதைக் காட்டுகிறது?

ப: தி. மு. க. "திராவிட நாடு வேண்டும்" என்று நேரடியாகக் கேட்பதைக் கைவிடும் என்பதைக் காட்டுகிறது.

ஃ

சி. வேலு, பொரலங்கடை.

கே: தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் எம். ஜி. ஆரும். எஸ். எஸ். ஆரும் கலந்துகொள்ளுவார்களா?

ப: தற்போது அவர்களுக்கு விதிவிலக்கு அளித்துள்ளார் அண்ணா.

ஃ

லெட்சுமி தோட்டம், மஸ்கெலியா.

கே: ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஸீஸ் தற்பொழுது என்ன நோக்கத்துடன் இருக்கிறார்?

ப: பழைய நோக்கந்தான்-அதுதான் என்றென்றும் தானே ஜ. தொ. காங்கிரஸ் தலைவராக இருக்க வேண்டுமென்ற நோக்கம்.

ஃ

அ. வே. கண்ணி, நிவிற்றிகலை.

கே: இலங்கைப் பிரதமர் மற்ற மேலைய நாடுகள் சென்று வந்தாரே, என்ன கொண்டுவந்தார்?

ப: பிரதமர் மேலைய நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தின் போது சில விஷயங்களைக் கற்றுக் கொள்ளக் கூடும், ஆனால் இலங்கையில் வந்து இறங்கியதும் அவைகளை மறந்துவிடுவார் என்கிறார் ஓர் இடது சாரித் தலைவர்.

ஃ

க. சுப்பிரமணியம், காரைநகர்.

கே: தினசரி என்னைப் பார்த்துச்சென்ற 'அவள்' இப்பொழுது தூரத்தில் வரும் பொழுது பார்க்கிறாள். கிட்ட வந்ததும் தலை குனிகிறாள். காரணம்?

ப: 'அவள்' பார்த்துச் சென்றதை நீங்கள் கவனித்துவிட்டீர்கள் என்பதை 'அவள்' தெரிந்து கொண்டாள். அதுதான் இந்தத் தலைகுனிவுக்குக் காரணம். இனி நீங்கள்தான் முன்னேற வேண்டும்!

கே: ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் கலந்து கொள்பவர்கள் "வீட்டை"ச் சின்னமாகப் பெறுவதற்கு முன்னிற்கிறார்களே—இது ஏன்?

ப: பொதுத் தேர்தலில் 'வீடு' தமிழரசுக் கட்சியின் சின்னமல்லவா? அது மக்கள் உள்ளத்தில் இடம்பிடித்துக் கொண்டுள்ளது. அந்தச் சின்னத்தின் தயவை நாடி யாவது வெற்றி பெற முடியாதா என்ற நப்பாசை தான் காரணம்.

திருவாளர்
**குயுக்தியார்**
மே/பா சுதந்திரன்
தபால் பெட்டி இல. 1183
கொழும்பு-12.

இம் முகவரியைக் கத்தரித்து தபால் அட்டையில் ஒட்டியனுப்பப்படும் வினாக்கள் மட்டுமே கவனத்திற்கு எடுக்கப்படும்.

# கொண்டாட்டம் ஏனோ?

—பரிமளா இராசதுரை—

மிகை பட்ட இனமின்று மிதமுற்ற வெறியோடு
தலை கெட்டு வளநாடு தனையாளு நிலையாலே
திகை யுற்ற தமிழ்பேசு குடிமக்கள் நசிவுற்றுத்
தகை யற்று வகையற்றுத் தவிக்கின்ற நேரத்தில்—
திருநாளும் ஏனோ—தீபப்
பெருநாளு மேனோ?

முதலற்ற தொழில்போல முழியற்ற விழிபோலச்
சதையற்ற உடல்போலச் சதியற்ற பதிபோல
விதையற்ற பயிர்போல விளைவற்ற வயல்போல
நவையற்ற தமிழன்னை நாக்கற்று வாழ்கையிற்—
களிநாளும் ஏனோ—தீப
ஒளிநாளும் ஏனோ?

மொழிபெற்ற இழிவுக்கும் முறையற்ற அரசுக்கும்
பழியுற்ற மரபுக்கும் பதனற்ற குடிமைக்கும்
அளவற்ற கொடுமைக்கும் அடிபட்ட சிறுமைக்கும்
குழிவெட்டிப் புதையாத குறைவெற்றி உறுமட்டும்—
திண்டாட்டம் போமோ—தீபக்
கொண்டாட்டம் ஏனோ...?

மூ. கருணாநிதி, ஏழாலை மேற்கு.

கே: தென்வியற்னுமின் சூழ்நிலை எமது இலங்கைக்கும் ஏற்படுமா?

ப: அங்கு பௌத்தர்கள் நசுக்கப்பட்டனர். இங்கு தமிழ் பேசும் மக்கள் நசுக்கப்படுகின்றனர். ஆனால் காந்தியத்தில் ஊறிப்போன இலங்கைத் தமிழ் பேசும் மக்கள் வியற்னும் பௌத்தர்களைப் போன்று பலாத்காரத்தை நிச்சயம் கையாள மாட்டார்கள்.

கே: யூ. என். பி. யின் தற்போதைய மொழிக் கொள்கை எதைக் காட்டுகிறது?

ப: பண்டாரநாயக்காவின் வழியிற் சென்று ஆட்சியைக் கைப்பற்றலாமென்ற குறுகிய எண்ணத்தைக் காட்டுகிறது.

ஃ

எஸ். எம். சமது, கிண்ணியா-9.

கே: தற்பொழுது வட பகுதியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும். தமிழரசாரின் பாதயாத்திரை எப்பொழுது கிழக்குப் பகுதியில் ஆரம்பிக்கப்படும்?

ப! கிழக்கு மாகாண தமிழரசுக் கட்சிக் கமிட்டி [illegible] செய்யுமென கட்சித் தலைவர் அறிவித்துள்ளார்.

எஸ். எம். இரா. இரத்தினம், பதுளை.

கே: இலட்சிய நடிகை விஜயகுமாரி தனது இலட்சியத்தைக் கை விட்டு 'பொலிஸ்காரன் மக'ளில் பிள்ளையார் கோவிலில் போய் மாலை மாற்றிக் கொள்கிறாரே! இதைப்பற்றித் தங்கள் கருத்தென்ன?

ப: அது வெறும் நடிப்பு ஐயா! ஏமாந்து போகாதீர்!

சி. பத்மநாதன், சாவகச்சேரி.

கே: ஊர்காவற்றுறையில் சுயேச்சை அடைந்த கதியை அறிந்திருந்தும் மீண்டும் திருமலை இடைத் தேர்தலில் போட்டியிட இரு சுயேச்சைகள் முன் வந்துள்ளார்களே!

ப: அப்படி முன்வராவிட்டால் சுயேச்சைகளை ஏன் 'மூன்று தலைக் கழுதைகள்' என்று கூறவேண்டும்?

ஃ

யோகேஸ்வரி, மூளாய்.

கே: டாக்டர் நாகநாதன் வட்டுக்கோட்டையில் சிங்களம் படித்த தன் பிள்ளைகள் தனது பிள்ளைகளல்ல என்று கூறினாராமே. நான் அவருடைய மகளாக விரும்புகிறேன். ஏற்றுக் கொள்வாரா?

ப: டாக்டருக்கு எழுதிக் கேளுங்கள்-உங்களைச் சுவீகாரம் எடுப்பாரா என்று.

ஃ

ஆ. வெள்ளையம்மா, எவிங்டன் தோட்டம்.

கே: மறைந்த நம் தலைவர் இராஜவரோதயத்தின் ஆன்மா சாந்தியடைய நாம் என்ன செய்ய வேண்டும்?

ப: அவரது அரசியல் வாரிசைப் பாராளுமன்றத்தில் அவருடைய ஆசனத்தில் அமர்த்த வேண்டும்.

ஃ

சு. சுப்பிரமணியம், கந்தரோடை.

கே: இலங்கைத் தமிழ் பேசும் இனத்தின் பிரச்சினையை ஐ. நா. சபைக்குக் கொண்டு சென்றால் இலாபமுண்டா?

ப: அதனால் இலாபமே தவிர நஷ்டம் ஏற்படாது. உலக அபிப்பிராயத்தைத் திரட்ட அது உதவும். ஆனால் அதனால் மட்டும் பிரச்சினை முழுவதும் தீர்ந்துவிடுமென்று எதிர்பார்க்க வேண்டாம்.

ஃ

பி. முருகேசு, பளக்கொல்ல.

கே: நான் நன்றாகப் படித்தவன். ஒரு எழுத்தும் படியாத ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளை மணந்து கொண்டால் என்னவாகும்?

ப: அவளுக்குப் படித்துக் கொடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுமெனப் பயப்படாதீர். எழுத்துப் படிக்கத் தெரியா விட்டாலும் அவளிடம்தான் நீர் காதல் பாடம் கேட்க வேண்டும்.


**ஜீ. சீ. ஈ.**
**101**
**வினு விடைகளும்**
கடந்த கால
**வினு விடைகளும்**

ஜீ. சி. ஈ. பரீட்சையில் சித்தியடைந்தோரிற் பெரும் பான்மையோர் எமது புத்தகங்களைப் படித்தவர்களே.

| | |
|---|---|
| தமிழ்ப் பாஷை | 3-75 |
| எண் கணிதம் | 3-75 |
| குடியியல் | 3-75 |
| சரித்திரம் | 3-75 |
| பூமிசாஸ்திரம் | 3-75 |
| சுகாதாரம் | 3-75 |
| ஆங்கிலம் | 3-75 |
| இந்து சமயம் | 3-75 |
| பயிற்சிச் சிங்களம் | 3-75 |

வி. பி. பி. கிடையாது
தபாற் செலவு
ஒரு புத்தகம் 50 சதம்
மேற்படும் ஒவ்வொரு புத்தகத்திற்கும் 25 சதம்

**அற்லஸ் ஹோல்,**
723, மருதானை றேட்,
கொழும்பு.






சுகாதாரமான நவீன முறைப்படி
கைபடாமல் தயாரிக்கப்பட்ட

**றோஸ் பிராண்ட்**
**சுவீட்ஸ் டொபீஸ்**

இலங்கையில் முதல் இடத்தை வகிப்பவை
ஒரு முறை சுவைத்தால் போதும்
மறுமுறை டொபி சுவீற்ஸ் வாங்கும்பொழுது

**'றோஸ்' பிராண்ட்**

என்றே கேட்பீர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகர் தேர்தல் களம்

# போட்டியிடுவோரின் உண்மை உரு கண்டு வாக்குக் கொடுப்பதே வளம் சிறக்க வழி

எழிலன்

யாழ்ப்பாணம் மாநகர சபை ஊழல்கள் நிறைந்த ஒரு இடமாகக் காட்சி தருகிறது. உள்நாட்டு அமைச்சு காட்டும் மாற்றுந் தாய் மனப்பான்மையினாலும், சூழ்நிலைகளைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு சொகுசான சொந்த வாழ்வு தேடும் சுயநல எண்ணங் கொண்ட போலி அரசியல் வாதிகளாலும் யாழ்ப்பாணம் மாநகரசபை பகடைக் காயாக உருட்டப்பட்டுவருவதனால், நிர்வாகத்தில் நிரந்தரமான சீர்குலைவு ஏற்பட்டுள்ளது.

போதுமான வருமானத்தைப் பெற்றிருந்தும் பொலிவிழந்த நிலையில் இந்நகரம் இன்று இருப்பதற்குக் காரணங்களை அலசிப்பார்க்க நேர்ந்தால், அத்தனையும் புரையோடிப் போன புண்ணை மீண்டும் புட்டுப் பார்ப்பதாகவே முடியும். காலங்கடந்த காரணத்தால் சீழ் வடிந்து கிடக்கும் புண் தோன்றக் காரணத்தை அறிந்தால்தான், தக்க மருந்து கொண்டு அப்புண்ணைப் போக்கடிக்க முடியும்.

மீண்டுமொரு தேர்தலுக்கு யாழ் நகர் ஆயத்தமாகிறது. போர்க்களம் புறப்படும் வீரர்கள் போல் வீராவேச முழக்கமிடவும், வீடுவீடாக வோட்டுக் கேட்கவும் வேட்பாளர்கள் புறப்பட்டுவிட்டனர். இந்தவேளையில் தான் ஊழல்கள் மலிந்த நகர நிர்வாகத்தின் நாசத்துக்கு யார் யார் காரணகர்த்தாக்கள் என்பதை நகர மக்கள் — வாக்களிக்கும் எஜமானர்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

### தப்புக் கணக்கு

'இதயத்தில் புதுமை எண்ணங்கள் பூக்கும் பருவத்தில் உள்ளவர், அஞ்சா நெஞ்சன், அடிபணிந்து போகாமல், எடுத்த பணியைத் தொடர்ந்து முடிப்பதில் தீவிரம் கொண்டோன்' என்றெல்லாம் புகழ் ஒலிக்க தலைவராக அமர்ந்தார் ஒருவர். அரியணைக்கு வந்ததும்பார்த்தவர் மெச்சும் வண்ணம் நகரின் தேற்றத்தை மாற்றத் தலைப்பட்டார். புதுப் புது முறைகளைப் புகுத்தி, நகருக்குப் புதுப் புதுப் பொலிவுகள் கொடுத்தார். பூரிப்பில் மிதந்தனர் மக்கள்.

ஆரம்ப சூரத்தனம் அநேக நாட்கள் நீடிக்கவில்லை.

அத்திவாரமெதுவுமின்றி ஆக்க வேலைகள் நடைபெற்றன என்பதனை யாழ் நகர் மக்கள் உணர அதிக நாட்கள் பிடிக்கவில்லை.

சொந்த நலமும், சூழ்ச்சிப் படலமும் கொண்டு வகுக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் தவிடுபொடியாகி விட்டன. நகரத்தைச் சீர்திருத்தும் பணியைப் போர்வையாகப் பாவித்துக் கொண்டு, அந்தரங்கத்தில் ஆடிய ஆட்டம் அம்பலம் ஏறிவிட்டது.

மக்களின் வரிப்பணத்தில் வரம்பும் வரையறையும் வகுக்காது வீண் செலவு செய்து — வீம்பு பல புரிந்து விளையாடல்கள் நடாத்தியது வெட்டவெளிச்சமாகி விட்டது. தட்டிக் கேட்க யாருமில்லை; தண்டிக்கவும் யாருக்கும் தெரியவுமில்லை; தடை போடவும் யாரும் தயாரில்லை. மிஞ்சினால் — ஆட்சியாளரிடம் தானே விசாரணைப் பொறுப்பு கொடுக்கப்படும்! மந்திரிமாரோ அந்தரங்க சுத்தியான நண்பர்கள்; அன்பருக்கு அவதூறு உண்டாக அமைச்சர்கள் பார்த்துக் கொண்டிருப்பார்களா? எப்படியோ பதவி நீடித்தது. மக்களின் பணமும் பல வழிகளாலும் பாழடிக்கப்பட்டது.

### இறைக்கப்பட்ட இறை

நூறு ஆயிரமல்ல. பல இலட்ச ரூபாய்கள் வீண் செலவுகளுக்கு இறைக்கப்பட்டுவிட்டன. முறையான விசாரணையில்லை. இதுவரை முடிவும் கிடைக்கவில்லை. வரி இறைக்கும் பொதுமக்களின் கண்ணில் மண்ணைத் தூவி தங்கள் வாழ்வையும், தம் சகபாடிகள் சுகத்தையும் பேணுவதையே பெருநோக்காகக் கொண்டு இயங்கியவர்கள் நகரத்தின் நலத்தையெல்லாம் செல்லரித்து விட்டனர். நிர்வாக இயந்திரத்தின் சர்வ அங்கங்களையும் அடியோடு நிர்மூலமாக்கிவிட்டனர்.

### அலங்கோல நிலை

இதன் பலாபலன் இன்று யாழ்நகர் தூங்கி வழிகிறது. கதிரவனின் ஒளிபோன்று பிரகாசிக்க வேண்டிய ஒளி விளக்குகள் இன்று இருளை மிகைப்படுத்தும் நிலையில் உள்ளன.

தூய்மைக்கும், சுகத்துக்கும் பேர்போன யாழ் நகரம் இன்று துர்நாற்றக் கிடங்காகக் காட்சி அளிக்கிறது.

பெருமையுடனும் பெரும் புகழுடனும் தன்னிகரற்றுத் தலைநிமிர்ந்திருந்த நகரத்தின் நிர்வாகம், ஊழல் மலிந்து உதவாக்கரையாக, நகைக்கும் நிலையில் உள்ளது.

இத்தகைய ஊழல்களும் உதவாக்கரை நிர்வாகமும் மலிவதற்கு உடந்தையாக உறுதுணை புரிந்தவர்கள் ஆளும் கட்சியினரே என்றால் மிகையாகாது.

அந்த ஆட்சிக்கு அவ்வப் போது அருந்துணை புரிந்தவர்களின் தகிடுதத்தப் போக்குக்குத் தட்டிக் கொடுத்துத் தைரியமூட்டியவர்கள் ஆட்சியினரே.

### மீண்டும் வோட்டு வேட்டை

வாக்காளப் பெருமக்களின் வீட்டுப்படியேறி மீண்டும் புறப்பட்டு விட்டார்கள் இந்த ஆசாமிகள்.

தாங்கள் இதுவரை காலமும் புரிந்துவந்த சதி வேலைகளின் சுயஉருவை மக்கள் அறியுமுன்னர், அவற்றை மூடி மறைத்துவிட — மீண்டும் சுயநல வேட்டையாட, ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்த, வழி தேடி வாக்குத் தேடும் படலத்தில் இறங்கியுள்ளனர்.

தங்கள் ஊழல்களின் உருவம் வெளியே தெரியு முன்னர் அதை மூடி மறைத்து விடப் பாதை அமைக்கவே மீண்டும் மாநகர சபைக்குள் பிரவேசிக்கத் தலைப்பட்டு விட்டனர்.

### பலனளியா நல் முயற்சி

விஷ நீரை நன்னீரில் கலக்கவொட்டாமல் தடுத்து விடலாம் என்று இடையில் நகராட்சியைக் கைப்பற்றியும், துர் நீரூற்றை அடைக்க முடியவில்லை. ஊற்று அடைபட்டாலும், அது ஏற்படுத்திய களங்கத்தைப் போக்கடிக்க நல்லவர்களால் முடியவில்லை. நல்லவர்களின் முயற்சியை முறியடிக்கும் வேலையைத் தொடர்பவர்களுக்கே ஆட்சியாளர்களின் உதவியும் ஒத்தாசையும் கிடைத்து வந்தது.

யாழ் நகர்த் தேர்தலில் மீண்டும் நாசகாரச் சதிக் கூட்டம் தலை காட்டுகிறது. நல்ல பாடம் புகட்ட வேண்டியது வாக்காளர்களின் கையில்.

மக்கள் வரிப்பணத்தை மண்ணாக்கியவர்களை மீண்டும் தேர்ந்தனுப்புதல் நன்றா?

நூற்றுக்கு நூறுவீதம் தமிழ் பேசும் மக்கள் வதியும் நகரிலே தமிழில் நிர்வாகம் நடத்த முடியாது தடை செய்தவர்களை மீண்டும் நாட்டுப் பணிக்கு அனுப்பிவைக்கலாமா?

சிறுபான்மை மக்களின் மேன்மைக்குப் பாடுபடுபவர்களுக்குத் தீங்கு புரிபவர்களுக்கு மேலும் வாக்கைக் கொடுக்கலாமா?

உரிமைப் போரில் உயிர் கொடுக்கவும் தயாரெனவீர சபதமேற்று போர்க்களம் புறப்படும் இவ்வேளையில், ஆட்சியில் நம்மொழியை உதைத்தெறியும் மந்திரிகளை வரவேற்று மாலையிட்டு, மண்டியிட்டு, மானத்தை விலைகூறும் மனப்பாங்குடையோர் மீண்டும் அரியாசனத்தில் அமர வழிவகுக்கலாமா?

அன்னை மொழியை அரியாசனமேற்ற, அறப்போர் புரியும் தலை

(9-ம் பக்கம் பார்க்க)

> வாயிற்கதவு கதவு தட்டும் ஓசை கேட்கிறது. வாக்குத் தேடி வலை வீசும் வேட்பாளர் வந்திருக்கிறார். நகருக்கு நன்மை செய்யப் புறப்பட்டு, சுயநலப் பணியிலிறங்கி நகரின் தரத்தை தரை மட்டமாக்கியவர்கள் — இலட்சக் கணக்காக மக்களின் வரிப்பணத்தை வரை முறையில்லாமல் வாரியிறைத்து வளம் சிதைத்தவர்கள்—ஊழல் பிசாசை உயிரூட்டி உலாவ விட்டவர்கள்—தாய் மொழியின் மானத்தை தன் நலத்துக்காக விலை கூறிவிற்றவர்கள்—அறப்போர் வீரர்களை காட்டிக் கொடுத்து, அவர்களுயிரை அபகரிப்பதில் இன்ப போதை கொண்டவர்கள், தன்மானம் விட்டு மாற்றான் தாள் பணிந்து வாழத் தலைப்பட்டவர்கள்— மீண்டும் வாக்குத் தேடி வேட்டையாடப் புறப்பட்டுவிட்டார்கள்.
>
> யாழ் நகரின் நிர்வாகத்தில் மலிந்துள்ள ஊழல்களைப் போக்கடித்து, நகரின் மேன்மைக்கு உழைக்கக் கூடியவர்கள் யார் என்பதை அலசி ஆராய்ந்து வாக்களிக்கும் பொறுப்பு யாழ் நகர் வாக்காளர் பெரு மக்கள் தலையில் சுமத்தப்பட்டுள்ளது.

# சாவகச்சேரியில் பாத யாத்திரை

வடபகுதியில் மக்களின் பேராதரவைப் பெற்று வரும் பாதயாத்திரை ஊர்வலம் தொடர்ந்து சாவகச்சேரித் தொகுதி மக்களின் மகத்தான வரவேற்புக்கிடையில் பவனி வந்தது. தமிழ் வாழ்த்துக் கோஷங்களை வானளாவ எழுப்பியும், தேசிய கீதங்களை உணர்ச்சியுடன் ஒலித்தும், குழுவினர் தெருக்களினூடாகச் சென்று கொண்டேயிருந்தனர். பூரண கும்பங்களை வைத்தும், தலைவர்களுக்கு கைத்தறித் துணிகளை அணிவித்தும், சிற்றுண்டி, குளிர்பானம் வழங்கியும் மக்கள் வரவேற்பு நல்கிய வண்ணமிருந்தனர். சாவகச்சேரித் தொகுதியே விழாக் கோலம்பூண்டு பாத யாத்திரைக்கு ஆதரவை நல்கியது.

7-11-63 வியாழக்கிழமை கைதடி வடக்கு சுப்பிரமணியம் கோவிலடியிலுள்ள கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்திலிருந்து புறப்பட்ட யாத்திரைக் குழுவினர் கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தில் நடந்த வரவேற்பை ஏற்றுக்கொண்டு, நாவற்குழி கிராம சங்கக் கட்டிடத்தை அடைந்தனர். இங்கு ஊர் மக்களால் காலை உணவு வழங்கப்பட்டது. கைதடிச் சந்தியிலும் ஊர் பொதுமக்கள் பாதயாத்திரைத் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் மகத்தான வரவேற்பளித்தனர். கைதடி தெற்கு இளைஞர் முன்னேற்ற மன்றவாசகசாலையிலும் ஓர் வரவேற்புக் கொடுக்கப்பட்டது. நாவற்குழி கிழக்கில் தொண்டர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

மாலையில் புறப்பட்ட பாத யாத்திரை ஊர்வலம் நாவற்குழிக் கிராமத்தின் தெருக்களுக்கூடாக அர்ச். அந்தோனியார் கோவிலை அடைந்தது. அங்கும் ஒரு பொதுக் கூட்டம் நொத்தாரிஸ் திரு. சிவசுப்பிரமணியம் (கி.ச. தலைவர்) தலைமையில் நடைபெற்றது. கிராம சங்க மண்டபத்திலேயே, இரவு உணவும்வழங்கப்பட்டது.

அடுத்தநாள் 8ம் திகதி காலை புறப்பட்ட ஊர்வலம் இரு நிமிட மௌனப் பிரார்த்தனையுடன் ஆரம்பமாகியது. தச்சன் தோப்பில் காலை உணவை முடித்துக்கொண்டு தொண்டர்கள் புறப்பட்டனர். மதிய உணவு கிராம மக்களின் சார்பில் திரு. பீதாம்பரம் அவர்கள் வீட்டில் வழங்கப்பட்டது. மாலை 4-30 மணிக்குப் புறப்பட்ட ஊர்வலம், பல கிராமத் தெருக்களுக்கூடாகச் சென்று நுணுவில் குளத்தம்மன் கோவிலை அடைந்தது. இங்கு பொதுக்கூட்டம் திரு. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. செல்வராசா பரராசசிங்கம் குழுவினர் இன்னிசை விருந்தளித்தனர். மட்டுவில் தெற்கு, நுணுவில் சுருட்டுத் தொழிலாளர்களுடன், வர்த்தகர்களும், வாலிப சங்கத்தாரும் சேர்ந்து இரவு உணவு வழங்கினார்கள். கூட்டம்

(9-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மலைநாட்டுப் பெண்கள் நாட்டின் கண்கள்

## இழந்த உரிமை பெற கழகத்தில் சேர்ந்து போராடுவோம்

எம். எஸ். டி. சதாசிவம்
கொட்டக்கலை

**பெண்களை இந்நாட்டின் கண்கள் என்று கூறினால், அது பட்டணத்திலே பவிசாக வாழும் பெண்களை அல்ல! பசிக்காக உடலை விற்றுப் பணத்தை பெறுபவர்களை அல்ல! பகட்டான உடையணிந்து பளபளப்பான சேலை கட்டி சொகுசாக வாழும் பெண்களையும் அல்ல! கடமையே பெரிதென உழைத்து உழைத்து உருமாறும்படியாக வேலை செய்யும் மலைநாட்டுத் தொழிலாளி பெண்களே, இந்நாட்டின் கண்கள்!**

காலையிலே எழுந்து காலைக் கடன்களை—முடித்து விட்டு பாத்திரங்களைச் சுத்தப் படுத்திவிட்டு — கணவனை தட்டி எழுப்பி 'பிரட்டுக்குப் போங்கள்' என்று அன்புடன் உத்தரவிடும் பெண்களே இந்நாட்டின் கண்கள் என்றால் மிகையாகாது.

தலையிலே கூடையிட்டுத் தளிர்களைப் (தேயிலைத் தளிர்களை) பறிக்கப் போகும் போது, மழையையும் கடும் பனியையும் பொருட்படுத் தாமல் கடமையே பெரிதென நினைத்து கடும் காற்றுடன் போரிட்டு, தேயிலைக் கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளியே இந்நாட்டை வாழ வைப்பவள்.

தோட்டங்களில் தேயிலை நிரையில் வரிசை கிரமமாக நின்று, "மொட்டை பிடுங்க வேண்டாம், முற்றிய இலைகளைப் பறிக்க வேண்டாம் அப்படி எடுக்கப் படுவோர்களுக்கு பெயர் போட முடியாது" என்று நா கூசாமல் பேசும் கண்காணிப்பவர் (கங்காணி) சொல்லும் கடூரமான வார்த்தையையும் சகித்துக் கொண்டு இந்நாட்டின் பொருளாதார வளத்தைப் பெருக்குபவர்கள் தோட்டப் பெண் தொழிலாளரே என்பதை யாரும் மறைக்க முடியாது.

இது மட்டுமா? அடி எடுத்து வைத்தால் அட்டைகளின் தொல்லை, கவனக் குறைவாக இருந்தால் தேயிலையில் இருக்கும் பாம்பின் தொல்லை! தொல்லை மட்டும் அல்ல, உயிருக்கே ஆபத்து! இப்படி இருக்கும் மலைநாட்டிலே வாயோடுவாய் பேசின் கண்ணோடு கண் நோக்கின் கரங்கள் தன் கடமையை — செய்யத்தவருமல் — செய்து கொடுக்கும் தொழிலாளி. கொழுந்து பறிக்கும் பெண் தொழிலாளியே. இந்நாட்டின் பொருளாதாரமாக இருக்கும் தேயிலைத் தூள் மலைநாட்டான் என்று அழைக்கப்படும் தொழிலாளி கையிலேயே உள்ளது.

இப்படி உழைத்து உழைத்து உருமாறிய பெண் தொழிலாளிகளின் பிள்ளைகளுக்கு கல்வி வசதி இல்லை, சுகாதார வசதி இல்லை, படுக்க வீடு வசதி இல்லை ஏன்? ஏன்? இவ்வளவுக்கும் காரணம் யார்?

நாமும், நம் பிள்ளைகளும் வசதியுடன் வாழ்ந்தால் போதும் என்று எண்ணி இருக்கும் சில சுயநலக்காரர்கள் இருக்கும் வரைக்கும் நமது தொல்லைகள் நீங்குவது இல்லை!

# மலைநாடு

மலைநாட்டிலே வாழும் பிள்ளைகளைப் பராமரிக்க — வேலைக்குச் சென்ற பின் பிள்ளைமடுவம் என்ற பெயரில் செய்து கொடுத்திருக்கும் மடுவம், உண்மையில் பிள்ளை மடுவம் அல்ல. சாக்கடையிலே இருக்கும் சோற்றுக்கு நாய்கள் கடித்துக் கொண்டு ஒன்றின் பின்னால் ஒன்று ஓடுகிறதே அது போலத்தான் இருக்கிறது.

நமது பிள்ளைகளைப் பராமரிக்கும் பிள்ளை மடுவம். அய்யோ! இதை நினைத்தால் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

"தொழிற் சங்கங்கள்" என்று மாதம் தவறினாலும் சந்தா தவறாமல் செலுத்தி வந்தோமே? அவைகள் இதுவரை என்ன நன்மைகளைச் செய்து கொடுத்தன. சந்தாப் பணத்தால் சதையை வளர்த்தார்களே தவிர, தொழிலாளி துயர்களைத் துடைத்திருப்பார்களா?

காந்தி காட்டிய வழி என்று கதர்ச் சட்டையும், கதர்த்தொப்பியும் அணிந்து நானும் தொழிலாளர் தலைவன் என்று வாய் கூசாமல் பேசித் திரிகிறார்கள்.

தொழிலாளிப் பெண்களுக்கு ஆறு மணி வேலை வேண்டும் என கடந்த இரண்டு மூன்று வருடங்களாக பேசுகிறார்கள். ஆனால் அதனை நிறைவேற்றிக் கொடுப்பவர்கள் தானில்லை.

தொழிலாளி மக்களே ஏமாந்தது போதும் — இனியும் ஏமாந்து போகாமல் இழந்த உரிமைகளைப் பெற காலதாமதமின்றி இ. தொ. கழகத்தில் சேர்ந்து போராடுவோம்.

### உதவுக!

இ. தொ. கழக தலவாக் கொல்லை மாவட்டப் பிரதிநிதி திரு. கலியபெருமாள் தோட்டத் தொழிலாளர்களுக்கு விடுத்துள்ள ஒரு வேண்டுகோள்:-

தலவாக்கொல்லை பெரிய மட்டுக்கொல்லைத் தோட்டத்தில் நமது கழகத்தைச் சேர்ந்த 450 தொழிலாளர்கள் கடந்த 25-10-63 முதல் வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். பிரச்சினைக்குத் தீர்வு காணும் வரைக்கும் தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்வதெனக் கழகம் முடிவு செய்துவிட்டது.

இந்த வேலைநிறுத்தம் சம்பந்தமாக 3-11-63ம் திகதியில் எமது அலுவலகத்தில் நடைபெற்ற தோட்ட சபா தலைவர்களின் கூட்டத்தில் வேலை நிறுத்தம் செய்து வரும் தொழிலாளர்களுக்கு அரிசியும் பணமும் வசூல் செய்து உதவுவதென முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

ஆகவே தாங்கள் முயற்சி எடுத்து எதிரே வரும் சனிக்கிழமை எங்களுக்குக் கிடைக்கும்படி அரிசி வசூல் செய்து அனுப்பி வையுங்கள். அதோடு சம்பளம் போடப்பட்டதும் இயன்றளவு பணம் வசூலித்து "இலங்கைத் தொழிலாளர் கழகம், 1-7, 1/8, திம்புல வீதி, அட்டன் என்ற விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்.

தமிழரசாரின்

# புதிய அரசியல் கொள்கை

## சிங்கள ஊழியர்கள் மீது பழி சுமத்துவதில் தீவிரம்

## 'சந்திரகுப்த' குற்றச்சாட்டு

**"லங்கா திப்ப" பத்திரிகையில் அரசியற் குறிப்புக்கள் எழுதும் "சந்திரகுப்த" நவம்பர் 9ந் திகதி எழுதியுள்ள அரசியற் குறிப்பில் வடக்கே அனுப்பப்படும் ஒவ்வொரு சிங்கள அரசாங்க ஊழியருக்கும் எதிராக அபாண்டமான குற்றச்சாட்டுகளைச் சுமத்துதல் தமிழரசுக் கட்சியின் புதிய அரசியல் கொள்கையாகியுள்ளது" என்று கூறுகிறார்.**

"சந்திரகுப்த" மேலும் குறிப்பிடுவதாவது:

"வடக்கே நிறுத்தப் பட்டுள்ள இராணுவத்தைப் பற்றித் துரும்பைத் தூணுக்கும் தமிழ் எம்.பி.கள் அங்கே பெண்கள் பீதி கொண்டிருப்பதாகக் கடந்த செவ்வாய்க் கிழமைப் பாராளுமன்றத்தில் கூறினர். ஒரு பட்டாளக்காரன் ஒரு பெண்ணைத் துன்புறுத்தியிருந்தால் அத்தகைய புகாரைப் பாராளுமன்றத்தின் முன் வைப்பதில் அர்த்தமுண்டு. அம்மாதிரியான எதுவும் நடைபெறாதிருந்து, இராணுவத்தினர் கிராமங்களில் தங்கியிருக்கிறார்கள் என்ற காரணத்துக்காக எதிர்ப்புத் தெரிவிப்பது வட இலங்கை அரசியல்வாதிகளின் பழக்கமாயின், தெற்கே பெரும்பான்மை இனத்தவரின் கிராமங்களில் வசிக்கும் தமிழ் மக்களால் ஏற்படக் கூடிய இன்னல்கள் அவர்களின் கண்ணில் படாதிருப்பது வியப்பாகும்.

நாரளை எம். பி. யின் தீர்மானத்தின்படி தோட்டங்களில் 5% விகிதம் காணிகளைச் சுவீகரித்துச் சிங்களக் கிராமங்களை நிறுவ வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி 'லங்காதீப்ப' இம்மாதம் 8ந் திகதி இதழில் தலையங்கம் தீட்டியுள்ளது.

### சிங்கள இதழ்களில் . . .

இந்தத் தலையங்கம் கூறுவதாவது:

தோட்டப் பகுதிகளில் இவ்வாறு புதிதாகக் கிராமங்களை நிறுவி இலங்கையர்களை (சிங்களவர்களை)க் குடியேற்றுவது அரசியல் ரீதியாகவும் பெரிதும் பயன்படும். மலைநாட்டுத் தோட்டங்களில் வசிக்கும் இந்தியத் தொழிலாளர்களிடையே பிரஜாவுரிமைபெற்றவர்களும் பெருதவர்களும் இருக்கின்றனர். இலங்கைப் பிரஜாவுரிமை பெற்றுள்ள இந்தியத் தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமையும் உண்டு. மலை நாட்டில் சில தொகுதிகளில் அவர்களின் பலம் அதிகரித்துள்ள விஷயம் அம்பலமாகியுள்ளது. அவர்கள் நாட்டை இரு கூறுகப் பிளவுபடுத்த முயற்சி செய்யும் பெடரல் அரசியல்வாதிகளுடன் ஒன்றுசேர்ந்துள்ளனர். தோட்டத் தொழிலாளரின் வாக்குகள் அதிகமாயுள்ள தொகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்படும் பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஒன்று தமிழ் சமஷ்டிவாதிகளா யிருப்பர்- இல்லையேல் அவர்களுடன் சேர்ந்து நிற்பவர்களாயிருப்பர் என்பது திண்ணம். இம்மாதிரி சமஷ்டிவாதிகளின் பலம் அதிகரிக்கும் போது நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை ஏற்படுவதற்குக் குந்தகம் விளையும். தமிழ் தோட்டத் தொழிலாளர் மத்தியில் மலைநாட்டுக் கிராமவாசிகள் சிறுபான்மையோராக வசிக்க அனுமதித்தல் அநியாயமாகும். தோட்டங்களில் ஜன உற்பத்தி மிக வேகமாகக் கூடிக் கொண்டு போவதால், இது இப்பொழுது கடுமையான தேசியப் பிரச்சினையாகியுள்ளது. இப்பிரச்சினையைத் [illegible] தொழிலாளர்களை இடம் பெயர்த்து

(13-ம் பக்கம் பார்க்க)

எழிலின் இருப்பிடம்
லதா!!
லதா மணிப்புரி சாரி என்று கேட்டு வாங்குங்கள்



லதா
மணிப்புரி
சாரிகள்;

முற்றிலும் புதிய பிளேன்; அன் ஷொட் நிறங்களில்; அழகிய தங்க நூலினாலான கிழைத்தேய டிசைன்களாலும் 3" போடர் நெடுகிலும் தங்க நூலால் இழைக்கப்பட்ட டிசைன்களாலும் அலங்கரிக்கப் பட்டுள்ளன.

45" X 6 யார்

சாரிகளுக்கேற்ற பிளவுஸ் புடவைத் துண்டுகளும் உண்டு.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணி வரை இலங்கை வானொலி வர்த்தக ஒலி பரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

எலைட் சுப்பர்லோன்
வியாபாரிகள் எல்லோரிடமும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:-
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
மொத்த விற்பனைப் பகுதி: 26, கெய்ஸர் வீதி,
சில்லறை விற்பனைப் பகுதி: 110&114, மெயின் வீதி,
கொழும்பு.
—Mylads

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொம்யூனிஸ்டுக் கட்சி சக்தி இழந்த இயக்கமாகி விட்டது

## அடுத்த போராட்டம் தொழிற் சங்க மத்தியில்

### மார்க்சிசம் உதிர்ந்த சருகாகிவிட்டது

(சென்ற இதழ்த்தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் இலங்கையில் விசுவரூபம் எடுத்து இலங்கைக் கொம்யூனிஸ்டுக் கட்சியையும் ஏனைய மார்க்சிய தத்துவத்தின் அடிப்படையில் இயங்கும் கட்சிகளையும் பிளவுபடுத்தியுள்ளது. ஏனைய மார்க்சிய கட்சிகளுக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவு வெளியில் தெரியாத பொழுதிலும் கொம்யூனிஸ்டுக் கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவு சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துவிட்டது.

#### சீனக் கோஷ்டி

இலங்கை கொம்யூனிஸ்டுக் கட்சியின் ஆதிக்கத்தில் உள்ள இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தின் பொதுச் செயலாளருக்கும், முன்னைய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் கொம்யூனிஸ்டுக் கட்சி கல்தா கொடுத்துள்ளது. இவர்கள் இருவரையும், இவர்களைச் சார்ந்த சிலரையும் சீன ஆதரவாளர்கள் என்று குற்றச்சாட்டின் மீதே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவர்களின் எதிர்கால அரசியல் நிலை என்ன என்ற கேள்வி இன்று அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அடுத்து இருக்கக்கூடிய மார்க்சிய கட்சியும் நாலாவது அகிலத்தின் தலைமையை ஏற்றுக் கொண்டதுமான லங்கா சமசமாஜக் கட்சியின் கதவுகள் இவர்களுக்காகத் திறக்கப்படுமா? அல்லது இவர்கள் ஒரு அரசியல் கட்சியை ஆரம்பிப்பார்களா? இந்த இரு மார்க்கங்களையும் விட வேறு புதிய பாதை ஏதாவது உண்டா? என்பது போன்ற கேள்விகள் அரசியல் வட்டாரத்தில் பிரபலியம் பெற்றுள்ளன.

**பூங்குன்றன்**

சமசமாஜக் கட்சியின் கதவுகள் இவர்களின் வரவுக்காகத் திறக்கப்படமாட்டா. ரஷ்ய தலைமைப் பீடத்தை சமசமாஜிஸ்டுகள் ஏற்காதவர்களாகவும், சீனுவின்பால் சார்புடையவர்களாக இருந்த போதிலும், சீனக் கோஷ்டியினருக்கும் சமசமாஜிஸ்டுகளுக்கும் இடையில் அடிப்படைத் தத்துவ முரண்பாடு உண்டு.

#### புதிய கட்சி சாத்தியமல்ல

புதிய கட்சியை சீனக் கோஷ்டியினர் ஆரம்பிப்பார்களா என்றால்... இல்லை. அப்படி ஒரு புதிய கட்சி உருவாகும் போது, அது பொது மக்களின் ஆதரவைப் பெற முடியாது. சீனக் கோஷ்டியில் உள்ளவர்கள் அனைவரும் தொழிற்சங்கப் பிரமுகர்களாக இருந்தவர்களே. அரசியல் கட்சிக்கு ஏற்ற சக்திவாய்ந்த தலைமை இவர்களிடம் இல்லை. எனவே புதிய அரசியல் கட்சி உருவாகக்கூடிய சாத்தியக் கூறு எதுவும் இல்லை. அப்படி உருவானாலும் அது சக்தி வாய்ந்ததாக இருக்க முடியாது.

இன்று சீனக் கோஷ்டியினர் முன் உள்ள ஒரேவழி, பலமுள்ள தொழிற் சங்கம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபடுவதேயாகும்.


#### தொழிற்சங்கப் போராட்டம்

நேற்றுவரை கொம்யூனிஸ்டுக் கட்சிக்குள் கோஷ்டிச் சண்டை நடைபெற்று வந்தது. இன்று முதல் இலங்கைத் தொழிற் சங்க சம்மேளனத்தில் கோஷ்டிச் சண்டை உருவாகியுள்ளது. கட்சிச் சண்டைக்குள் ரஷ்ய கோஷ்டிக்கு வெற்றி. தொழிற் சங்க சம்மேளனத்தைப் பொறுத்தவரையில் சம்மேளனம் சின்னாபின்னமாகும். ஆனால் சீனக் கோஷ்டி வெற்றி பெறும். எனவே இலங்கை கொம்யூனிஸ்டுக் கட்சி வருங்காலத்தில் சக்தி இழந்த ஒரு இயக்கமாகவே இருக்கும்.

#### சமசமாஜிஸ்டுகள் நிலை

இந்தத் 'தத்துவப் போர்' ஏனைய மார்க்சியக் கட்சிகள் மத்தியில் குறிப்பிடக் கூடியளவு பிளவை உருவாக்கத் தவறினாலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியே உள்ளது. இலங்கை சமசமாஜக் கட்சியைப் பொறுத்த வரையில் தீவிரவாதிகளான எட்மண்ட் சமரக்கொடி கோஷ்டியினர் தங்கள் தீவிரப்போக்கில் தளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர். அதே போன்று மிதவாதக் கோஷ்டியினரும் தங்கள் பாதையில் சிறு மாற்றத்தை ஏற்படுத்தி ஒரு நடுப்போக்கு நிலை சமசமாஜக் கட்சியில் ஏற்பட்டுள்ளது.

மேலும் சமசமாஜக் கட்சியினரைப் பொறுத்த வரையில், கட்சியின் மத்தியில் இருக்கக் கூடிய தீவிரவாதக் கோஷ்டியினரான சிறுபான்மையினரையும் வெளியேற்றத் தயங்குகிறார்கள். தீவிரவாதிகளும் வெளியேறத் தயங்குகிறார்கள். காரணம் சமசமாஜிஸ்டுகள் மத்தியில் பதவி மோகம் தலை மட்டத்திற்கு வந்துவிட்டது. புரட்சி புரட்சி என்று கூவிக்களைத்து விட்டார்கள். வேட்டுமுறையில் ஆட்சியைக் கைப்பற்றுவது பகற்கனவு என்பதைத் துலாம்பரமாகத் தெரிந்து கொண்டார்கள். எனவே ஓட்டு முறையில் அரசைக் கைப்பற்ற வேண்டுமென்ற ஆசை, அவர்கள் மத்தியில் இருக்கக் கூடிய பிளவை ஓரளவு மறைத்து வைத்திருக்கிறது.




ராஜபீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்

ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றேதான்

புகைத்து பலனடையுங்கள்

ராஜாபீடி கம்பனி
கொழும்பு-14.

## இசை அரங்கேற்றம்

சங்கீத பூஷணம் பொன்னுலை கு. கணபதிப்பிள்ளை அவர்களின் முதலாவது கொழும்பு இசை அரங்கேற்றம் கப்பித்தாவத்தை பிள்ளையார் கோவிலில் நடைபெற்றது. இரண்டரை மணி நேரத்திற்கு மேலாக நடைபெற்ற இக்கச்சேரிக்கு இசையுலகில் ஈடுபாடுடைய பல பிரமுகர்கள் பிரசன்னமாயிருந்தனர். கச்சேரி ஆரம்பத்திலேயே மிகவும் எடுப்பாக இருந்தது. "ஹம்ஸத்வணி" ராகத்தில், 'அகர முதல எழுத்தெல்லாம்......' என்று தொடங்கும் திருக்குறள் அடிகளால் அமைந்த கீர்த்தனையைப் பாடி முடித்ததும் சபையில் எழுந்த கரகோஷம், இவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை எடுத்துக் காட்டியது.

அரங்கேற்ற வைபவம் திறமையாக நடைபெற்றதைப் பாராட்டு முகமாக, கொழும்பு தொண்டர் வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் வெள்ளவத்தை பால செல்வ விநாயகர் ஆலயத்தில் பாராட்டு நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. விநாயகர் ஆலயப் பிரதம குருக்கள் திரு. சுப்பிரமணியக் குருக்கள் கணபதிப்பிள்ளை அவர்களுக்குப்பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார். திரு. சண்முகரத்தின சர்மா அவர்கள் பொற்கிழி வழங்கினார்.

நல்ல சரீரமும் சாரீர வசதியும் பெற்ற திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் அண்ணமலைப்பல்கலைக் கழகத்தில் நான்கு வருடங்கள் பயின்று முதல் வகுப்பில் சங்கீத பூஷணப் பட்டம் பெற்றவர். இசையாசு எம். எம். தண்டபாணி தேசிகரின் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. கணபதிப்பிள்ளை அவர்களின் குடும்பம் நீண்ட காலமாகக் கலை, இசை, உலகத் தொடர்பு உடையது.

#### மக்கள் ஐக்கிய முன்னணி

பிலிப் குணவர்த்தனவின் மக்கள் ஐக்கிய முன்னணியைப் பொறுத்தவரையில் இவர்கள் மார்க்சிசவாதிகள் என்று தங்களை முத்திரை குத்திக் கொண்ட பொழுதிலும் அவர்களிடத்தில் எத்தகைய கொள்கையோ இலட்சியமோ கிடையாது என்றும் உள்ளது போன்று மூன்று கோஷ்டிகள் அவர்கள் மத்தியில் இருந்து வருகின்றன.

#### சுதந்திரன் கூற்று

கொம்யூனிஸ்டுக் கட்சி சீனக் கோஷ்டியினரை வெளியேற்றும் கைங்கரியத்தை சுயமாகச் சிந்தித்து முடிவு செய்தது என்று யாரும் கூறிவிட முடியாது. கொம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் இந்த முடிவை ரஷ்யாவின் உத்தரவின் பேரிலேயே எடுத்துள்ளார். கொம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் சீனக் கோஷ்டியின் நிலைபற்றி ரஷ்யாவின் கட்டளை பெற்றுவர சென்றுள்ள செய்தியைச் 'சுதந்திரன்' 14—7—63ல் வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

#### ஏனைய நாடுகளில் கொம்யூனிஸ்டுகள் நிலை

ஏனைய நாடுகளில் உள்ள கொம்யூனிஸ்டுக் கட்சிகள் மத்தியிலும் இத்தகைய பிளவு ஏற்பட்டுள்ளது. மாஸ்கோவில் சமீபத்தில் நடைபெற்ற கொம்யூனிஸ்டுகள் மாநாடு ரஷ்யாவின் கையை உலக அரங்கில் ஓரளவு பலப்படுத்தியுள்ளது. இதர நாடுகளிலும் கொம்யூ

(13-ம் பக்கம் பார்க்க)

## சந்தியில்....

அம்மானுக்குக் கிடைக்கும் செய்திகள் யாவும் ஆழ்ந்து பரிசீலிக்கப்பட்ட பின்னர்தான் 'சந்தி'யில் இடம் பெறும். 'சுதந்திரன்' ஒற்று நிருபர்கள் இதுகால வரை எத்தனையோ அந்தரங்கமான செய்திகளை முதன் முதலாகச் சேகரித்து வாசகர்களுக்குக் கொடுத்துள்ளார்கள். சுதந்திரன் வெளியிட்டுவந்த செய்திகள், குறிப்பிட்ட ஹேஸ்யங்கள் எதுவும் பொய்த்தது கிடையாது. சுதந்திரன் கூற்றுகள் யாவும் மெய்யாகி வருவதை அடிக்கடி வாசகர்களுக்குச் சுட்டிக் காட்டியுள்ளோம்.

* * *

கொம்யூனிச அண்டத்தில் பிளவு ஏற்படப்போவது குறித்து முன்னமேயே சுதந்திரன் கூறியிருந்தது. மட்டக்களப்பிலுள்ள கொம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளும் பலத்த கருத்து மோதல்கள் ஏற்பட்டுள்ளன என்பதற்கும் பல ஆதாரங்கள் அம்மானுக்குக் கிடைத்துள்ளன. அம்மான் மூன்று வாரங்களுக்கு முன்னர் எடுத்துக் கூறிய உண்மைகள் இப்பொழுது பல கொம்யூனிஸ்டுகளின் கண்களைத் துடைத்துள்ளதாகத் தெரிகிறது. எத்தனைதான் 'அவர்கள்' மறுத்தாலும், எம்மிடம் தகுந்த ஆதாரங்கள் இருக்கின்றன. சந்தர்ப்பம் ஏற்படும்போது அவை வெளிவரும்.

அண்மையில் பீட்டர் கெனமன் மட்டக்களப்புக்கு வந்திருந்த போது, கட்சிக் காரியாலயத்தில், சீன ஆதரவுக் கோஷங்களைக் கொண்ட சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. தினசரிகளில் இந்த விடயம் வெளியாகிய போது, இது உண்மைககு மாறான செய்தி என்றும் மறுத்தார்கள். இவற்றைச் சிலர் புகைப்படமும் எடுத்துள்ளார்கள் என்பதை அறிந்த பின்னர் 'அப்பன் குதிருக்குள் இல்லை' என்று தகிடுதத்தம் போடுகிறார்கள்.

* * *

மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் சீனுவுக்கும், சண்முகதாசனுக்கும் கொம்யூனிஸ்டுக் கட்சிக்குள் ஆதரவு அளிக்கும்கூட்டமே பெரும்பான்மையாகவுள்ளது. மட்டக்களப்புக் கல்லடியில் உள்ள கட்சித் தலைவரின் வீட்டில் காரசாரமான விவாதம் ஏற்பட்டதாகவும், திரு. சண்முகதாசனின் விளக்கத்தை அறிந்த பின்னரே தாங்கள் தீர்க்கமான முடிவைக் கூறலாம் என்றும், கண்டிப்பாகப் பீட்டர் கெனமனிடம் கட்சித் தலைவர் கூறிவிட்டாராம். கிளை அலுவலகத்தில் அன்று நடைபெறவிருந்த கூட்டமும், கல்லடியில் நடந்த சச்சரவுகளினால் ஒத்திவைக்கப்பட்டுவிட்டதாம்.

* * *

இரு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பு தொழிற் சங்க சம்மேளனத்தின் கிளைச் செயலாளர், சீனச் சார்புடையதும், ருஷ்யாவைக் கண்டிப்பதுமான சீனப் பிரசுரங்களை வினியோகித்ததற்கும் போதுமான 'சாட்சிகள்' அம்மானிடம் உண்டு. இவற்றையும் மறுக்க முற்பட்டுவிடாதீர்கள்.

—அம்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடுமை நிறைந்த இராணுவ அதிகாரி கொலை செய்யப்பட்டார்

### அரங்கம் 23

அயர்நாட்டிலே உள்நாட்டு யுத்தம் அமளிதுமளியாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. டப்ளினில் ஏமன் டி வேலராவின் தலைமையில் போட்டி அரசாங்கம் ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. அந்த அரசாங்கத்துக்குச் செயலாளராகப் பணி புரிவதற்காகக் குடியரசுவாதிகளின் பிரசார அதிகாரி ஏஸ்கின் சில்டேஸ் வரவழைக்கப்பட்டார். போர் முனைகளில் திரிந்துகொண்டிருந்த சில்டேஸ் டப்ளினை யடைந்தார். 10-11-1922 இரவைத் தனது மைத்துனரான ரெபட் பார்ட்டனின் வீட்டில் கழித்தார்.

விடியற்காலையில் இடைக்கால அரசாங்கத்தின் படைகள் பார்ட்டனின் வீட்டைச் சுற்றி வளைத்தன. தற்பாதுகாப்புக்காகச் சில்டேஸ் தனது கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டார். ஆனால்வீட்டில்பெண்களிருந்ததினால் கைகலப்புஒன்றைச் சில்டேஸ் விரும்பவில்லை. அதனால் சில்டேஸ் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டார்.

## மூதவையில் ஆளவந்தாரின் அடிவருடிகள்

னதாகவே 24-11-1922ல் ஆட்சியினர் சில்டேஸைச் சுட்டுத் தீர்த்தனர்.

ஆங்கிலேயர் ஒருவரைத் தந்தையாகவும் அயர் பெண்மணி ஒருவரைத் தாயாகவும் கொண்ட ஏஸ்கின் சில்டேஸ், ஒரு சிறந்த சிந்தனையாளர். ஈஸ்டர் வாரப் புரட்சிக்குப்பின்னர் குடியரசுவாதியாகமாறிய சில்டேஸ் சின் பீனின் பிரசார நெறியாளராக இருந்தவர். ஆதர் கிரிபித் தலைமையில் பேச்சுவார்த்தைகளுக்காக லண்டனுக்குச் சென்ற குழுவின் செயலாளராகப் பணியாற்றியவர் அவர். பல வீரச் செயல்களைப் புரிந்த சில்டேஸ் அயர்நாட்டவராலேயே சுட்டுக்கொல்லப்பட்

கள் சபையும் பிரபுக்கள் சபையும் அயர் சுதந்திர மாநிலத்தின் யாப்பு முறையை ஏற்றுக்கொண்டன. ஆங்கில மன்னரும் 5-12-1922ல் தனது அங்கீகாரத்தை அளித்தார். அன்றைய தினமே திமதி ஹீலி என்பவரை அயர்நாட்டின் ஆளுநர் நாயகமாக மன்னர்

**'கோமகன்'**
**'மாமல்லன்'**

நியமித்தார். முன்னர் அயர் கட்சியில் உறுப்பினராக இருந்த ஹீலி, பாணலை மனதார வெறுத்தவர்; ஆங்கில ஏகாதிபத்தியத்தை நேசித்தவர்.

ஆங்கிலேயருக்கும் ஆதர் கிரிபித்துக்கும் இடையில் கைச்சாத்தான ஒப்பந்தத்தின்படி அயர் சுதந்திர மாநிலத்தின் அரசாங்கம் 6-12-1922ல் பதவி ஏற்க வேண்டும். அந்த விதிக்கு ஒப்ப, திமதி ஹீலி 6-12-1922 ஆளுநர் நாயகமாகப் பதவி ஏற்றார். பாராளுமன்றத்தைப் பகிஷ்கரியாத உறுப்பினர்கள் அனைவரும் தாம் ஆங்கில மன்னருக்கு விசுவாசமாக இருப்பதாகச் சத்தியம் செய்துகொண்டனர். சத்தியம் செய்ய வேண்டியது பாராளுமன்றத்தில் இருப்பதற்கு நிபந்தனை என்பதனாலேயே தாம் சத்தியம் செய்துகொள்வதாகவும் சந்தர்ப்பம் வரும்

### அரங்கம் 24

பாராளுமன்றம் கூடிய அடுத்த நாள், தெருவழியே சென்றுகொண்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவரை நோக்கிக் குடியரசு இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒருவர் மாண்டார்; மற்றவர் காயமடைந்தார். இந்த இரண்டு உறுப்பினர்களும் இராணுவ நீதிமன்றத்தை ஆதரித்து வாக்களித்தவர்கள்!

தம் கட்சியைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டதைக் கொஸ்கிரேவால் பொறுக்க முடியவில்லை. உடனேயே நான்கு முன்றில்களிலிருந்து சரணகதியடை

கிக்கொண்டே வந்தனர். அரசாங்கத்தினரோ தாம் கைதுசெய்த குடியரசுவாதிகளைச் சுட்டுக்கொன்ற வண்ணமே இருந்தனர். இந்த நிகழ்ச்சிகளைக் கண்ணுற்ற அரசாங்கத்தின் இராணுவத்தினரில் பலர் குடியரசுவாதிகளுடன் போய்ச் சேர முற்பட்டனர். இவர்களில் அநேகர் கைதுசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டனர்.

இவ்வாறனகொலைகளுக்கு மத்தியில் புத்தாண்டு பிறந்தது. சின் பீனின் தலைவர் ஏமன் டி வேலரா சின் பீனைப் புனருத்தாரணம் செய்வதில் மும்முரமாக ஈடுபட்டார். குடியரசுத் தத்துவத்தைப் போதிப்பதற்காக அயர் என்னும் பத்திரிகையைத்தொடக்கி வைத்தார்.

புத்தாண்டு நகர நகர, நாட்டிலே உள்ள கைதிகளின் தொகையும் கூடிக்கொண்டே சென்றது. 300 பெண்கள் உட்பட 12,000 குடியரசுவாதிகள் மார்ச் மாதமளவில் கைதிகளாக இருந்தனர். இவர்கள் அனைவரும் சித்திரவதை செய்யப்பட்டனர். சிறு எதிர்ப்புக் காட்டும் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்தக்

## கொலுவுரை விழா பகிஷ்கரிக்கப்பட்டது

இராணுவ நீதிமன்றத்தில் 17-11-1922ல்இரகசிய விசாரணை ஆரம்பமாகியது. சில்டேஸுக்கு எதிராக இருந்த குற்றச்சாட்டு — கைத்துப்பாக்கி ஒன்றை வைத்திருந்ததுதான்! அதுவும் மைக்கேல் கொலின்ஸினால் சில ஆண்டுகளுக்கு முன்னர் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட கைத்துப்பாக்கியை வைத்திருந்ததுதான். அதுதான் குற்றச்சாட்டாக இருந்தாலும் பொது மக்களிடம் இருந்து அது மறைத்து வைக்கப்பட்டிருந்தது.

விசாரணையின் போது, சில்டேஸ், தான் இடைக்கால அரசாங்கத்தின் நீதிமன்றத்தை மதிப்பதில்லையெனவும், தான் அயர் குடியரசு இராணுவத்தின் அதிகாரி ஒருவராதலால் கைத்துப்பாக்கியொன்றைக்கொண்டு செல்லத் தனக்கு உரிமை உண்டெனவும் முழங்கினார். குடியதிபதி டி வேலரா சில்டேஸ் சார்பில் ஓர் அறிக்கையைப் பத்திரிகைகளுக்குக் கொடுத்தார். ஆனால் அவ்வறிக்கையைப் பிரசுரிக்கப் பத்திரிகைகள் மறுத்துவிட்டன.

சில்டேஸ் குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டார். இந்தத் தண்டனையை எதிர்த்துக் குடியரசு இராணுவம் அப்பீல் செய்தது. இந்த அப்பீலை விசாரணை செய்பவர் ஓர் இராணுவ அதிகாரியாக இருக்கமாட்டாராகையால் நிச்சயமாகத் தண்டனை தள்ளுபடியாகும் என இடைக்கால அரசாங்கத்தினர் நம்பினர். ஆயினும் பத்திரிகையொன்றை நடாத்தி விடுதலை வேட்கையைப் பரப்பும் சில்டேஸை எப்படியாவது கொன்றே விட வேண்டும் என ஆட்சியினர் தீர்மானித்தனர். பத்திரிகைப் பிரசாரத்தின் வலிமையை உணர்ந்தவர்கள் அவர்கள். அதனால் அப்பீல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்

டதைக் கேட்ட பலர் அதிர்ச்சியுற்றனர். ஆனால் அவர்களால் ஆட்சேபனை தெரிவிப்பதைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை. கொஸ்கிரேவ் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது பதவியைத் துறந்தார். முன்னர் உரோமாபுரியில் அயர் குடியரசின் தூதுவராக இருந்தவரும் பேச்சுவார்த்தைக் குழுவில் உறுப்பினராக இருந்தவரும் கொளின்ஸ்மந்திரிசபையில்பதவி

## சிறையை நிறைத்தனர் பெண்கள்

ந்த குடியரசுவாதிகள் நால்வரைச் சுட்டுக்கொல்லும்படி அவர் தனது இராணுவத்துக்கு உத்தரவிட்டார். குடியரசு இராணுவத்தின் பொறியியல்நெறியாளரான ரோறி ஓகொணர், லயம் மொலோவ்ஸ் ஆகியோரும் இன்னும் இருவரும் உடனடியாகச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தக்க தருணத்திற்காகக் காத்திருந்து, வட அயர் நாட்டுப் பாராளுமன்றம் 7-12-1922ல் தென் அயர்

கொடுமைக்கு எதிர்ப்புக் காட்டு முகமாகச் சித்திரவதை செய்யும் இராணுவ அதிகாரியைக் கொல்வதற்குக் குடியரசு இராணுவத்தினர் திட்டம் தீட்டினர். அந்த இராணுவ அதிகாரி செல்லும் வீதியில் ஒரு பொறியொன்றையும் அந்தப்பொறியில்அகழ்ச்சிவெடியொன்றையும் வைத்தனர். அந்தப் பொறியில் அவர் அகப்பட்டதனால் அவரது உடல் துண்டம் துண்டமாகச் சிதறியது.

இந்த நிகழ்ச்சியைக் கண்ட ஆட்சியினர் ஆத்திரமடைந்தனர். 7-3-1923ல் குடியரசுக் கைதிகள் ஒன்பது பேரை அகழ்ச்சிவெடியொன்றைச் சுற்றிப் பிணைத்து நிறுத்து விட்டு வெடியை வெடிப்பித்தனர். எட்டுப் பேரின் உறுப்புகள் துண்டு துண்டாகப் பறந்தன. ஒருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார். அதேபோல் இன்னும் ஐவரை ஆட்சியினர் கொல்ல முற்பட்டபோது நால்வரே மாண்டனர். ஒருவர் தப்பிப்பிழைத்து நடந்த அநியாயத்தை நாட்டுக்கு எடுத்துக் கூறினார். ஒவ்வொரு தடவையும் ஒருவர் தப்புவதை ஆட்சியினர் விரும்பவில்லை. அதனால் பலத்த பாதுகாப்புடன் மீண்டும் ஐந்து குடியரசுக் கைதிகளை அழைத்துச் சென்று சுட்டுக் கொன்றனர். அதன் பின் தங்கள் ஆத்திரம் தீருவதற்காக ஐந்து சவங்களையும் அகழ்ச்சி வெடியின் மேல்போட்டுத் துண்டு துண்டாக்கினர். ஆனால் அந்த முயற்சிக்குப் பொறுப்பாக இருந்த இராணுவத் தளபதி தனது பதவியைத் துறந்து உண்மைக் கதையை உலகிற்கு எடுத்துக் கூறினார்.




வகித்தவரும் அயர் குடியரசால் அமைக்கப்பட்ட மேல் நீதி மன்றம் கலைக்கப்பட்டதை ஆட்சேபித்துப் பதவித் துறவு செய்தவருமான ஜோர்ஜ் கவன் டபி மிகுந்த ஆவேசத்துடன் தனது ஆட்சேபனையைத் தெரிவித்தார்.

சில்டேஸைச் சுட்டது போல் கொஸ்கிரேவின் அரசாங்கம் குடியரசுவாதிகளைத் தொடர்ந்து ஈனஇரக்கமின்றிச் சுட்டுத் தள்ளுமானால் இராணுவ நீதிமன்றங்களை அமைப்பதற்கான பிரேரணையை ஆதரித்து வாக்களித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் சுட்டுக் கொல்ல அயர் குடியரசு இராணுவம் பின்னிற்காது எனக் குடியரசு இராணுவம 27-11-1922ல் ஆட்சியாளரை எச்சரித்தது.

அயர்நாட்டிலே நிலைமை குழப்பமாக இருந்த இந்த வேளையில் பிரித்தானிய மக்

பொழுது தாம் மக்களுடன் சேர்ந்து அந்த நிபந்தனையை அகற்றுவது திண்ணம் என்றும் தொழிற்கட்சித் தலைவர் ஓர் அறிக்கையை விட்ட பின்னரே தொழிற் கட்சியினர் சத்தியம் செய்துகொண்டனர்.

சத்தியம் செய்து கொள்ளும் நிகழ்ச்சியை யடுத்து அரசாங்கம் அமைக்கப்பட்டது. கொஸ்கிரேவின் தலைமையிலுள்ள இடைக்கால அரசாங்கமே ஒரு சில மாற்றங்களுடன் அரசாங்கமாகப் பதவியேற்றது. கொஸ்கிரேவ் அரசாங்க வாரியத்தின் தலைவரானார். அரசாங்கம் அமைப்பதையடுத்து மூதவை உறுப்பினர்களின் தேர்வு நடைபெற்றது. ஆங்கில ஏகாதிபத்தியத்தின் கால் வருடிகளாக இருந்தவர்கள் பலரே மூதவை உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

நாட்டவரின் ஆட்சி எந்த விதத்திலும் தம்மைப் பாதிக்காவண்ணம் ஆங்கில மன்னர் பார்த்துக் கொள்ள வேண்டும் என ஒரு விண்ணப்பம் அனுப்பியது. ஒப்பந்தத்தால் அயர்நாடு நிரந்தரமாகப் பிளவுபட்டு விட்டது என்பதற்கு இந்த விண்ணப்பமே போதுமானது. இந்தப் பிரிவினை இடம் பெறுமலிருப்பதற்காகத்தான் தான் அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதாக ஆதர் கிரிபித் தம்பட்டமடித்ததெல்லாம் அர்த்தமற்றதாகிவிட்டது.

தென் அயர்நாட்டின் பாராளுமன்றம் மீண்டும் 12-12-1922ல் கூடியது. ஆளுநர் நாயகம் கொலுவுரையை வாசித்தார். ஆளுநர் நாயகத்திற்குத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் நோக்கத்துடன் தொழிற் கட்சியினர் கொலுவுரையைப் பகிஷ்கரித்தனர்.

தீவின் தெற்குப் பகுதியில் உள்நாட்டு யுத்தம் கடுமையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. குடியரசுவாதிகள் பாலங்களையும் இருப்புப் பாதைகளையும் நாசமாக்

இவ்வாறாக அயர்நாட்டவரே அயர்நாட்டு அரசாங்கத்தால் துண்டம் துண்டமாக்கப்படுவதையும் சுட்டுக் கொலைசெய்யப்படுவதையும் உரோமாபுரியிலிருந்த பாப்பரசர் கேள்விப்பட்டார். குடியரசுவாதிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் சமரசம் ஏற்படுத்துவதற்காக ஒரு தூதுவரை அனுப்பி வைத்தார். பாப்பரசரின் தூதுவரான மொண்சிஞோர் லூசியோ 21-3-1923ல் அயர் நாட்டை வந்தடைந்தார்.

(வளரும்)

விடுதலைத் தத்துவத்தை உணர்த்த புதிய பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1963 நவம்பர் மாதம் 17-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183


## கடமையைச் செய்க!

திருகோணமலை இடைத் தேர்தல் இம்மாதம் 23ந் திகதி நடைபெறுகிறது. இத்தேர்தலில் திருமலை மக்களின் தீர்ப்பு மிக முக்கியமானது. திருமலைத் தீர்ப்பை இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர். அவர்களின் உரிமைகளைக் கபளீகரம் செய்துவரும் சிங்கள ஆட்சியாளர் திருமலை முடிவு இம்முறை தலைகீழாக மாறிவிடாதா என்று நப்பாசை கொண்டுள்ளனர்.

ஈழத் தமிழகத்தின் நடுநாயகமாக விளங்குமிடம் திருமலை. இன்று திருமலை மாவட்டம் சிங்களவர்களின் நில ஆக்கிரமிப்புக்கு நேரடியாக இலக்காகியுள்ளது: திருமலைக்குப் பல்வேறு துறைகளில் சிங்களவர்களின் நெருக்குதல் அதிகரித்து வருகிறது. திருமலை மண்ணை அபகரிக்கவும், அந்தப் பிரதேசத்தில் சிங்களவர்களின் எண்ணிக்கையைப் பெருக்கவும் சிங்களவர்கள் திட்டமிட்டுப் போராட்டம் நடத்துகின்றனர்.

மூதூர் இரட்டைத் தொகுதியைச் சிங்கள பௌத்தர்களுக்கு ஒரு ஸ்தானம் கிடைக்கக்கூடியதாக இரு தனித் தனி தொகுதிகளாகப் பிரிப்பதற்கும் சதிகள் பல நடைபெறுகின்றன. "சேருவிலத் தொகுதி" என்ற பெயரில் தங்களுக்கெனத் தனித்தொகுதி வேண்டுமென்பது பௌத்தர்களின் கிளர்ச்சி.

திருமலைப் பிரதேசத்திலே ஒவ்வொருநாளும் புதிது புதிதாகச் சிங்களக் குடும்பங்கள் வந்து குடியேறிக் கொண்டிருக்கின்றன. தென்னிலங்கையிலிருந்து 5000 சிங்களக் குடும்பங்களைப் புதிதாகக் கொண்டுவந்து குடியேற்றவும் முயற்சிகள் செய்யப்படுகின்றன.

சிங்களவர் எண்ணிக்கையைப் பெருக்கி, தமிழர்களையும் முஸ்லிம்களையும் சிறுபான்மையோராக்கி, தமிழ்ப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதே சிங்கள ஆட்சியாளரின் திட்டம். திருமலையிலும் இதுதான் நடைபெறுகிறது

இந்தப் பகற்கொள்ளைத் திட்டத்தை அமுல் நடத்தப் பல வழிகளைக் கையாளுகின்றனர். அவற்றிற் சில:- நிலத்தை அபகரித்துச் சிங்களவர்களைக் குடியேற்றுதல், ஏற்கனவே திருமலைப் பகுதியில் குடியேறி கமம் செய்யும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் "கள்ளத் தோணி" எனக் கைதுசெய்து, அங்கிருந்தே அப்புறப்படுத்துதல், எஞ்சிய தமிழர்களும் முஸ்லிம்களும் காணி வாங்குவதைத் தடுக்கச் சட்டம் செய்தல் (நிதி மசோதாவின் 58வது, 59வது சட்ட விதிகள்), அதன்மூலம் அவர்களைச் "சந்தேகப்" பிரஜைகளாக்கி விடுவது என்பவைகளே.

இந்த அக்கிரம நடவடிக்கைகள் இன்று தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இதன் விளைவாக திருமலைப் புனித மண் பறிபோகும் பேரபாயம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றம் இன்று பரவலாக நடைபெறுகிறது. மலைநாட்டுத் தோட்டங்களில் தமிழர்களின் எண்ணிக்கை பெருகி வருவதைக் கண்டு சிங்கள வகுப்புவாதிகள் பீதி கொண்டுள்ளனர். எனவே தோட்டங்களில் ஐந்து சத விகிதம் நிலத்தைச் சுவீகரித்து, சிங்களவர்களைக் குடியேற்றி, தோட்டங்கள் மத்தியில் புதிய சிங்களக் கிராமங்களை நிறுவ தீவிர ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. ஆயினும் திருமலையில்தான் இன்று சிங்களவர்களின் சட்ட விரோதக் குடியேற்றம் பயங்கரமான கட்டத்தை அடைந்துள்ளது.

இதைத் தடுத்து நிறுத்த வேண்டும். இன்றேல் திருமலைச் சீமை பறிபோய்விடும். அத்தோடு தமிழரும் முஸ்லிம்களும் சிறுபான்மையோராகி, அடிமைகளாக வாழ நேரிடும்.

அதைத் தடுப்பதற்கான வழி திருமலை மக்கள் தமிழரசுக் கட்சியின் வேட்பாளரை மீண்டும் தங்களின் ஏகப் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்வதே.

சிங்கள வகுப்புவாதிகள் படிப்படியாக வளர்த்துவந்த தனிச் சிங்கள அரக்கி அடுத்த ஆண்டு தொடக்கம் தமிழ் மொழியை முற்றாக விழுங்கி ஏப்பமிட கங்கணம் கட்டியிருக்கிறாள். மொழி அழிந்தால் இனம் அழியும். அண்மி வரும் இந்த ஆபத்தை எதிர்த்து முறியடிக்கத் தயாராகி விட்டோமென்பதைத் திருமலைத் தமிழ் பேசும் மக்கள் சிங்கள ஆட்சியாளருக்கு இடித்துக் காட்டவேண்டும். தமிழரசுப் பிரதிநிதியை மறுபடியும் பாராளுமன்றத்துக்கு அனுப்புவதின் மூலமே அதைச் செய்யமுடியும்.

தமிழரசுக் கட்சி ஒரு சாதாரண அரசியற் கட்சியன்று. அது ஒரு சுதந்திர இயக்கம். சிங்களமயமாவதிலிருந்து தமிழ்ப் பிரதேசங்களையும், தமிழ் பேசும் மக்களையும், தமிழ்க் கலாசாரம் பண்பாடுகளையும், தமிழ் மொழியையும் விடுவிக்கும் விடுதலை இயக்கம்.

இந்த இயக்கத்தின் மூலமாகவே தமிழர்களும் முஸ்லிம்களும் சுதந்திர மக்களாகத் தலை நிமிர்ந்து தன்மானத்துடன் வாழ முடியும். இவ்வியக்கத்தினின்று திருமலை தமிழ் பேசும் மக்கள் பிரிந்து, தனிவழி யொன்றில் செல்ல முடியாது — செல்லவும் கூடாது. அப்படிச் சென்றால், அது தற்கொலை செய்து கொள்வதைத்தவிர வேறன்று. ஆகவே தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதியாக விளங்கும் தமிழரசு இயக்கத்தின் வேட்பாளரே திருமலை மக்களின் பிரதிநிதியாக இருக்க முடியும்; இருக்கவும் வேண்டும்.

திருமலைத் தேர்தல் போராட்டத்திலே தமிழரசுக் கட்சியை முறியடிக்கச் சிங்களக் கட்சிகள் திட்டமிட்டுச் சதி செய்வதாகச் செய்திகள் கூறுகின்றன. தமிழரசுக் கட்சி தோல்வி கண்டால் திருமலைச் சீமையை ஆக்கிரமிப்பது எளிதல்லவா? அச்சதித் திட்டத்தின் ஒரு பகுதிதான் சிங்களக் கட்சிகள் தேர்தல்களத்திலிருந்து வெற்றிகரமாகப் பின்வாங்கியது. சிங்கள வாக்குகள் சிதறாமல் பாதுகாக்கவே இந்த ஏற்பாடு.

ஆயினும் விஷயம் தெரிந்த நியாய புத்தியுள்ள சிங்களவர்கள் தமிழரசுக் கட்சியையே ஆதரிப்பார்கள் என்பது அவர்களுக்கு கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே கட்சி மீது ஒரு புதிய பாணத்தைத் தொடுத்துள்ளனர்.

"சமஷ்டி நல்ல கொள்கைதான். ஆனால் அந்தக் கொள்கை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடையாது. பிற நாடுகளிலுள்ள சமஷ்டிக் கட்சிகளுக்கும், தமிழரசுக் கட்சிக்கும் மலைக்கும் மடுவுக்குமுள்ள வித்தியாசம் உண்டு. அந்தக் கட்சிகள் சமஷ்டி அரசியல் அமைப்பைக் கோருகின்றன. இந்தக் கட்சியோ நாட்டை இரு கூறுக்கி, தனியாட்சி நிறுவ முயற்சி செய்கிறது" என்ற பிரசாரத்தைத் திருமலைச் சிங்கள வாக்காளரிடையே கட்டவிழ்த்து விட்டுள்ளன சிங்களக் கட்சிகள்.

இத்தகைய பித்தலாட்டப் பிரசாரங்களைக் கொண்டு சிங்கள வாக்குகளைத் திரட்ட முயற்சிகள் நடைபெறுவதால், தமிழ், முஸ்லிம் மக்கள் ஒரே மனிதனைப் போல நிமிர்ந்து நின்று தமிழரசு வேட்பாளருக்குத் தங்களின் முழு ஆதரவையும் அளிக்கவேண்டும். அது அவர்களின் தவிர்க்க முடியாத கடமை.

சுயேச்சைகளுக்கெல்லாம் இனி இலங்கை அரசியலில் இடமில்லை. அந்த அளவுக்கு கட்சி அரசியல் வளர்ந்துள்ளது. தனி மரம் கவைக்குதவாது. சிங்கள மக்களே சுயேச்சைகளை இன்று நம்புவதில்லை.

இன்றைய நிலையில் மக்களின் பேராதரவைப் பெருமளவு பெற்ற அரசியற் கட்சிகள் மட்டுமே எதையும் சாதிக்க முடியும். தனி மனிதனால் என்னதான் செய்ய முடியும்? சுயேச்சையால் செய்யக்கூடிய "தொண்டு" ஒன்றே ஒன்றுதான். தனக்கு வாக்களித்த மக்களை நெருக்கடியான வேளையில் காலைவாரிவிட்டு, ஆட்சியாளருக்கு அடிவருடி, தனது சொந்தத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வதே அந்தத் "தொண்டு".

தமிழரசுக்கட்சியின் வேட்பாளர், திருமலை மக்களின் நலன்களைச்சதா கவனிக்கவேண்டியவர், தமிழ்பேசும்மக்களின் குறைபாடுகளையும், அவர்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களையும் பாராளுமன்றத்தில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டவர். மக்களின் நலவுரிமைகளை முன்னிட்டு எந்தத் தியாகத்துக்கும் தயாராக இருப்பவர். எனவே திருமலை மக்களின் பிரதிநிதியாகத் தகுதியுடையவர் அவர் ஒருவரே.

இனத்தின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு, இத் தேர்தலில் தங்களின் கடமையைச் சரிவர நிறைவேற்றுமாறு திருமலை ஜோதி அமரர் திரு. இராஜவரோதயம் அவர்களின் பெயரால் திருமலை வாக்காளர்களைக் கேட்டுக்கொள்கின்றோம்.

# வட இலங்கையில் ஆசிரமம் அமைக்க ஏற்பாடு

## தமிழரசுத் தந்தையின் மற்றொரு திட்டமும் நிறைவேறுகிறது

ஈழத் தமிழ் பேசும் மக்களின் எதிர்கால வாழ்க்கையை வழமுறச் செய்வதற்கு இன்றைய நிலைமையில், பாரதநாட்டில் அஹிம்சைத் தந்தை மகாத்மா காந்தியடிகள் அமைத்து வெற்றி கண்ட ஆச்சிரம முறையைத் தாமும் அமைத்து வெற்றி காணும் பெருநோக்கோடு ஈழத் தமிழ்ப் பெருமக்கள் ஒருமுகமாகச் சேர்ந்து தமிழ்த் தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் முன்னிலையில் படைத்திருக்கிறார்கள்.

தமிழ்த் தந்தையும் தமது திட்டங்களுள் ஒன்றாக அமைந்திருந்த ஆச்சிரம முறையை நிறுவுவதற்குத் தமிழ்ப் பெருமக்கள் முன்வந்ததையிட்டு தமது பெருமகிழ்வைத் தெரிவித்தார்.

அஹிம்சையின் அடிப்படையில் ஈழத்தில் தோன்றவிருக்கும் ஆச்சிரமமுறையே தமிழ் பேசும் மக்களின் வாழ்க்கை சுபீட்சமடைவதற்கு வழிவகுக்கும் என்றார் தமிழ்த் தந்தை.

தமிழ் பேசும் பெருமக்கள், தமிழ்த் தந்தையின் ஆசி பெற்று அமைக்கவிருக்கும் ஆச்சிரமத்துக்கு தமிழுலகின் கலங்கரை விளக்கமாகத் தோன்றும் தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார் அவர்கள் "மெய்ம்மை சேரில்லம்" என்ற பெயரை சூட்டியிருக்கிறார்.

### 'மெய்ம்மை சேரில்லம்'

அஹிம்சையின் அடிப்படையில் செல்லும் தமிழரசுத் தந்தை, தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் அன்புடன் வரவழைக்கிறார் "மெய்ம்மை சேரில்லம்" என்ற ஆச்சிரமத்துக்கு.

தமிழ் பேசும் மக்கள் அடைந்திருக்கும் அடிமை நிலையில் இருந்து விடுதலை பெற்றுச் சுதந்திரத் தமிழ் பேசும் மக்களாகத் திகழ வேண்டுமானல் எமது நாடு, எம் மொழி எமது உயிர்நாடி, என்ற அடிப்படைக் கொள்கையோடு உடல், உயிர் பொருள் எதையும் பொருட்படுத்தாமல் தொழிற்பட வேண்டும் என்று கூவி அழைக்கிறார் தமிழரசுத் தந்தை.

அடிமை நிலையை உணரக்கூடிய நிலைமையில் ஒவ்வொரு தமிழ்பேசும் மகனும் உணர்ச்சியடைந்து விட்டதாகவும், இந்த உணர்ச்சி உருவெடுத்துத் தொழிற்படுவதற்கு "மெய்ம்மை சேரில்லம்" என்ற ஆச்சிரமத்தை அமைக்கத் தமிழ்ப் பெருமக்கள் ஒன்று சேர்ந்து முன்வந்திருக்கிறார்கள் என்றும், இந்த ஆச்சிரமத்தின் அடிப்படையிலேதான் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து உழைத்துச் சுதந்திரத்தைப் பெற முடியும் என்று உறுதியுடன் கூறினார்.

ஆச்சிரமத்தின் அடிப்படையிலேயே பாரதநாட்டைச் சிறைப்படுத்திய அந்நிய ஆதிக்க வெறியர்களை விரட்டி வீர சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்தார் அஹிம்சைத் தந்தை மகாத்மா காந்தியடிகள். காந்தியடிகளின் கொள்கையாகிய அஹிம்சையின் அடிப்படையில் உண்மையுடன் உழைத்து வீர சுதந்திரத்தை அடைவோமென்று சுதந்திர தாகத்துடன் வெற்றி முரசம் கொட்டுகிறார் தமிழரசுத் தந்தை.

### அறை கூவல்

நெஞ்சில் உரம் கொண்டு நேர்மையான திறத்துடன், வஞ்சனையின்றி வெறுமனே வாயால் பேசுவதை விடுத்து உண்மைத் தொண்டாற்றி வீர சுதந்திரத்தைப் பெற அழைக்கும் தந்தை, மேலும் வேண்டுகோள் சிலவற்றை விடுக்கிறார்:

அநீதிகளைத் தாங்க முடியாமல் அஹிம்சையின் அடிப்படையில் ஆச்சிரமத்தை அமைத்து அதன் மூலம் வெற்றியடைய அமைக்கும் 'மெய்ம்மை சேரில்ல'த்தில் சேர்ந்து தொண்டாற்ற வடக்கு, கிழக்கு, மலைநாடு ஆகிய பிராந்தியங்களிலிருந்து தொண்டர்களை அழைக்கிறோம். மெய்ம்மை சேரில்லத் தொண்டர்கள் அஹிம்சையே கொள்கையாகக் கொண்டு தமது இறுதி மூச்சுள்ளவரை 24 மணித்தியாலமும் இல்லத்திற்காகவே உழைக்க வேண்டுமென்றும், உழைப்பு மெய்மையைக் காணும் வரை தொடர வேண்டும் என்றும் உடல். உயிர் பொருள் எதையும் பொருட்படுத்தாத தியாக சிந்தனையுள்ளவர்களாக முன்வர வேண்டும் என்றும் வேண்டுகிறோம்.

### வேண்டுகோள்

பாரத நாடு சுதந்திரமடைவதற்கு வேண்டிய காணி நிலம் தான் இன்று எம் மெய்ம்மை சேரில்லத்துக்கு முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் எந்தக் கிராமத்திலாவது எமது ஆச்சிரமத்தை அமைப்பதற்கு வாடகையின்றி ஓர் இல்லம் அன்பளிப்புச் செய்யுமாறு தமிழ்ப் பெரியார்களை வேண்டுகிறோம்.

தற்பொழுது நாம் தொடங்க இருக்கும் ஆச்சிரமம் ஆண்களுக்கு ஒன்றாகவும் பெண்களுக்கு வேறொன்றாகவும்அமையும். முதலில் ஆண்களைக் கொண்ட ஆச்சிரமத்தையே அமைக்க எண்ணியுள்ளோம்.

பெண்களுக்கென அமைக்கும் ஆச்சிரமத்துக்கு முன்னின்று தலைமை தாங்கித் தொண்டாற்றக்கூடிய வயது நிறைந்த, ஆற்றல் மிகுந்த தமிழ் அம்மைகளிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகிறோம். "மெய்ம்மை சேரில்லத்"தில் தொண்டாற்ற முன்வரும் ஆண்களும், பெண்களும் மெய்ம்மை காணும்வரை உழைக்கும் உண்மைத் தியாகிகளாக முன்வரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களுடைய பண்புகளிலே தானம் தருமம் ஆகியவை தலையானவை, அன்று தானமும் தருமமும் செய்வதில் தலைசிறந்த புகழைத் தேடிய தமிழ்ப் பெருமக்களின் வழித்தோன்றல்களே!

### அன்றும் இன்றும்

சமத்துவ அடிப்படையில் ஈட்டினீர் அப்பெருமையை. இன்றைய நிலையில் எமது குலப் பெருமை, மொழிப் பெருமை, எமது உரிமை எல்லாவற்றையுமே அநியாயக்காரர்களின் அக்கிரமத்தால் பறிகொடுத்துவிட்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போலீஸ் தடையை மீற அறிஞர் அண்ணா முடிவு

## இந்திப் போராட்டத்தை நசுக்க சென்னை நகரில் தடை உத்தரவு

சென்னை நவ—13

திராவிட முன்னேற்றக் கழகம் நடாத்த விருக்கும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை யொட்டி, சென்னை நகரில் பொலீசார் தடை உத்தரவு பிறப்பித்துள்ளார்கள். தடைச் சட்டத்தை மீறி, இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை முன் குறிப்பிட்ட வண்ணம் 17-ம் திகதி நடத்தியே தீருவது என்று அறிஞர் அண்ணா அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இந்தித் திணிப்பை எதிர்த்து சட்ட எரிப்பு, மறியல் ஆகிய இரு போராட்டங்களை தொடர்ந்து நடாத்துவதற்கு திராவிட முன்னேற்றக கழகம் முடிவு செய்துள்ளது வாசகர்கள் அறிந்ததே.

போராட்டக் குழுவின் முடிவுப்படி 17-ம் திகதி மாலை, சென்னை திருவல்லிக் கேணிக் கடற்கரையில், இந்திய அரசியல் சட்டத்தின் 17-ம் பிரிவை அண்ணா அவர்கள் தீமூட்டி எரிப்பார். அறிஞர் அண்ணா அவர்களுடன் டி. கே. பொன்னுவேலு, டி. எம்.பார்த்தசாரதி, வெங்கா, சுந்தரம் ஆகியோர்களும் இப் போராட்டத்தில் கலந்து கொள்வார்கள்.



அறிஞர் அண்ணா

போராட்டத்தைத்தடுத்து நிறுத்தும் நோக்கத்துடன், சென்னை நகர பொலீஸ் சட்டம் 41-வது பிரிவின் கீழ் 'தடை உத்தரவை' முன் அறிவித்தலின்றி இன்று முதல் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளார்கள். தடை உத்தரவு ஒருமாத காலம் நீடிக்கும் என்று அறியப்படுகிறது. மந்திரிகள் கலந்து கொள்ளும் கூட்டங்களைப் பாதிக்காத வண்ணம் தடை உத்தரவை விதித்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணா கூறியது

தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது பற்றி அறிஞர் அண்ணாவிடம் பத்திரிகை நிருபர்கள் வினவிய பொழுது: 'தடை உத்தரவின் பிரகாரம் கூட்டம் நடத்த பொலீசாரிடம் அநுமதி கோருவோம். அவர்கள அனுமதி தர மறுத்தால், நமது போராட்டத்தின் முதல்படியாக தடை உத்தரவை மீறுவோம். அறிவித்தபடி சட்டத்தையும் எரிப்போம். இதில் யாரும் சந்தேகப்படத் தேவையில்லை. எத்தனை தடைச் சட்டங்கள் வந்த போதும் நமது போராட்டம் நிறுத்தப்படமாட்டாது. நமது கழகம் சிறிய இயக்கம் அல்ல. முப்பது லட்சம் மக்களின் அன்புக்கும் ஆதரவுக்கும் இலக்கான விடுதலை இயக்கம். எனவே தலைவர்களைச் சிறையில் தள்ளினாலும் ஏனையவர்கள் தொடர்ந்து போராட்டத்தை நடாத்துவார்கள். நமது கடந்த காலப் போராட்டங்க்ள் இதற்கு எடுத்துக்காட்டு, என்று கூறினார்.

### இங்கும் ஒரு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அறிந்து அத்தகைய ஆசிரமத்தை ஏற்படுத்தும் பணியினை ஒரு குழு மேற்கொண்டுள்ளதாகச் செய்திகள் கிடைத்துள்ளன.

இந்திய சுதந்திரப் போராட்டம் உருவாக்கப்பட்டதும், நடாத்தப்பட்டதும் காந்தி அண்ணலின்' "சபர்மதி", "சேவாக் கிராமம்" ஆகிய ஆச்சிரமங்களிலிருந்தே என்பதை இதற்கு ஆதாரமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது. இவற்றைப் போன்றே இங்கும்ஒரு ஆசிரமத்தை நிறுவி, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போருக்கு ஆயத்தங்கள் செய்வது என்றும் அச் செய்தி கூறுகிறது.

ஆசிரமம் நிறுவுதற்கான திட்டங்கள் யாவும் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்திடம்சமர்ப்பிக்கப் பட்டிருப்பதாயும், இதற்கு அவர் தமது பூரண ஒத்துழைப்பையும் நல்கி வருகிறார் என்றும் தெரிகிறது.

தமிழ் பெருந்தகை திரு. கந்த முருகேசனார் இந்த ஆசிரமத்திற்கு 'மெய்ம்மை சேரில்லம்' என்று பெயர் சூட்டியுள்ளார்.

தமிழ் பேசும் மக்கள் இந்த ஆசிரமத்துக்கு போதுமான ஆதரவு நல்க வேண்டுமென்றும் தமிழரசுத்தந்தை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கதிர்காம......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இனிமேலாவது தடுத்து நிறுத்தும்படி வேண்டுகிறேன்.

முருகன் பொறுப்பு......

கதிர்காமம் செல்லும் தமிழ் யாத்திரிகர்கள் "கள்ளத்தோணி" எனக் கைது செய்யப்படுகிறார்கள் என்ற செய்தி மலைநாட்டுத் தோட்டங்களில் காட்டுத் தீ போல பரவியுள்ளதென்றும், இதனால் தோட்டத் தொழிலாளர்கள் கதிர்காமத்துக்கு யாத்திரை செல்லப் பயப்படுகிறார்களென்றும், முருகப் பெருமான் கண்கண்ட தெய்வமாதலின் யாத்திரிகர்களையும் சாதுக்களையும் அடியார்களையும் கைது செய்து துன்புறுத்தும் அக்கிரமக்காரர்களைத் தக்கபடி அவர் தண்டிக்க வேண்டுமென்றும், அநேகர் கதிர்காமக் கந்தனுக்கு நேர்த்திகள் வைத்துள்ளார்களென்றும் மலைநாட்டில் அட்டன், நாவலப்பிட்டி, அப்புத்தளை, பண்டாரவளை, பதுளை, நாரளை, கண்டி ஆகிய இடங்களிலிருந்து செய்திகள் கிடைத்துள்ளன.

இந்து சமய ஸ்தாபனங்கள் சில இச்செயலைக் கண்டித்துக் கிளர்ச்சி செய்யத் தொடங்கியுள்ளன என்று அறியப்படுகிறது.

"கள்ளத்தோணி" பதிவை ஏற்படுத்தித் தமிழர்களையும் முஸ்லிம்களையும் கதிர்காமத்துக்கு யாத்திரை செல்லாமல் தடுத்து விட்டால், கதிர்காமப் புண்ணிய க்ஷேத்திரம் முழுவதையும் பௌத்த சிங்களவர்கள் கைப்பற்றி, அதனைப் பௌத்தத் தலமாக மாற்றிவிடலாமென்று திட்டமிட்டுத் தான் இச்செயல்கள் நடைபெறுவதாகக் கொழும்பில் இந்து சமய வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது.

### வட இலங்கையில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

டோம். நீதி எது நியாயம் எது என்று தெரியாத இனத்தினாலே இந்நிலைமையை அடைந்துவிட்டோம். கோயில்களின் பேரிலே தானம் தருமம் செய்து பெருமைகள் கண்டோம்...அன்று.

இன்று அரசியல் கோயிலிலே 'மெய்ம்மைசேரில்லம்' என்ற அஹிம்சைக் கோயிலின் பேரலே, தானம் தருமம் செய்து முழு மனத்தோடு உண்மையுடன் முன்னின்று உரிமையைப் பெற உதவி செய்யுங்கள். மெய்ம்மை சேரில்லத் திருத் தொண்டர்கள் சோர்வின்றி உழைத்திட உறுதுணை புரிவீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

தமிழ் பேசும் பெருமக்களே!

உங்களுக்குள்ளே உள்ள வேற்றுமைகளை ஒழித்து ஒரு புறத்தில் வைத்துவிட்டு முன்னின்று போராடி அநியாயக்காரரை அறியவைத்து உரிமைகளைப் பெற உழைத்திடுவீர்.

காந்திய ஆச்சிரம அமைப்புகள் பற்றிய கட்டுரை அடுத்த வாரம் வெளி வரும்.

ஆச்சிரமம சம்மந்தமாகத் தொடர்பு கொள்ள விரும்புவோர் கீழ் முகவரிக்கு எழுதவும்.

'மெய்ம்மை சேரில்லம்'
ஆலோசனைச் சபை
16, அல்பிரட் ஹவுஸ் தோட்டம்,
கொழும்பு-3.

### சாவகச்சேரியில்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த மைதானத்திலேயே தொண்டர்கள் தங்கினார்கள்.

அடுத்தநாள் 9—11—63 காலை 7 மணிக்கு நுணுவில் சந்தியிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகியது. திரு. சங்கரப்பிள்ளை செல்லையா கடையில் சிற்றுண்டிகளும் தேநீரும் வழங்கப்பட்டன. திரு. வ. நல்லதம்பி வீட்டில் ஊரவர்களின் சார்பில் காலை உணவு வழங்கப்பட்டது. கி. ச. அங்கத்தவர் திரு. கதிரவேலு சண்முகம் தனது வட்டார மக்களின் சார்பில் சிற்றுண்டி வழங்கினார். அத்துடன் சிறுவர்களும் தொண்டர்களுக்கு மகத்தான வரவேற்பு வழங்கினர்.

பின்னர் மட்டுவில்தெற்கு மாதர் முன்னேற்றச் சங்கத தொண்டர்களால் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. மதிய உணவையும் தொண்டர்களுக்கு மாதர் முன்னேற்றச் சங்கத் தலைவர்கள் தயாரித்து வழங்கினார்கள். பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

பாத யாத்திரை

## இரண்டாவது கட்டம்

பாத யாத்திரையின் முப்பதாவது நாளில் மீண்டும் கோப்பாய்த் தொகுதிக்குள் பிரவேசித்தனர் பாத யாத்திரைக் குழுவினர். காலை உணவை வாதரவத்தைக் கிராம முன்னேற்றச் சங்கம் வழங்கியது. புத்தூர் கிராமத்துக்கூடாக மக்களின் கரைகடந்த வரவேற்புக்களை ஏற்றுக் கொண்டு தொண்டர்களும் தலைவர்களும் பவனிவந்தனர். புத்தூர் கிழக்கு குமரகுருபரன் சன சமூக நிலையத்தாரால் மதிய உணவு வழங்கப்பட்டது. மாலை சுன்னாகம்வீதி வழியாக நிலாவரை எல்லாளன் சன சமூக நிலையத்தை அடைந்து, அங்கிருந்து அச்சுவேலி வீதிக்கூடாகத் தோப்பு சென்று, ஆவரங்கால் கிராம முன்னேற்றச் சங்கத்தை ஊர்வலம் அடைந்தது.

மாபெரும் பொதுக் கூட்டம் இங்கு நடைபெற்றது. இரவு உணவும் உறைவிடமும் ஆவரங்கால் மக்களால் வழங்கப்பட்டன.

12ம் திகதி செவ்வாய்க் கிழமை குடியேற்றப் பகுதிக்கூடாக சென்று அச்சுவேலிச் சந்தியால் தென்மூலை பத்தமேனி விநாயகர் சன சமூக நிலையத்தை அடைந்து, அங்கு மக்கள் அளித்த காலை உணவை உட்கொண்டு, அச்சுவேலி தெற்கை அடைந்தனர். அச்சுவேலி தெற்கு சன சமூக நிலையத்தில் தொண்டர்களுக்கு மதிய உணவு கொடுக்கப்பட்டது. மாலையில் மீண்டும் தொடங்கிய யாத்திரை பெருந்தெரு வழியாக கதிரிப்பாய்ச் சந்தியை அடைந்தது. இங்கு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இரவு உணவும் வழங்கப்பட்டது.

13ம் திகதி காலையில் புறப்பட்ட பாத யாத்திரைக் குழுவினருக்கு இடைக்காடு வளலாய் சன சமூக நிலையத்தினர் காலை உணவை அளித்தனர். அங்கிருந்து தொண்டைமானாறு சன்னதி கோயிலை நோக்கிப் பாதயாத்திரிகர்கள் சென்றனர். மதிய உணவு சன்னதியில் உட்கொண்டனர்.

பாத யாத்திரையின் இரண்டாவது கட்டம் இத்துடன் பூர்த்தியாகியது. திருமலை இடைத் தேர்தலை முன்னிட்டுத் தலைவர்கள் அங்கு செல்வதால், மீண்டும் பருத்தித்துறைத் தொகுதியில் அடுத்தவாரம் பாத யாத்திரை ஆரம்பமாகலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### போட்டி...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வர்களை குண்டாந்தடி கொண்டு கொடுமைப் படுத்தியதோடல்லாமல், அவர்களின உயிரையும் குடிக்குமளவுக்கு பொலிசாருக்கு வழி வகுத்துக்கொடுத்த காட்டிக் கொடுக்கும் விபீடண வேடதாரிகளுக்கு மீண்டும் வசதிகளைச் செய்து கொடுக்கலாமா?

இத்தனை கேள்விகளுக்கும் உறுதியான, இறுதியான விடையை சீர்தூக்கிப் பார்த்து வாக்களிக்க வேண்டியவர்கள் யாழ் நகர மக்கள்.


ஆரோக்கியாமிருதலேஹம்

மலபந்தம், பசியின்மை, வயர்வீர்பு, மூல ரோகம், சொறி சிரங்குகள், குஷ்டம், இருமல், குன்மம், இடுப்பு வலி,வாதம் முதலிய வியாதிகளை விரைவில் சுகப்படுத்துகிறது. இம் மருந்தை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால், நாட்பட்ட மலச்சிக்கலை நீக்கி இரத்த விருத்தியும் பலமும் கொடுக்கிறது. பிரதி தினமும் சாப்பிடலாம். பத்தியமில்லை.

விலை : ¼ ரூ. 2-00, ½ ரூ. 3-50, 1 ரூ. 6-50.

S. N. GURU MEDICAL HALL
80, NEW CHETTY STREET COLOMBO 13





ரிஷி
அஜமாமிச லேகியம்

ஆட்டிறைச்சியின் சுத்தமான சத்துக்களோடு பல விலை உயர்ந்த மூலிகைகளையும் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட சிறந்த லேகியம். இதைப் பாவித்து வந்தால் தேக புஷ்டியும், வீரியமும், திடகாத்திரமும், கெம்பீர தோற்றமும் உண்டாகி சரீரத்தில் உள்ள சகல வியாதிகளையும் சூரியனைக் கண்ட பனிபோல மறைத்துவிடும். ஆண், பெண் இருபாலரும் சாப்பிட உகந்தது. இல்லற வாழ்க்கைக்கு இன்றியமையாதது. பத்தியமில்லை.

விலை 1 ருத்தல் ரூபா 35/00
விலை ½ ருத்தல் ரூபா 22/50

(தபாற் செலவு 95 சதம்)

ஆயுர்வேத டாக்டர்:
T. H. மதுரநாயகம் வைத்தியராஜ்
ஞானசுந்தர வைத்தியசாலை,
187, செட்டியார் தெரு, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தழும்பு

எழுதியவர்: திமிலை மகாலிங்கம்

கன்னத்தை வருடிவிட்ட அவனது கரங்கள் அப்படியே நின்றுவிட்டன. வழுவழுப்பான சருமம், அதிலே பருவத்தின் பயிரென்னும் ரோமங்களின் அடிக்கட்டைகள் குத்திட்டு நின்று கொண்டு அவனுடைய வயதுக்குச் சாட்சியமளிக்கின்றன.

"வசந்தா......உன் முகத்திலே எப்படி விழிப்பேன்?" கண்களை மூடி முழிக்கிறான் ராஜேந்திரன். கண்களிலிருந்து தாரை தாரையாக வழிந்து ஓடுகிறது. இடது கையில் வைத்திருந்த முகம் பார்க்கும் கண்ணாடியைத் தூக்கி மேசையில் வீசி எறிகிறான். இரண்டு கைகளாலும் மண்டையை இறுகப் பிடித்துக் கொண்டு வெதும்புகிறான், விம்முகிறான், பெருமூச்சு விடுகிறான்.

அழுகை!

அது யாருக்குச் சொந்தம்; அது பொதுவுடைமைச் சொத்து, ஆனால் செல்வர்களின் பங்கு மிகக் குறைவுதான். இவையெல்லாம் அர்த்தமற்ற சிந்தனைத் துளிகள். உருவமற்ற அவை ஓடி மறைகின்றன. வீசிவிட்ட கண்ணாடியை மீண்டும் எடுத்து முகத்துக்கு முன்னே பிடிக்கிறான். அவனுடைய முகம் அதில் தெரிகிறது.

வீசியெறிந்த கண்ணாடியை மீண்டும் ஏன் தேடியெடுத்தான்? கையிலில்லாததைக் கையில் வைத்துக் கொள்வதில் ஏதும் மனத்திருப்தியா?

இதுதான் உலகின் வழமை போலும். கண்ணாடியைப் பார்த்த முகம் ஆடவில்லை அசையவில்லை. கண்கள்; கண்களின் முன்னிருக்கும் கண்ணாடி; அதைப் பிடித்துக்கொண்டிருக்கும் கை. எல்லாம் சலனமற்று அமைதியாக நிற்கின்றன.

"அத்தான் உங்கள் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் எனக்குப் பசியே எடுக்காது. வீட்டிலே அம்மா என்றொருத்தி என்னைத் தேடாமல் இருந்துவிட்டால் உங்கள் முகத்தைப் பார்த்தபடியே பொழுதைப் போக்கிவிடுவேன்." கல்லடி சின்ன முகத்துவாரத்துக் கடற்கரையின் ஓரத்திலே அடர்ந்து படர்ந்துகிடக்கும் படர் நாவற் பற்றையதன் அருகே அன்றொருநாள் அந்தி நேரத்திலே அவள் பேசிய அன்பொழுகும் பேச்சு அது. அந்த ரம்மியமான மாலை நேர உணர்வு சில நிமிஷங்களுக்கு அவனது மனக் கண்ணில் தோன்றி] மறைந்து போயிற்று.

மீண்டும் கண்ணாடி அவனது முகத்தைக் காட்டுகிறது. அப்பழுக்கில்லாத அகன்ற வசீகரமான முகம். நெற்றியிலிருந்து வருடிக் கொண்டு வந்த அவனது வலக்கரம் வலது கன்னத்தில் வந்து அப்படியே நின்றுவிட்டது. வலக்கரத்தின் சுட்டு விரல் இரண்டு மூன்று தடவை அசைந்து அசைந்து அந்த இடத்தைத் தொடுகிறது. நிறம் வேறுபட்ட பெரிய தழும்பு அது. அந்த வடுவைக் கண்டதும் கண்கள் கலங்குகின்றன. இதயம் சலசலத்துத் துடிக்கிறது. "வசந்தா என்னே என் துரதிர்ஷ்டம். என்னிடமுள்ள எதை நீ மனப்பூரிப்புடன் ரசித்தாயோ, அதையே இன்று மாசுபடுத்திக் கொண்டிருக்கிறேனடி வசந்தா." நீண்ட பெருமூச்சின் நீராவி கண்ணாடியில் விழுந்து அதில் படிந்திருக்கும் உருவத்திற்குத் திரை போடுகிறது.

கொட்டும் மழையிலும் கட்டிய கைகளுடன் நடு வீதியில் உட்கார்ந்திருக்கிறான், ராஜேந்திரன். நடக்க முடியாதபடி அவனது இரு கால்களும் வாதத்தினால் மடக்கப்பட்டிருக்கவில்லை. அவனுடைய கைகள் கூட நன்றாகத்தான் இருந்தன, ஆனால் செயல்படவில்லை. சரியான நடுநிசியான அந்நேரத்திலும் அவன் ஏன் அதில் இருக்க வேண்டும்? யாரோ வருவதை எதிர்பார்த்து நடுவீதியிலே காத்துக்கிடக்கிறானா? என்று யாரும் சந்தேகப்படுவதற்கு வேண்டிய காரணமில்லாது அவனுடன் பல இளைஞர்களும் வயதானவர்களும் குந்தியிருக்கிறார்கள். அவர்களின் உறுப்புக்களில் குறையொன்றுமில்லைதான். ஆனால் அவர்களின் உள்ளத்திலே ஈடு செய்ய முடியாத பெரிய குறை. அவர்களின் இதயங்கள் ஒவ்வொன்றும் ஏதோ முணுமுணுக்கின்றன.

ராஜேந்திரன் வேறு விஷயங்களிலே பல துறைகளில் வேறுபட்ட கொள்கைகள் கோட்பாடுகள் உடையவனாக இருந்தாலும் இந்த விஷயத்திலே எல்லாருடனும் ஒத்த நோக்கமுடையவனாக இருந்தான். "உனது மொழிக்கும் கலாசாரத்துக்கும் உரிய இடம் கொடுக்கப்படவில்லையானால் நீ ஒரு சுதந்திர புருஷனாக வாழ முடியாது. நீ எல்லோரையும் போன்று நடை பழகினாலும் நீ சுதந்திரமற்ற ஒரு ஜீவன்தான். ஆகவே உனது மொழியின் உயர்வுக்காக என்ன தியாகங்கள் உன்னால் செய்ய முடியுமோ அதைச் செய்யப் பின் நிற்காதே" என்று அவனது உள்ளம் உறுத்திக் கூறியதிலிருந்துதான் அந்தச் சத்தியாக்கிரகிகளுடன் சேர்ந்து கொண்டான். தனது உயிரிருக்கும் வரை அதிலிருந்து அசைவதில்லை என்பது அவனுடைய முடிவு.

கிழக்கு மாகாணத்தின் அரசாங்க அலுவல்களையெல் ஸ்தம்பிக்கச் செய்துவிட்ட ஐம்பத்தேழாவது நாள். மூடு பனியும் மந்தார முகிலும் அவனை ஒன்றும் செய்யவில்லை. மொழியைக் காப்பதற்காகப் படுக்கைகளைத் துறந்து மட்டக்களப்புக் கச்சேரியின் வாசலிலும் வாடி வீட்டையடுத்துள்ள தார் ரோட்டிலுமாகச் சத்தியாக்கிரகமிருக்கும் சுதந்திர ஜீவன்களில் ஒருவனாக இருப்பதினாலே நெஞ்சில் ஓர் நிறைவு அவனுக்கு.

அரசாங்கப் படைகளையும் பட்டாளங்களையும் கண்டு பதை பதைக்காது கூரைப்பாய் கட்டிய தோணிகளில் வீர அணி வகுத்து வந்த கிழக்கிலங்கைப் பாதுகாப்புப் படைகளின் உத்வேகத் தோற்றம் நிழற்படம்போல் ஓடுகிறது. குண்டாந்தடி முருங்கைத்தடி, தமிழ் மொழி வாழ்க, அறப்போர் தொடுப்போம் என்றெல்லாம் ஒரு குரலாகப் பல குரல்கள் இணைந்து கிளப்பும் ஆவேசக் கூச்சல் உள்ளத்தின் உணர்ச்சி நரம்புகளைத் தட்டியெழுப்புகிறது.

சரியான கூதல் நேரம்— சுயநலக் கம்பளங்களைப் போர்த்துக் கொண்டு வீடுகளிலே கண்துயில்வோர்கள் கால் பெருவிரலிலே படுக்கை விரிப்புகளைக் கொழுவிச் [illegible] வைச் சுவைக்கும் வெறியிலே கிடக்கும் சிலைகளைப் போல் அந்தச் சத்தியாக்கிரகிகள் உடலுணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டு கல்லுருவங்களாகச் சமைந்து குந்தியிருக்கிறார்கள். குடிகாரன் மதுவைக்குடித்து மதுவெறியிலே உழல்கிறான். இவர்கள் மொழியின் மேல் கொண்டுள்ள பாச வெறியால் இப்படி விரதமிருக்கிறார்கள்.

நடு நிசியைத் தாண்டி மூன்று மணி நேரம் ஆகிவிட்டது. பரவலாக வாடிக்கிடந்த உள்ளங்களிலே ஒரு திடீர் பரபரப்பு. யாழ்ப்பாணத்திலே இருந்த சத்தியாக்கிரகிகளை ராணுவத்தினர் அடித்துக் கலைத்து விட்டார்களாம். அடுத்தது மட்டக்களப்புத்தான் என்ற பேச்சு கூதல் காற்றில் கலந்து ஒவ்வொருவர் காதுகளிலும் நுழைகிறது. எதிர்ப்பின்றிச் சோம்பிக் கிடந்த சத்தியாக்கிரக வீரர்களின் இருதயங்கள் உணர்ச்சியின் உத்வேகத்தால் ஓங்கி அடித்துக் கொள்ளுகின்றன. அடுத்த சில நிமிசங்களில் இராணுவ லொறிகள் வந்து இறங்கிவிட்டன. பட்டாளத்தினர் கட்டவிழ்க்கப்பட்டனர். படார்! படார்!! படார்!!! அடி, உதை, குத்து. அஹிம்சை இம்சிக்கப்படுகிறது. நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகள் ஒவ்வொரு திசைக்கும் ஓடுகிறார்கள். ஓடக்கூடாதென்ற உறுதிகொண்டிருந்தவர்கள் உதை வாங்குகிறார்கள். நெல்லு மூடைகளை அள்ளி எறிவதுபோலே பிடிபட்டவர்களை லொறிகளில் மாடுகள் போல், மந்தைகள் போல் ஏற்றினார்கள். லொறி இருளைக் கிழித்துக்கொண்டு ஒரே ஓட்டமாக ஓடிச்சென்று ஒரு மயானத்தில் அருகிலுள்ள பற்றைக்காடுகளுக்கிடையே நிற்கிறது. ஆலையடிச் சோலை மயானத்தின் அமைதி தகர்த்தெறியப்பட லொறிகளிலுள்ளவர்கள் கீழே தூக்கி எறியப்படுகிறார்கள். மீண்டும் அடி! உதை!! குத்து!!! அம்மா! அப்பா! ஐயோ!!! என்ற அலறல்.

ராஜேந்திரன் காயான் பற்றையொன்றில் போய் விழுந்தான்... கண் மண்ணிடையே தப்பியது. தலையை நிமிர்ந்து பார்த்த பொழுது "காறா" சிப்பாய் ஒருவனின் துப்பாக்கிச் சனியன் அவனுடைய கன்னத்தில் குத்திக் கறைபடுத்திவிடுகிறது. முகம், கை, மார்பு எங்கும் ஒரே இரத்தம். எதிரிகளின் படைகளுடன் மோதிப் போர்க்களத்திலே சிந்த வேண்டிய குருதி மயானத்துக்கு அருகிலே தானமாகக் கொடுக்கப்படுகிறது. அவனுக்கு அறிவு தெரியவில்லை. "வசந்தா......"

மீண்டும் அந்த விரல்கள் அந்தத் தழும்பின் மேல் பதிகின்றன. முகத்திலே எத்தனைய வேதனை உணர்ச்சி. "வசந்தா. உன்னைக் காணாமல் இருக்க முடியாது. தவித்த நான் இப்போது உன்னைக் காண்பதற்கே பயப்படுகிறேன். என்னையும் என் தோற்றத்தையும் நினைத்து மனதின் திரையிலே வண்ண ஓவியம் தீட்டியிருக்கும் உனக்கு இந்த வடுபட்ட குரூர முகம் எவ்விதமான அதிர்ச்சியைத் தருமென்பதை என்னால் அனுமானிக்கவே முடியவில்லை. தொட்டு விளையாடும் அப்பழுக்கில்லாத கன்னம் இப்பொழுது நானே வெறுக்கும் அளவுக்கு விகாரமாயிருப்பதை நீ காண நேர்ந்தால்...

உன் மனம் மாறி—காதல் மாறி...அதனால் என் வாழ்வு மாறி......ஐயையோ வேண்டாம்.

அவள் என்னைக் காண வேண்டாம்......

என்னோடு பேச வேண்டாம்...

அதனால் என் வாழ்விலே ஏமாற்றம் வேண்டாம்.

நெஞ்சு நிறைந்த காதலுணர்வுடன் நான்...வசந்தா"

இன்னும் ஏதோ வார்த்தைகள் மோதிமோதி மறைகின்றன. கண்களை இறுக மூடிக்கொள்கிறான், உணர்ச்சியை அடக்கிக் கொள்ள. அவன் துடியாய்த் துடிக்கும் போது......

"அத்தான்! நீங்கள் நினைப்பதுபோல இந்த வடுவைக் கண்டு மாறிவிடும் போலி உள்ளம் எனக்கில்லை. வீணாக ஏன் இல்லாததையெல்லாம் கற்பனை பண்ணி வேதனைப் படுகிறீர்கள்."

"வசந்தா நான் காண்பது கனவா? நீ...நீ..."

"நான்......நான்தான் உங்கள் வசந்தாதான்......அத்தான். இரண்டு வாரங்களாக என்னை வந்து பாராமலிருந்த காரணத்தை இன்று புரிந்து கொண்டேன். நீங்கள் முணுமுணுத்துக் கொண்டிருந்த வார்த்தைகளையெல்லாம் கேட்டுக் கொண்டுதான் நின்றேன். இன்னமும் அந்தக் கவலை வேண்டாம். நான் உங்கள் உடலைக் கண்டு காதல் கொள்ளவில்லை, உள்ளத்தைக் கண்டு மனமார விரும்பினேன். உங்கள் உருவம் தூள்தூளாக மாறினாலும் உங்களின் உள்ளம் மாத்திரம் இருக்குமானால் போதும். சதா காதலித்துக் கொண்டிருப்பேன்.

"வசந்தா"

"அத்தான்"

"இது பார்ப்பதற்கு உனக்கு அருவருப்பாக இல்லையா?"

"இன்னும் அதைத்தானே கேட்கிறீர்கள். நாம் பேசும் மொழியின் உயர்வுக்காக எத்தனையோ ஜீவன்கள் உயிரைப் பலியிட்டிருக்கும் போது, கேவலம் இந்த வடு ஏற்பட்டு விட்டதற்காக வருந்த வேண்டுமா?......நன்மையை நாடிச் செய்ததற்கு இது நமக்கொரு அடையாளமாக இருக்கட்டும், கவலைப்படாதீர்கள்."

"வசத்தா நீ உண்மையாகத்தான்......"

"சத்தியமாகச் சொல்கிறேன். கொடுங்கள் அந்தக் கண்ணாடியை" ராஜேந்திரனின் கையிலிருந்த கண்ணாடி வெடுக்கென்று பறித்தெடுக்கப்பட்டதும் அவர்களின் கண்கள் கலந்துவிடுகின்றன. சற்று முன்னதாக ராஜேந்திரனின் துன்பத்தைப் பிரதிபலித்த கண்ணாடி இப்பொழுது வசந்தா-ராஜேந்திரன் இருவரதும் இன்ப நுகர்ச்சியைப் பிரதிபலித்துக் கொண்டிருக்கிறது.

## கதை, கட்டுரை, கவிதை அனுப்புவோருக்கு...

- பத்திரிகைக்கு அனுப்பப்படும் கதைகள் எழுதியவரின் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும்.
- நல்ல காகிதத்தில் இடையீடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுத வேண்டும். காகிதத்தின் மறு பக்கத்தில் எழுதக் கூடாது.
- கதை, கட்டுரை காகிதத்தில் நாலு பக்கந்திற்கு மேற்படாததாகவும், கவிதை காகிதத்தில் ஒரு பக்கத்திற்கு மேற்படாததாகவும் இருக்க வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படாத கதை கட்டுரை, கவிதைகளைத் திரும்பப் பெற விரும்புவோர் அவற்றுடனேயே போதிய தபால் தலைகள் வைத்து அனுப்ப வேண்டும். தபால் தலைகள் வைத்து அனுப்பாதவற்றைத் திருப்பியனுப்புவதற்கில்லை.
- கதை, கட்டுரை, கவிதை சம்பந்தமாக எந்த விதக் கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்வதற்கில்லை.

—ஆசிரியர்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலிகள், அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வட-கிழக்குப் பேதம் பேசுபவருக்கு தமிழர் மத்தியில் இடமில்லை

## இந்த உண்மையைத் திருமலை இடைத் தேர்தல் மீண்டும் நிரூபிக்கும்

திடந்தோள் தீரர், திருமலைத் தியாகி திரு. இராசவரோதயத்தை இழந்துவிட்டோம்; தீந்தமிழ் பேசி, தன் நலம் அற்ற தமிழ் மணத் தொண்டர் ஒருவரைக் காலன் தறித்தெறிய விட்டுவிட்டோம்; கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு காந்திய வழியின் அகிம்சைப் போர்வீரர் ஒருவரைப் பறிகொடுத்து விட்டோம்.

அதனால், எங்கும் ஒரே கரு இருள்மயம்; தாங்கொணுத் துயரம், மாசமுத்திரத்தில் புயலில் அகப்பட்ட மாலுமியின் உள்ளக் கலக்கம், கைக் கெட்டியது வாய்க் கெட்டாத நிலையில் பறிபோன பசிக்காரனின் பரிதவிப்பு. கலங்கிய கடலில் மீன் பிடிப்பதற்கு ஆயத்தமான ஆசான்களும இருக்கிருர்கள். பாவம்! அவர்கள் தான் என்ன செய்வார்கள்? சுய நலக் கும்பல்கள், கொள்கையற்ற கொடுங்கோலர் கள் கட்சியற்றுக் கட்டுப்பாடற்றுத் திரியும் கட்டாக் காலி மந்தைக் கூட்டங்கள். இவர்கள் பரிதாபமாக—அனுதாபந் தெரிவித்து மண் கவ்வி மடிய வைக்கப்பட வேண்டியவர்கள்.

### நிம்மதியற்ற நிலை

தாங்கொணுத கொடுமைச் சூழல்; கை தப்பினுல் கரணம் போன்ற கடு தவிப்பு நிலை; இழந்து கொண்டிருக்கும் உரிமைகளை—இழப்புக் கிடமில்லாமல் இன்னுயிர் கொடுத்தேனும் காக்க வேண்டிய காலம், நேரம், அடக்குகிருேம், ஒடுக்குகிருேம், அடிமையாக்குகிருேம் என்கிறது ஆட்சிபீடம்—அதற் கேற்ப நடவடிக்கைகளும் நடைபெற்றுக் கொண்ட வருகின்றன. இப்படியான சோகமும் சிக்கலும் நேர்ந்த, நிம்மதியற்ற நிலையிலே நம் தமிழ் பேசுமினம் இருக்கிறது.

கொடுமைச் சூழல்—எங்களுக்கோர் பனிப் படலம்; கை தப்பினுல் கரணம் என்ற நிலையை—எனதயும் தாங்கும், இதயங்கொண்டு மாற்றி அமைத்து, சர்க்கஸ் காரனின் ஆகாய வெளியில் அந்தரத்தில் தூங்கும் நூலாக்கியுள்ளோம். ஆட்சி பீடத்தின் அறை கூவலை அதிர்வெடி கொண்டு தகர்த்தெறிகிருேம்; அடக்க விட்டோம், ஒடுக்கவிட்டோம், அடிமையாக்க விடோம் என்று சிங்கக் கர்ச்சனை கொடுக்கிருேம், அறப்போர் தொடுக்கிருேம், ஆட்சி பீடத்தை ஆட்டங்காண வைக்கிருேம்; வைத்துக் கொண்டே இருப்போம். இவையெல்லாம் எவ்வாறு செய்தோம்? எம்மில் திகழ்ந்த அசைக்க இயலாத ஒற்றுமையின் வலிமையால் செய்தோம், செய்ததின் பெருமையையும் பெற்ருேம்.

### விடுதலை இயக்கம்

ஆனல் இன்று எம்முள் முளைத்து ஒரு சில சுய இச்சைக் கும்பல்கள்—நம்மைப் பிரித்து வைத்து, நம்மை அடக்க இருக்கும் சக்திகளுக்கு ஊன்று கோலாக இருக்க [illegible] கொண்டு தருணம் [illegible] நம்மில் முளைத்திருப்பது வெட்கக்கேடல்லவா?

இலங்கையில் தமிழ்பேசும் இனமொன்றுண்டு; அதற்கொரு தனிக்கட்சி ஒன்றுண்டு என்றுல் அதுதான் தமிழரசுக் கட்சி! தமிழரசுக் கட்சியென்றுல் தன்நலம் துறந்து தமிழ் பேசும் இனத்திற்காக, அவர்களின் எதிர் காலத்திற்காக உள்ளத் தூய்மையோடு உரிமைக் குரல் எழுப்பும் தன்னிகரற்ற கட்சியென்பது உள்ளங்கை நெல்லிக்கனி! மழைக்காலக் காளானல்ல தமிழரசுக்கட்சி! பருவத்தே அரும்பி அழிந்தொழியும் போக்கதற்கில்லை; என்றென்றும் எங்கே யெங்கே உரிமைக்குரல் எழுப்ப வேண்டுமோ; அங்கெல்லாம் அவ்

### அம்பலவி

வப்போது உரிமைக் குரல் எழுப்பி, வீரமுழக்கம்செய்த வரலாறு எண்ணுந் தரமன்று, கூறக் குறையா நல்லூற்று! இதனை இதுசாலும் ஒருவர் மறுத்தது கிடைக்காது, இனியும் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மையுங்கூட!

### தியாகி நடராசனின் பெயரால்...... .

திருமலை தமிழ் பேசும் இனத்தின் தனிப்பெருமிடமாக இருக்கவேண்டுமானுல்; புரதான காலந்தொட்டு புராணப் புகழ் பெற்று, தமிழரின் பண்பாட்டின் நிலைக் களமும், தேவாரப் பாடல் பெற்ற கோணேசர் ஆலயமும் காக்கப்பட வேண்டுமானுல்; ஈடிணையற்ற உலகப் புகழ்மிக்க இயற்கைத் துறைமுகம் நம்மிடமிருந்து துண்டிக்கப் படாமலிருக்க வேண்டுமானுல்; திருமலைத் தமிழரின் மண்ணொன்று எதிர்காலச் சந்ததியினர் மார்பிலே தட்டி வீராப்போடு தலை நிமிர்ந்து பேச வேண்டுமென்றுல்; எந்தக் கொள்கைக்காக—எவரின் எதிர்காலத்திற்காக தனது இன்னுயிரைத் துப்பாக்கிக்கு இரையாக்கி— நம் இனத்தின்



திரு. எஸ். எம். மாணிக்கராசா

வடுத்துடைத்த தியாகி திருமலை நடராசாவின் நினைவு அழியாமலிருக்க வேண்டுமாகில் — நாம் — எதிரே வரும் திருமலை தேர்தலில் யாது செய்யவேண்டுமென்று சொல்லவே தேவையில்லை; யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று எடுத்தியம்ப வேண்டிய அவசரமுமிருக்கவில்லை!

வடக்குக் கிழக்குப் பேதங் காட்டி தமிழரசுக் கட்சியை ஒதுக்கலாமென்று எண்ணுபவர்களுக்கு எள்ளளவும் இடமில்லை என்பதை கடந்த கால அரசியல் சரித்திரம் சான்ருக்கியுள்ளது!

### யார் காரணம்?

திருமலைப் பகுதி பொருளாதார நிலை குன்றி, கீழ் நிலைக்குப் போவதாகவும்—அதனைப் போக்குவதற்காகப் போராடப் போவதாகவும் கூறிச் சிலர் தேர்தலுக்கு நிற்கிருர்கள். இவர்களை ஒன்று கேட்க விரும்புகிறேன். இன்று நாம் பொருளாதாரத்தில் பாதிக்கப்பட்டுள்ளோமென்றுல் — அதற்குக் காரணம் தமிழரசுக் கட்சியா? அரசினரின் பாரபட்சக் கொள்கைகள்; வேண்டுமென்றே திட்டமிட்டு நம்மை வீழ்த்த எண்ணும் ஆட்சியினர் போக்கு! இதற்குத் தமிழரசாரை எவ்வாறு பொறுப்பென்று கூற முடியும்? உரிமையற்ற அடிமைகளாக ஒரு இனத்தை வைக்க வேண்டுமென்றுல், அவ்வினத்தின் பொருளாதாரத்தைப் பாதிக்க வைக்க வேண்டுமென்கிற அரசியல் சாணக்கியம் — ஆட்சியினர்க்குத் தெரியாத ஒன்றல்ல. அதனை நாம் உணராத நிலையுமல்ல—அதனை முறியடிக்க வேண்டிய பொறுப்பு நம்முடையது என்பதை நினைவில் நாம் வைக்க வேண்டும்.

நமது இடத்தை, நமது நிலத்தை, நமது வளத்தை நாம் பெருக்கும் நிலையை அடைவதுதான் சாலச் சிறந்ததேயல்லாமல் — சலுகைகளுக்குப் பரிசாக நாம் நமது இடத்தையோ, நிலத்தையோ, வளத்தையோ, மொழியையோ அடைவு வைப்பது என்பது கூடவே கூடாது. இந்த இழிச் செயலை நமது இனம் ஒரு போதும் ஏற்பதே கிடைக்காது.

### யார் வேண்டும்?

பாதைகள் வேண்டுமென்பதற்காகப் படுபாதகச் செயல் பல புரிந்து 'தார் பாதை' பெற்றுத் தரும் பெரியவர்களையோ, படிப்பகங்கள் வேண்டுமென்பதற்காக இனத்தின் அடி வயிற்றில் அடித்துப் பெற்றுத் தருபவர்களையோ; மருத்துவமனைகள் வேண்டுமென்பதற்காக இனத்தைக் கருவறுத்துத் தருபவர்களையோ; தொழுமைக் கூடங்கள் வேண்டுமென்பதற்காக ஈழத்தில் நம் மொழியை அழிக்க எண்ணுபவர்களுக்கு மாலை போட்டுப் பெற்றுத் தரும்

(13-ம் பக்கம் பார்க்க)

### புங்குடுதீவு குழாய் நீர் விநியோகம்

குடி தண்ணீரால் நீண்ட நாட்களாகக் கஷ்டப்பட்டு அலுத்துப்போன புங்குடுதீவு மக்களின் நிலைமையை நன்கு உணர்ந்த அகில இலங்கை புங்குடுதீவு மகாசன சபை, சம்பந்தப்பட்ட அமைச்சருடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வந்துள்ளது. இதனைச் செவிசாய்த்த கௌரவ தலத்தாபன, உள்நாட்டு அமைச்சர் மேற்படி சபை



திரு. வ. நவரத்தினம்

க்குப் பேட்டி அளிக்க முன் வந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியது.

இது சம்பந்தமாக 5—11—63ல் தலத்தாபன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியுடன் அகில இலங்கை புங்குடுதீவு மகாசன சபையினரும் புங்குடுதீவு கிராம சபையினரும் சேர்ந்த தூது கோஷ்டி பேட்டி கண்டு புங்குடுதீவு மக்களின் குடி தண்ணீர்க் கஷ்டத்தை எடுத்து விளக்கியுள்ளது. அத்துடன் அகில இலங்கை புங்குடுதீவு மகாசன சபை மகஜர் ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது. புங்குடுதீவுக்கு வாகனம் மூலம் குடி தண்ணீர் விநியோகிக்க அரசாங்கம் செலவு செய்துள்ள பெருந்தொகையான பணத்தை அம் மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த உண்மையான கஷ்டத்தை நன்குணர்ந்த தலத்தாபன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி உடனடியாகக்குழாய்மூலம் குடி தண்ணீர் விநியோகிக்க வசதி செய்து தருவதாக வாக்குறுதி அளித்ததுடன், பொறியியல்வல்லுனர்களைப்புங்குடுதீவுக்கு அனுப்பி நல்ல தண்ணீருள்ள இடங்களைப் பரிசிலனை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்துள்ளார்.

பேட்டிகாணச் சென்ற தூதுக்குழுவில், ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு. வ. நவரத்தினம், இலங்கை அரசாங்க புகையிரத பிரதம எஞ்சினியரும் அகில இலங்கை புங்குடுதீவு மகாசன சபைத் தலைவருமாகிய திரு. என். ஏ. வைத்தியலிங்கம், சபைக் கௌரவ செயலாளர், திரு. சி. க. நடராசா, அங்கத்தவர்களான திருவாளர்கள் ஆ. வெ. குணரத்தினம், சி. கு. செல்லையா, சேவியர் சதாசிவம், அ. சோமசுந்தரம் ஆகியோரும், புங்குடுதீவு கிராம சபைத் தலைவர் திரு. வே. சி. குமாரசாமி, முன்னைநாள் தலைவர் திரு. சு. சபாரத்தினம், திரு. மா. முருகேசு, திரு. பத்மநாதன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


### மந்திர சக்தியை நிரூபிப்பதற்கு


உங்களுக்கு நிறைவேறவேண்டிய காரணங்களை நிறைவேற்றித்தர முடியும். இரகசியங்கள் வெளியிடப்பட மாட்டாது. உங்கள் காரணங்களை அறிவிக்கவும்.

கவர்மெண்ட் ரிஜிஸ்டர் மந்திராச்சாரியார்.

**பி. எம். திசாநாயக்க,**

கம்பளை.





பாட்டாளி முதல்



பணக்காரன் வரை

[எல்லோரும் புகைப்பது]

**கமலா பீடி**

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்

கமலா ஸ்டோர்ஸ்,

தந்தி தாமரை

நிர். 15, செட்டியார் தெரு, கொழும்பு-11

தொலைபேசி 3597—6522


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## சோகம் நிறைந்த இரவுகள்

மனதால் வரித்த மணாளனை மறந்து மாற்றானின் கையைப் பிடிக்க முடியாது வீட்டைவிட்டு வெளியேறிய மங்கையை, அன்பு காட்டி ஆதரவளித்த ஒருவரின் குழந்தை ஆசையுடன் அணைத்துக் கொள்ளுகிறது. அந்தக் குழந்தை கதை சொல்லும்படி அவளை நச்சரிக்கிறது. தனது கதையே அவளை ஆட்டிப் படைக்கும் போது, அவளுக்கு வேறு கற்பனை உதயமாவது எங்ஙனம்?

'பிறந்தகதை சொல்லவா?
வளர்ந்தகதை சொல்லவா?
பெண்ணொன்று பூமியிலே —
மலர்ந்தகதை சொல்லவா?'

இசையுடன் தனது சோகக் கதையைக் கூறுமுன்னரே, குழந்தை உறங்கிவிட்டது.

ஒன்பது இரவுகளில் ஒன்பதுவகைக் குணமுடைய ஆண்களைச் சந்திக்கும் அந்தப் பெண்ணின் வரலாற்றைக் கூறுவதுதான் "நவராத்திரி". வேகமாக வளரும் இப்படத்தை விஜயலட்சுமி பிக்சர்சுக்காக ஏ. பி. நாகராஜன் டைரக்ட் செய்கிறார் சாவித்திரிக்காக மேற்படி பாடலுக்குக் குரல் கொடுத்துள்ளவர் சுசீலா தான்.

---

## பளை வாலிபர் சங்கம்

கடந்த ஒரு வருடமாக குறிப்பிடத்தக்க பல அரிய தொண்டுகளைச் செய்து வரும் பளை வாலிபர் சங்கத்திற்கு ஒரு கட்டிடத்தை நிர்மாணிக்க இளைஞர்கள் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள். வாலிபர் சங்கக் கட்டிட நிதிக்காக காங்கேசன்துறை இராஜநாயகி படமாளிகையில் எதிர்வரும் 21ம் திகதி சிவாஜி கணேசன், சரோஜா தேவி நடித்த "விடி வெள்ளி" படத்தைத் திரையிட ஏற்பாடுகள் செய்துள்ளனர். சங்க வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்களின் ஒத்துழைப்பையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்காக வாலிபர் சங்கத்தினர் பெருமுயற்சி எடுத்து வருகின்றனர்.

# கொஞ்சும் சலங்கை

### கண்ணைக் கவரும் கானம் பொழியும் கருத்தை ஈர்க்கும்

நல்லிசை வழங்கும் நாதஸ்வரமும், ஆடற்கலையும், சிற்பக் கலைக் கோபுரங்களும், ஓவியமும், காவியமும் தேன் தமிழகத்தின் சிறப்புச் சின்னங்களாகும். அத்தனை கலைகளையும் ஒருங்கே அமைத்து அழகிய வண்ண ஓவியமாகத் தீட்டி ஓங்கு புகழ் கொண்டனர், தேவி பிலிம்சார்—கொஞ்சும் சலங்கையைத் தயாரித்ததன் மூலம்.

கொஞ்சும் சலங்கை ஒலி எழும்ப கோலாகலமாக நடனமிடும் ஆடற் கணிகை அபராஜிதா, பார்த்திப மன்னனின் மனதில் கொலுவிருக்கிறாள். கருவுற்ற நிலையில், மன்னனுக்கும் மக்களுக்கும் மாசு ஏற்படாவண்ணம் மறைந்து வாழ்ந்து, மகவை ஈன்றதும் மரணமடைகிறாள். அபராஜிதாவின் அன்பை எண்ணியே வாழ்ந்த பார்த்திப மன்னனுக்கு, வாரிசாக அவன் தம்பி, நயவஞ்சக நாகதேவன் வந்து விடுகிறான். செங்கோலைக் கொடுங்கோலாக்கித் தனது வாழ்வைச் சுகமாக்கிக் கொண்ட நாகதேவனின் சூழ்ச்சி வலை அரசனையும், அண்டியவர்களையும் சிறைக்கனுப்புகிறது.

அபராஜிதாவின் வயிற்றிலுதித்தவன் தனது வம்சத்தின் வரலாறு அறியாது நாதஸ்வரத்தின் நாதத்தைப் பரப்பிவருகிறான். அமரேந்திரன் என்ற பெயருடன் வளர்ந்து ஆடலழகி மல்லிகாவின் காதலுக்கு இலக்காகி விடுகிறான். இசைச் செல்வத்தில் திளைத்த சாந்தா அமரேந்திரனையே காதலிக்கிறாள். இந்த முக்கோணக் காதல் இடையில் சிக்கலை ஏற்படுத்தினாலும், முடிவில் சீரடைகிறது.

நாகதேவனின் கொடுமையை எதிர்த்துப் பொடி செய்யும் பொறுப்பை அமரேந்திரன் ஏற்கிறான். சண்டைகள் நடைபெறுகின்றன. வில், வாள், வேல் முதலியன ஒன்றுடன் ஒன்று மோதுகின்றன. இறுதியில் உண்மையான வாரிசு நாட்டின் பொறுப்பை ஏற்க சுபமாக முடிவடைகிறது கதை.

அமரேந்திரனாக காதல் மன்னன் ஜெமினி கணேசன் தோன்றி, காதல், சோகம், வீரம் அத்தனையையும் செய்து விடுகிறார். மல்லிகாவாக கமலா லெட்சுமணன் தோன்றி அற்புதமாக ஆடுகிறார்.


சாந்தியே உருவான சாந்தாவாக சாவித்திரி திகழ்கிறார். நாகதேவன் வேடத்தில் மனோகர் வந்து ரசிகர்களின் திட்டலுக்கு இலக்காகிறார். பார்த்திபனாக வரும் ராம்தாஸ், காமவல்லியாக வரும் குசலகுமாரி, மற்றும் பீர் முகமது முதலியோர் நன்றாகவே நடித்துள்ளனர்.

தவில் வித்வானாக சாரங்கபாணி தனது குடுமியை ஆட்டுவதன் மூலமே சிரிப்பூட்டி மகிழ்விக்கிறார். முத்துலெட்சுமியும் இணையாக நடிக்கிறார்.

இசைத் தட்டுத் தயாரிப்பில் தமிழகத்தில் புரட்சி ஏற்படுத்திய 'சிங்காரவேலனே தேவா' என்ற ஜானகியின் இசையும், காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர ஒலியும் மெய்மறக்க வைக்கின்றன. சூலமங்களம் ராஜலெட்சுமியின் 'ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற' என்ற திருப்பதிகம் இன்பத் தேனைக் காதுகளில் சொரிகின்றது. ஆரம்ப முதல் இறுதிவரை அருணாசலத்தின் நாதஸ்வர கானம் கர்ணாமிர்தமாக ஒலிக்கிறது. இத்தனைக்கும் மேலாகப் பிரமாண்டமான காட்சி அமைப்புகள் நம்மைப் பிரமிப்புக்குள்ளாக்குகின்றன. தயாரிப்பாளரும், டைரக்டருமான எம். வி. ராமன் காட்சி அமைப்புகளிலேயே பணத்தை இறைத்துள்ளார். ஒளிப்பதிவில் காட்டப்பட்ட கவனம் ஒலி அமைப்பில் காண்பிக்கப்படவில்லை என்பது சிற்சில இடங்களில் தெரிகிறது.

டெக்னிக்கலரிற் தயாரிக்கப்பட்டு லண்டனிலேயே பிரதிபண்ணப்பட்ட கொஞ்சும் சலங்கை பார்ப்பவர் உள்ளங்களில் என்றென்றும் ஒலி எழுப்பும் என்பதில் எள்ளளவும ஐயமில்லை.

— நாதன்



நாதஸ்வர இசையால் நாட்டை மயக்கும் அமரேந்திரன் (ஜெமினி கனேசன்)

நாடக விமர்சனம்

## என்னைக் காதலித்தவள்


வள்ளுவர் நாடக மன்றத்தாரின் 'என்னைக் காதலித்தவள்' நாடகம் அர்ச் பெனடிக்ட் கல்லூரி மண்டபத்தில் 'சினிமாஸ்' திரைப்பட உதவி டைரக்டர் திரு. ஈழத்து இரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

ஒலி அமைப்புக் கோளாறு காரணமாக முன்புறத்திலிருந்தவர்களுக்கே சம்பாஷணைகள் எதுவும் விளங்கவில்லை. மேடையில் நடப்பவை ரசிகர்களுக்குப் புரியாத புதிராகவிருக்குமானால், அவர்கள் பொறுமையை இழக்காமல், என்ன செய்ய முடியும்? ரசிகர்களின் உள்ளத்தைத் தொடக்கூடிய வகையில் நாடகங்களை அமைப்பதை விட்டுவிட்டு, ரசிகர்களுக்குவேதனையும் கோபமும் ஏற்படுத்தும் வகையில் நாடகங்களை அமைப்பது அழகல்ல.

சிரிப்பூட்டுவது என்று கூறிக் கொண்டு மேடையில் நின்று, பார்ப்பவர்களுக்கு சினத்தை ஊட்டுவதும் நல்லதல்ல. அங்கசேட்டைகளும் அவலட்சணக் கூத்தும் நகைச்சுவையாகா. தலைவேதனையையே கொடுக்கும் என்பதை இந் நாடக அரங்கேற்றத்தின் மூலம் தயாரிப்பாளர்கள் உணர்ந்திருப்பார்கள்.

தரமான நடிகர்களை ஏற்பாடு செய்திருந்தனர். ஆனால் சந்தர்ப்பக் கோளாறு எதையும் சோபிக்கச் செய்யவில்லை. இனிமேலாவது ரசிகப் பெருமக்களின் நல்லாதரவைப் பெறும் வகையில் நாடகங்களைத் தயாரித்தளிப்பார்கள் என்று எண்ணுகிறோம்.

— வண்டு.



விழிக்கணை போதாதென்று வில்லிலும் கணை தொடுக்கும் மல்லிகா (சாவித்திரி)

## 'வேட்டைக்காரன்'

ஒன்றுக்குப் பின் ஒன்றாக மளமளவென்று வெற்றிப் படங்களைத் தயாரித்து வெற்றிகண்டவர்சாண்டோ சின்னப்பா தேவர். தேவரிடம் ரசிகர்கள் குறை கூறாமலுமில்லை. அவருடைய படங்களில் பெரும்பாலும் பழைய முகங்களையே, வழக்கமான சோடிகளையேதான் பார்க்க முடிகிறது. ஆனால் இக்குறையையிட்டுத் தேவர் கவலைப்படுவதில்லை. வெவ்வேறு நடிகர்களை வைத்து அவர் தயாரித்து வெளியிட்ட படங்கள் அவ்வளவு தூரம் வெற்றி கொடுக்கவில்லையாம்.

"நீதிக்குப் பின் பாசம்"த்துக்குப்பிறகு, தேவர் புரட்சி நடிகரின் இணையாகச் சாவித்திரியைப் போட்டு "வேட்டைக்காரனை"த் தயாரிக்கிறார். அசோகன், எம். ஆர். ராதா, நாகேஷ், மனோரமா, நம்பியார் ஆகியோரும் இப்படத்தில் நடிப்பார்கள் எனத் தெரிகிறது. பொங்கலன்று வேட்டைக்காரன் திரைக்கு வருகிறானும்.

வேட்டைக்காரனுக்காகச் சவுந்தரராஜனும், சுசீலாவும் சேர்ந்து பாடிய ஒரு பாடல், மெஜஸ்டிக் ஸ்டூடியோவில் ஒலிப்பதிவாகியது.

---

உண்மைச் செய்தி

## சரோஜாதேவிக்கு விபத்து!

சரோஜாதேவியின் தலையில் கல்லடி பட்டதனால் பலத்த காயம் ஏற்பட்டுவிட்டது. பூனா நகரை அடுத்த ஒரு மலைப்பாங்கான இடத்தில், ஹிந்திப் படப்பிடிப்புக்காகக் கிராமியப் பெண் வேடமிட்டு, தலையில் குடத்துடன் சென்ற சரோஜா தேவிக்குத்தான் இந்த விபத்து ஏற்பட்டது.

குடத்துக்குக் குறிவைத்த உதவி டைரக்டர் சரோஜா தேவியின் தலையைத் தவறுதலாகப் பார்த்ததனால் இரண்டு தையல்கள் போட வேண்டியேற்பட்டது. பூனா நகரிலிருந்து பம்பாய்க்கு மோட்டாரில் சென்று, அங்கிருந்து விமானமூலம் 10ந் திகதி சென்னைக்கு சரோஜா தேவியைக் கொண்டு வந்தார்கள். குடும்ப டாக்டரின் சிகிச்சையினால் இப்பொழுது குணமடைந்து வருகிறார்.

இரண்டு வாரங்களுக்கு எதுவித படப்பிடிப்புக்கும் செல்ல முடியாத நிலையில் இருக்கிறார்.

அறிமுகப்படுத்துகிறோம்.
புதிய பல விபரங்கள்
அடுத்த வாரம்.



நாகத்தின் விஷத்தைவிட நயவஞ்சகத்தால் நாசம் விளைவிக்கும் நாகதேவன் (மனோகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசியல் கொள்கை

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு இடங்களில் கொண்டு போய்க் குடியேற்றுவது சாத்தியமன்று. ஆகவே தோட்டப் பகுதிகளில் கூடியளவு இந்நாட்டு மக்களைக் (சிங்களவர்களை)க் குடியேற்றுவதே இப்பொழுது செய்ய வேண்டிய வேலை.

### மாவட்ட சபை அமைப்பு

கச்சேரி முறையை ஒழித்துக்கட்டி அதற்குப் பதிலாக மாவட்ட சபைகளை அமைத்து, தலைநகரில் குவிந்து கிடக்கும் அதிகாரங்களைப் பரவலாக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி "தினமின" 8-11-63ந் திகதி தலையங்கம் தீட்டியுள்ளது.

"மாவட்ட சபைகளைக் கொண்டு பிராந்திய அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்க்கத் தொடங்கினால் இன்று நாட்டுக்குப் பெரும் தலையிடியாயுள்ள மொழி, மத, இன பேதச் சிக்கல்களை மிகத் திருப்திகரமாகத் தீர்த்துக் கொள்ள இடம் கிடைக்கும். எல்லாவற்றிற்கும் மேலாக, இதனால் ஜனநாயகத்தையும் மக்களின் சுதந்திரத்தையும் ஸ்திரப்படுத்த முடியும்" என்று இத் தலையங்கம் கூறுகிறது.

### பிரதமரின் கோபம்!

பிரதம மந்திரி வெளிநாட்டுச் சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இலங்கை திரும்பியதும் அவரது கோபத்துக்குச் சில மந்திரிகளும், சில அரசாங்க எம்.பி. களும் ஆளானார்கள் என்று "சியரட்ட" (யூ.என்.பி. பத்திரிகை) இவ்வாரம் எழுதியுள்ளது.

இப்பத்திரிகை எழுதுவதாவது:—

"பிரதமர் சில மந்திரிகளை அழைத்து, தான் கூறிய நபர்களை ஏன் செனட்டர்களாகத் தெரிவு செய்யவில்லையென்று கடுமையான தொனியில் கேள்விகள் கேட்டாராம். இதனால் சில மந்திரிகள் அதிருப்தி அடைந்துள்ளனராம். சில மந்திரிகளைப் பிரதமரின் கோபத்துக்கு இலக்காக்கும் பொருட்டு ஒரு மந்திரி சில நாட்களாகச் செய்த முயற்சி பலனளித்துள்ளதென்று விஷயம் தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

சில எம்.பி.களுக்கு அடுத்த பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி சார்பாகப் போட்டியிட அனுமதிக்கக் கூடாதென்று திரு. பீலிக்ஸ் பிரதமரிடம் கேட்டுக் கொண்டுள்ளாராம். இந்தச் செயல் திரு. சி. பி. டி சில்வாவின் கோபத்தைக் கிளறிவிட்டுள்ளதாம். சி. பி.—பீலிக்ஸ் அரசியற் போட்டி இதனால் இப்பொழுது வளர்ந்துள்ளதோடு, மீண்டும் கடுமையான மந்திரி சபை நெருக்கடி ஏற்படலாமென நம்பப்படுகிறது.

இதற்கிடையே கல்வி மந்திரி திரு. கலுகல்லையின் ஜாதகத்தைப் பார்த்த ஒரு சோதிடர் அவர் பிரதம மந்திரியாவார் என்று கூறியதின் விளைவாக திரு. கலுகல்லை திடீரெனப் பிரதமர் மீது அதிருப்தி கொண்டுள்ளாரென்றும் பிரதமர் பதவியில் பேராசை கொண்டுள்ளாரென்றும் கூறப்படுகிறது. இது பிரதமரின் காதிலும் விழுந்துள்ளதாம்."

### அரசாங்கக் கட்சியில் சலசலப்பு

"பிரதம மந்திரி அரசாங்கத்தில் பல்வேறு பதவிகளுக்குத் தமது உறவினர்களை நியமிப்பதற்கு முயற்சி செய்வதின் விளைவாக சுதந்திரக் கட்சியினுள் பெரும் சலசலப்பு ஏற்பட்டுள்ளது" என்று மக்கள் ஐக்கிய முன்னணியின் "மகஜன எக்ஸத் பெறமுண" பத்திரிகை 9-11-63-ந் திகதி இதழ் ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

பிரதமரின் போக்கில் சில அரசாங்க எம். பிகள் அதிருப்தி கொண்டுள்ளனரென்றும், பிரதமர் எம். பி. களை நம்புவதைவிட அதிகமாக 'ரதல' குடும்பங்களைச் சேர்ந்தவர்களையே நம்புகிறாரென இந்த எம். பி. கள் கூறுகிறார்களென்றும் இப்பத்திரிகை எழுதுகிறது.

### வரி இலாகாவில் சிங்களம் இல்லையே!

"வருமான வரிக்குச் சிங்களம் வேண்டாமா?" என்ற தலைப்பின் கீழ் 'தவஸ' நவம்பர் 9-ந் திகதி எழுதியுள்ள தலையங்கத்தில், உள் நாட்டு வரித் திணைக்களத்தின் ஆணையாளர், உதவி ஆணையாளர் ஆகியோர் திறைசேரி உத்தரவுகளுக்கு மாறாக நியமிக்கப்பட்டுள்ளனரென்றும், அவ் விருவரும் சிங்களத் தேர்வுப் பரீட்சைகளைப் பகிஷ்கரித்தவர்களென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்களத்தைப் பின்னால் தள்ளிவிட்டு, வருமான வரி திணைக்களத்தைப் ஒரு "தொழில் நுட்ப இலாகா" வாக்கும் பொருட்டு பல்வேறு முயற்சிகள் செய்யப்படுவது உண்மையானால், நிதி மந்திரி இது பற்றிக் கவனம் செலுத்த வேண்டியது அவசியமென்றும், இந்த இலாகா "தொழில் நுட்ப"ப் பகுதியாகிவிட்டால், தபால் பகுதி, புகையிரதப் பகுதி, திறைசேரி முதலியவைகளும் தொழில் நுட்ப இலாகாக்களாகி விடுமாதலின், சிங்களம் அந்த இலாகாக்களிலிருந்து புறக்கணிக்கப்பட்டு, சிங்களத்தை அமுல் நடத்துவதற்கெனத் தனி இலாகாக்கள் நிறுவவேண்டிய நிலையேற்படுமென்றும் இத் தலையங்கம் கூறுகிறது.

# கொம்யூனிஸ்டுக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

னிஸ்டுக் கட்சிக்குள் உள்ள சீனக் கோஷ்டியினர் வெளியேற்றப்படுகின்றனர்—வெளியேற்றப்படுவர்.

இந்தியாவில், கொம்யூனிஸ்டுக் கட்சியின் மாநில கிளைகள், மத்திய குழுவின் மாஸ்கோ சார்புக்கொள்கைகளைப் பகிரங்க கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றி—எதிர்ப்பு ஊர்வலமும் நடாத்தியுள்ளன. இந்தியக் கொம்யூனிஸ்டுக் கட்சியின் பெருந் தலைவர்களில் ஒருவரான ஏ. கே. கோபாலன் இக் கிளர்ச்சியில் முக்கிய பங்கு ஏற்றுச் செயல்பட்டு வருகிறார். இதே போன்று ஏனைய நாடுகளிலும் இந்நிலை உருவாகி வருகிறது.

### எதிர்காலம்

ஆனால் உலக அரங்கில் மார்க்சிஸ்டுகளின் சக்தி குன்றிவிட்டது. எதிர்காலத்தில் பொது உடைமை நிலைத்து நிற்கும் — உலகெல்லாம் வேரூன்றும். ஆனால் மார்க்சிசம் மெல்ல உதிர்ந்து சருகாகிவிடும். பொதுவுடைமைக்கும், அதாவது கொம்யூனிசத்திற்கும் கார்ல் மார்க்சுக்கும் உள்ள உறவே, முதன் முதலில் கொம்யூனிசத்தை உருவாக்க அவரது எழுத்துக்கள் பயன்பட்டன என்ற அளவோடுதான் இருக்க முடியும்.

### கிழக்கில் பாத யாத்திரை

கிழக்கு மாகாணத்தில் பாத யாத்திரையை ஆரம்பித்து நடத்துவதற்கான திட்டங்களை அறப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ வி. அரியநாயகம் அதிதீவிரமாகத் தயாரித்து வருகிறார் என்று நம் நிருபர் தெரிவித்துள்ளார்.

# அன்னை தமிழுக்கு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மளிக்கிறது. "திவான் பாஷா" என்னும் தேசிய மொழிப்பண்பாட்டுக்கழகம் உள்நாட்டு எழுத்தாளர்கள் எழுதிய தமிழ்ச் சிறுகதைகளை நூல் வடிவில் வெளியிட்டுள்ளது. பன்மொழி எழுத்தாளர்களின் பேரவை ஒன்றைச் சென்ற ஆண்டு கூட்டி ஒவ்வொரு மொழி இலக்கிய வளர்ச்சிக்கும் வழி துறை கண்டார்கள்.

சிங்கைக் கலாச்சார அமைச்சு நான்கு மொழி வளர்ச்சிக்கும் ஒப்பற்ற பணி ஆற்றிவருகிறது. மொழித் துறையில் மட்டுமின்றி கலை, பண்பாட்டு வளர்ச்சியிலும் அவர்கள் கொடுத்த ஊக்கம் மொழியோடு கலைத்துறை மறுமலர்ச்சிக்கும் வித்திட்டன.

சிங்கைக் கல்வி அமைச்சு தமிழ், சீனம், மலாய், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிப் பிரிவுக்கும் ஒரேவிதமான பாடத் திட்டம் வகுத்துத் தந்திருப்பதுடன் நான்கு மொழிக்கும் ஒரேவித தகுதி தந்துள்ளது. பள்ளிகளில் ஒரே சமயத்தில் நான்கு மொழிகளையும் கற்கும் வாய்ப்பு மாணவர்களுக்கு உண்டு. இது தவிர இணைப்புப் பள்ளிகள் வேறு ஏற்படுத்தி பல இனப் பிள்ளைகளும் ஒன்றுபட்டுப் பழகவும் பயிலவும் வாய்ப்பளித்துள்ளது. தென் கிழக்காசியாவிலேயே சிங்கப்பூர் ஒன்றில்தான் அரசாங்க ஒப்புதல் பெற்ற சீன நன்யாங் பல்கலைக் கழகம் இயங்குகிறது. தமிழ், மலாய் மொழிகளுக்கு உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தியுள்ளார்கள். மலாயா பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி ஏற்படுத்தியிருந்தாலும் சிங்கப்பூர் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பகுதி இல்லை என்ற குறை நிலவுகிறது. இதற்குக் காரணம் போதிய தமிழ் மாணவர்கள் இன்மை என்று தெரியவருகிறது.

சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விவரப்படி நான்கு மொழிப் பள்ளிகளிலும் படிக்கும் மாணவர்கள் விகிதம் வருமாறு:

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | 1,45,000 | பிள்ளைகள் |
| சீனம் | 1,35,000 | ,, |
| மலாய் | 15,000 | ,, |
| தமிழ் | 2,000 | ,, |

தமிழுக்குத் தமிழர்கள் ஆதரவு தந்தால்தான் தமிழ் இந்நாட்டில் தழைக்க முடியும். அரசினர் தொடர்ந்து ஆக்கமளிப்பார்கள்.

நான்கு மொழிகளுக்குரிய தகுதியுடன் தேசிய மொழியாக மலாயைக் கொண்டு வரவும் படிப்படியாக முயன்று வருகிறது சிங்கை அரசு.

சிங்கை வரும் எந்தத் தமிழரும் தமிழுக்குரிய சிறப்பு நிலை கண்டு பெருமிதமும் மனப் பூரிப்பும் கொள்வார்!

# வட-கிழக்குப்...

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

உலுத்தர்களையோ; எம்மை எதிர்நோக்கும் கொடுமைகளைக் கண்டு தெறிய மாடு, மனை, பெண்டிர், சுற்றும் துறந்து செல்லத் துணிவற்றவர்களையோ ஆதரிக்க மாட்டோம் என்ற எண்ணம் எள்ளளவும் ஐயத்துக்கிடமின்றி வேரூன்றிவிட்டது.

ஆகவேதான் நமது நாடும்—மொழியும் செழிப்புறச் சேவை செய்யும் நல்லறிவாளர்; உதட்டைப் போல் உள்ளமும் தூய்மை கொண்டவர்; கொண்ட கொள்கையில் கொஞ்சமேனும் குறைவுபடாது அஞ்சாமல் செயலாற்றும் செயல் வீரர்; சொந்த நலனுக்காகவோ பேரும் புகழுக்காகவோ வாழாத பெருந்தகையாளர்; பேச்சிலும் செயலிலும் கண்ணியமும், துணிவோடு தெளிவும், தெளிவோடு கனிவும் நிறையப்பெற்ற — தமிழரசு வேட்பாளர் திரு மாணிக்கராசாவை ஆதரிக்கும் பொறுப்பு தமிழன்னை பால் பேரார்வம் கொண்ட ஒவ்வொரு வாக்காளருடைய கடமை என்பதை மறவாமல் மனதில் பதிய வைக்க வேண்டுமென்பதே நமது அவா!



## மின்சார சக்திக்கும் மின்சார சக்தி வினியோகத்திற்கும்



ஏ. இ. ஐ. ஒரு குதிரைச் சக்திக்குக் குறைந்த யந்திரங்கள். 3/4 கு. சக்திக் கொண்டவை கையிருப்பில் உள்ளன.


— மிகவும் நியாயமான விலைகள்

வில்லியர்ஸ் பெட்ரோல், மண்ணெண்ணெய் யந்திரங்கள்




1 குதிரைச் சக்திதொடக்கம் 4 குதிரைச் சக்தி வரை பம்புகள், மின்சாரசக்தி உற்பத்தி யந்திரங்கள், அரிவு யந்திரங்கள் முதலியவற்றுக்கு ஏற்றவை. உண்மையான வில்லியர்ஸ் உதிரிபாகங்கள் கையிருப்பில் உண்டு.

வில்லியர்ஸ் புதிய டீசல்கள் பாரங் குறைந்தவை




சிறிய டி 270 அரைக் குதிரைச் சக்தி யந்திரம் கையிருப்பில் உண்டு. ஒரு நிமிட விகிதாசாரம்: 3000. டி 415 7 அரைக் குதிரைச் சக்தி யந்திரம் ஒரு நிமிட விகிதாசாரம்: 3000.

குறெப்ட்ஸ் — எல்லாவிதமான விநியோகத் தேவைகளுக்கும் ஏற்றவை. எல்லாவிதமான இனச்சுகளும் உண்டு. மாறத்தகுந்த வேக வசதி கொண்டவை. ரிடக்ஷன் கியர்கள், கப்லிங்குகள், புல்லிகள், டோர்க் ஆர்ம்சுகள் முதலியவை.




குட் இயர் விநியோக பெல்ட் நாடாக்கள்



"தோர்" ஹெவி டியூட்டி. கிளிங்டைட் மீடியம். பாத்பைண்டர் லைட். மேலதிக செலவில்லாமல் நீண்ட நாள் உபயோகத்தைத் தருவன. இன்னும் எல்லாத்தேவைகளுக்கும் ஏற்ற கொன்வேயர் பெல்ட் நாடாக்கள்.

குட் இயர் கிறீன் சீல் வீ பெல்ட் நாடாக்கள்

அதிக குதிரைச் சக்தியை விநியோகிக்கவல்லன. சுருங்காதவை. ஒன்றுக்கொன்று பொருந்திய செட்டுகளாகக் கிடைக்கும்.



CCC

உங்கள் மின்சார வினியோகப் பிரச்சினை எதுபற்றியும் மனமகிழ்ச்சியோடு உதவி அளிக்க நாம் தயாராயிருக்கிறோம்.

கொழும்பு கொமேர்ஷல் கம்பெனி லிமிட்டெட்

(பெரிய பிரித்தானியாவில் இணைக்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட அங்கத்தவர் பொறுப்புடையது)

சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்த, கொழும்பு-2. டெலிபோன்: 79351.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தீபாவளிப் பண்டிகை

—நா. தேவிகாமலர், இளவாலை—

இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளுள் தீபாவளியும் சிறந்ததொன்ருகும். இப்பண்டிகை ஐப்பசி மாதத்தில் கொண்டாடப்படும். தீபாவளி கொண்டாடும் காரணத்தை ஒட்டி பல ஐதிகக் கதைகள் பரவுகின்றன. இப்பண்டிகை இந்துக்கள் வசிக்கும் இடம் எங்கணும் கொண்டாடப்படுகிறது. ஆனல் ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகக் கொண்டாடப் படுகிறது. குழந்தை முதல் முதியோர் வரை, ஏழை முதல் பணக்காரர் வரை இப் பண்டிகையை ஆர்வத்துடன் கொண்டாடுகிருர்கள்.

நரகாசுரனைக் கொன்ற தினத்தையே மக்கள் குதூகலமாகக் கொண்டாடுகிருர்கள். சிலர் அவனது கொடுமை நீங்கிய நாளை நன்னாளாகக் கொண்டு கொண்டாடுகிருர்கள். வேறு சிலர் அவன் இறக்கும் போது தான் இறந்த நாளை மக்கள் புத்தாடை புனைந்து ஞாபகார்த்த நாளாகக் கொண்டாடவேண்டும் என்று கேட்டுக் கொண்டான் என்றும் கொண்டாடுகிருர்கள். தீபாவளியை ஒவ்வொரு தமிழனும் மங்களகரமான நாளாகவே கொண்டாடுகிருன். எண்ணெய் ஸ்நானம் செய்து, புத்தாடை புனைந்து தம் இயல்புக்கேற்பக் கொண்டாடுவர்.

இப் பண்டிகையை ஆவலுடன் எதிர்பார்ப்பவர் குழந்தைகளே. அவர்கள் மனம் புத்தாடைகளிலும், முக்கியமாக பட்டாசிலுமே லயித்திருக்கும். பட்டாசுச் சத்தம் விண்ணையும் மண்ணையும் பிளந்துவிடும். போட்டி போட்டுக் கொளுத்தித் தள்ளுவார்கள். பட்டாசுச் சத்தமே சிலரைத் துயிலினின்றும் எழுப்பும் கோழிக் குரலாக அன்று மாறிவிடும். அதிகாலையில் எல்லோரும் துயில் எழுந்துவிடுவார்கள். புத்தாடைகளின் சலசலப்பும், பட்டாசுகளின் படபடப்பும் கோவில் மணியின் கணீர் கணீர் ஓசையும் சங்க நாதமும் சேர்ந்து ஒரே கலகலப்பு; எங்கும் புதுமை. மக்களும் அன்று புத்துணர்வு பெற்றவர்களாகிருர்கள். எங்கும் ஆடல் பாடல்; ஒரே குதூகலம்.

மது மாமிசம் புசிப்பதை விலக்கிய தீபாவளிப் பண்டிகையே மங்களமான பண்டிகையாகும். மக்கள் அதனைப் புனிதமாகப் பக்தியுடன் கொண்டாடவேண்டும்.

தீபாவளியன்று மக்கள் தம் துயரை மறந்து, பழமையை மறந்து, புதுமையிலே திளைத்திருப்பர். ஆண்டுக் கொருமுறை வரும் தீபாவளியை ஆவலுடன் எதிர்பாராதவர்கள் இலர். கடை, தெரு, வீடு, வாசல் எங்கும் ஒரே பரபரப்பு; மக்கள் மனதில் சுறுசுறுப்பு. அசுரன் மடிந்ததுடன் தம் துன்பமும் மடிந்து விட்டதென ஒரு எண்ணம். நமக்கு வாழ்வு கிடைத்து விடும் என்ற நம்பிக்கை. இன்பம் கிட்டி விட்டதென்ற ஒரு எக்களிப்பு. இந்துக்கள் இல்லம் எங்கும் ஒரே கொண்டாட்டம். தென்னகத்தவர்களுக்கு மட்டுமல்ல, பாரத மக்கள் அனைவருக்குமே ஒரு நன்னாள்.

தீபாவளித் தினத்தையொட்டி இன்னும் பல புராதனக் கதைகளும் சம்பிரதாயங்களும் இப் புனித நாளுடன் இணைக்கப்பட்டு வழக்கில் உலாவி வருகின்றன.

# ‘புதுமைத் திருடன்’

## பரிசுத் திட்டம்

‘புதுமைத் திருடன்’ கதையில் உங்களுக்கு மிகவும் பரபரப்பூட்டிய கட்டம் எதுவென்று நீங்கள் எழுதி அனுப்பினல், அவற்றுக்குள் சிறந்தனவற்றுக்கு மூன்று பரிசுகள் வழங்கப்படும்.

இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்புவோர் ‘வளர்மதி’ அங்கத்துவப் பத்திரங்கள் மூன்று நிரப்பி அனுப்ப வேண்டும். கட்டுரைகள், தாளின் ஒரு பக்கத்தில், மையினல், தெளிவாக எழுதி அனுப்பப்படல் வேண்டும். கட்டுரையின் நீளம் 150 சொற்களுக்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

முதற் பரிசு ரூ. 10/- பெறுமதியான புத்தகமாகவும், இரண்டாம், மூன்றும் பரிசுகள் முறையே ரூ. 5/-, ரூ. 2/- பெறுமதியான புத்தகங்களுமாகும்.

முடிவுத் தேதி: புதன்கிழமை 20—11—63 ஆகும்.

இதைக் கத்தரித்து அனுப்பவும்

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

பெயர் ____________________


பாடசாலை ____________________

விலாசம் ____________________

____________________

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம்

கையொப்பம்



இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நிரிஎலைத் தோட்டத் தமிழ்க்கலவன் பாடசாலையின் பரிசளிப்பு வைபவத்தின் போது செல்வி மகேஸ்வரி செல்லையாவும் செல்வன் இரா. நடராசாவும் முறையே முதலாவது சிறந்த மாணவியாகவும் முதலாவது சிறந்த மாணவனுகவும் பரிசில்களைப் பெற்றுக்கொண்டார்கள்.

இராவண வதம் முடிந்து அயோத்தியா பட்டணம் திரும்பிய ராமன் சீதையுடன் பட்டாபிசேகம் செய்து கொண்டது இந் நன்னாளாகும். மகாவிஷ்ணு வாமனவதாரக் கோலத்துடன் பலிச் சக்கரவர்த்தியைச் சங்காரம் செய்ததும் இன் நன்னாளில்தான். விக்கிரம சகாப்தத்தின்படி விக்கிரமாதித்திய மன்னவன் மகுடம் தரித்ததும் இந் நன்னாளில்தான் என்று சில இடங்களில் நம்பிக்கை இருக்கிறது.

வங்க நாட்டில் காளி தேவிக்கு உகந்த நாளென்று இந்தத் தினம் இன்றும் கொண்டாடப் படுகிறது. விக்கிரம சகாப்தத்தின்படி புத்தாண்டு பிறப்பதும் இத் தினத்தன்றுதான்.

# தேன் துளிகள்

இந்தக் கர்ம பூமியிலும் அன்பு ஒன்றினல் உந்தப்பட்டுச் செய்யப்படும் காரியங்களே பூரண மதிப்புடையவை. மற்றவற்றிற்கு அரையும் குறையுமான மதிப்புத்தான்.

ஃ

அன்பைக் குறையிரந்து பெறுவதில் பெருமையும் இல்லை அமைதியும் இல்லை.

ஃ

அன்பைச் செலுத்தி விட்டு அதற்குக் கூலி எங்கே என்று கேட்பதைவிட நெஞ்சக் கொடுமை வேறு ஒன்றும் கிடையாது.

ஃ

சொந்த அகங்காரம் சுக வாழ்வைக் கெடுக்கும்; பிறரது அகங்காரம் புற வாழ்வைக் கெடுக்கும்.

ஃ

மனிதனுக்குள் அகங்காரத்தை உந்து சக்தியாக அமைத்தது தெய்வம். அதனைப் பேய்ச் சக்தியாக்கி அந்தப் பேய்க் கூத்தில் ஒரு மகிழ்ச்சியையும் காணுகின்ருன் மனிதன்.

அனுப்பியவர்:
சேவியர் ஜெனி,
கொழும்பு-13.

# நம்பினல் நம்புங்கள்!

இரத்தம் தண்ணீரைப் போல் ஆறு மடங்கு கனமானது.

திபேத்தில் வசிக்கும் "யாக்" என்ற எருமையின் பால் இளஞ் சிவப்பாக இருக்கும்.

சிந்தனையின் வேகத்தைக் கூட அளந்திருக்கிருர்கள். அதன் வேகம் என்ன தெரியுமா? மணிக்கு 150 மைல்!

சேகரித்தவர்!
ஜெயராணி-சபாபதிப்பிள்ளை,
மல்லாகம்.

# எங்கள் கோரிக்கைகள்

[எஸ். அப்துல் கபூர், கொழும்பு.]

அழகாக இல்லைத்தான் பார்ப்பதற்கு. என்ருலும் இறைவன் எங்களுக்கும் அறிவை வைத்துப் படைத்து இருக்கிருன். மலைப்பொந்துகளிலும், மரப்பொந்துகளிலும் வசிக்கிருேம், அவற்றையே வீடாகவும் கொண்டு இருக்கிருேம். எங்களைப் பார்ப்பதற்குப் பயங்கரமாக இருக்கும். ஆனல் நீங்கள் நினைக்கும் அளவுக்கு உங்களுக்குத் தொல்லை கொடுக்க நாங்கள் நினைத்ததே இல்லை. எங்களுக்குத் தொல்லை கொடுக்க நீங்கள் வருகிறீர்கள் என்ருல் உங்களை நாங்கள் சும்மா விட மாட்டோம்.

உங்களைப்போல் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டா நாங்கள் காடு மேடு அலைகிருேம்? இல்லையே! இறைவன் கொடுத்த கையும் காலுமே எங்களுக்கு ஆயுதம். நீங்கள் ஆயுதங்களைக் குவித்து வைத்துக் கொண்டு எங்களை அடக்கி விடலாம், அழித்து விடலாம் என்று எண்ணுகிறீர்கள்! நடக்குமா இது?

வானெலியில் கூச்சல் போட்டுப் பேசுகிறீர்கள்; மேடையில் ஆர்ப்பாட்டம் பண்ணிப் பேசுவீர்கள்! இப்படியெல்லாம் வாய்விட்டு பேசுவீர்களே தவிர செய்கையால் செய்து காட்டியது உண்டா?

சர்க்கஸ் என்ருல் அதில் எங்கள் இனம் இல்லாமல் போகாது. குட்டிகளை அழைத்துக் கொண்டு எங்கள் இனத்தவர்கள் வெளியே வரும்போது, துப்பாக்கியால் சுட்டுச் சாகடித்து விட்டு எங்கள் இனத்தவர்களுடைய குட்டிகளைத் தூக்கிக் கொண்டு வந்து சர்க்கசுக்கு பழக்கிப் பக்குவத்தோடு வளர்த்தும் விடுகிறீர்கள்! அப்புறம் அவை செய்யும் சாகசச் செயல்களைக் கண்டு வியப்படைவீர்கள்! ஆனந்தம் கொண்டு கைதட்டி மிக ஆரவாரம் செய்வீர்கள்! ஆனல அவை விளையாட்டாக ஏதாவது விஷமத்தனம் செய்து விட்டால் சுட்டுச் சாகடித்து விடுகிறீர்கள்!

எனவே எங்கள் இனம் அடிமையாக வாழ விரும்பாது. எங்கள் இனங்களைக் கள்ளத்தனமாகச் சுட்டுச் சாகடித்து விட்டு, அவற்றின் தோலை வீதியில் விரித்து ஏமாற்று வியாபாரம் செய்பவர்களும் உண்டு அவர்களைக் கண்டு பிடித்து விசாரணை செய்து தக்க தண்டனை கொடுக்க வேண்டும். இனி நீங்கள் எங்களுக்குக் கொடுக்க வேண்டியது எது தெரியுமா? மறுத்தால் விபரீதமாகி விடும். அதுதான் சுதந்திரம்!

[இக்கட்டுரையில் குறிக்கப்படும் பிராணி எது? சரியான விடை அனுப்பும் மருமக்களின் பெயர்கள் இப்பகுதியில் இடம்பெறும்.]

# பல நாட்டுப் பழமொழிகள்

“சானு காவன்னு”
ஊவாகட்டவளை.

வெண்கலம் ஓசை செய்யும்; உயர் தங்கம் அது செய்யாது.

—தமிழ்

பிறர் அறியாததை வைத்து அவர்களை மதித்தல் ஆகாது; அறிந்துள்ளதை எவ்வாறு அறிந்திருக்கின்றனர் என்பதை வைத்தே மதிக்க வேண்டும்.

—பிரெஞ்சு

யானை குழியில் விழும் போது [illegible] கும்.

—வங்காளம்

# இதோ விளக்கம்....

வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது:—

இது பழமொழி அன்றியும் உண்மையுமாகும். நன்கு சிந்தித்தால், பழமொழியின் உருவம் பிழையென்பது புலனுகும். ஏனெனில், ஒரு விளாத்தியின் வேரிலிருந்து முளைக்கும் கன்று, அதன் தாய் மரத்தைப் போல் இருப்பது இயற்கையே. இது விளாத்திக்கு மட்டும் உரியதல்ல. எல்லா மரத்திற்கும் உரிய பொது விதி.

ஆகவே, சரியான பழமொழி இப்படித்தான் இருக்க முடியும்: “வேரோடி விலத்தி முளைத்தாலும் தாய் வழி தப்பாது.” எந்த மரத்தினது வேராவது, தாய் மரத்தை விட்டு விலத்தித் தூரம் சென்ருலும், அதிலிருந்து ஒரு கன்று முளைத்தால், அது தாய் மரத்தைப் போல் இருக்கும் அல்லவா?

அனுப்பியவர்: செல்வி எஸ். செல்வரதி, சங்குவேலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## 'இலங்கையர் கோன்' நினைவுச் சிறுகதைப் போட்டி

இலங்கையர் கோன் நினைவு விழாச் சபையினர் நடாத்தும் 'இலங்கையர் கோன்' நினைவுச் சிறுகதைப் போட்டிக்கு ஈழ நாட்டின் பல பாகங்களிலுமிருந்து ஏராளமான சிறு கதைகள் வந்துள்ளன. ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களும் மிகுந்த உற்சாகத்துடன் கதைகளை அனுப்பி வைத்திருக்கின்றனர்கள். "இலங்கை எழுத்தாளன்" ஆசிரியர் பண்டிதர் திரு. சு. வேலுப்பிள்ளை (சு. வே) "கலைச் செல்வி" ஆசிரியர் திரு. சி. சரவணபவன் (சிற்பி) திருமதி வள்ளி நாயகி இராமலிங்கம் (குறமகள்) ஆகியோர் கதைகளைப் பரிசீலனை செய்கின்றனர்.

முதற் பரிசு பெறும் கதைக்கு 100/- ரூபாயும் இரண்டாம் பரிசு பெறும் கதைக்கு 60/- ரூபாயும் மூன்ரும் பரிசு பெறும் கதைக்கு 40/- ரூபாயும் வழங்கப்படும்.

பரிசுத் தொகை முழுவதையும் இலங்கையர் கோன் அவர்களின் நண்பர்களான திரு. வி. விஸ்வநாதன் (காரியாதிகாரி, கிளிநொச்சி) திரு. க. கணபதிப்பிள்ளை (வழக்கறிஞர்) ஆகியோர் நன்கொடையாக உபகரித்துள்ளார்கள்.

நவம்பர் 15-ம் திகதி ஏழாலையில் நடைபெறும் இலங்கையர் கோன் நினைவு விழாவில் இப்பரிசுகள் திருமதி இலங்கையர் கோன் அவர்களால் வழங்கப்படும். இவ் விழாவில், பிரபல நாவலாசிரியரான 'மணிவண்ணன்' அவர்களும் ஈழத்தின் பிரபல எழுத்தாளர்களும் கலந்து கொள்வார்கள்.

---

## கொட்டாஞ்சேனையில் நவராத்திரி விழா

கொழும்பு கொட்டாஞ்சேனையிலுள்ள வரதராஜ விநாயகமூர்த்தி கோயிலில் இம்முறை நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. 25ம் திகதி முதல் 27ம் திகதி வரை விசேஷ இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

முதல் நாளன்று திரு. வே. சிவஞானம் பக்திப் பாடல்கள் பாடினர். தொடர்ந்து திருமதி சண்முகவல்லி செந்தில்நாதன், செல்வி யமுனு சகோதரிகள், திரு. கே. கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் பாடினர்கள். இரண்டாவது நாளன்று செல்விகள்: ஏ. லலிதாதேவி, ஏ. இராமேஸ்வரி, லலிதா பஞ்சநாதன், லட்சுமி மாத்ருபூதம் (வீணை) ஆகியோர் பாடினர்கள். தொடர்ந்து நடைபெற்ற தாளவாத்தியக் கச்சேரியில் செல்வன் சுதந்திரராஜன் இரத்தினசபாபதி (மிருதங்கம்), செல்வி லலிதாம்பிகை சுகிர்தலிங்கம் (மிருதங்கம்), செல்வி சாந்தி இரத்தினசபாபதி (கஞ்சிரா) பங்கு பற்றினர்.

திருமதி பத்மாவதி பூர்ணநந்தா, திரு. என். பாலசுப்பிரமணியம் ஆகியோரின் வயலின் இசையும் இடம் பெற்றது. பின்னர் இறுதியாக திரு. ஏ. ஆர். கிருஷ்ணன் பாகவதர் பாடினர்.

27ம் திகதி திரு. ஆர். சோமநாதன், திருமதி லட்சுமி நடராஜன், சென்னை கர்னாடக இசைக் கல்லூரியைச் சேர்ந்த திரு. ஏ. எஸ். நாராயணன் ஆகியோர் பாடினர். திரு. சோமசுந்தரத்திடம் பயின்ற செல்வன், சுதந்திரராஜன் இரத்தின சபாபதி புல்லாங்குழல் வாசித்தார்.

இசை நிகழ்ச்சியில் பங்கு கொண்டவர்கள் அனேகர் பிரபல வித்துவான் திரு. ஏ. ஆர். கிருஷ்ணன் பாகவதரிடம் சங்கீதம் பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரபல மிருதங்கம் வித்துவான்களான திருவாளர்கள்: ரி. இரத்தினம், ஏ. சந்திரசேகரன், கே. கே. அச்சுதன் முதலியோரிடம் பயின்ற திருவாளர்கள்: விஸ்வநாதன், எஸ். பரமநாதன், தியாகராசன், செல்வன் பாபு ஹரிஹரன் ஆகியோர் கச்சேரிகளுக்கு மிருதங்கம் வாசித்தனர்.

திருவாளர்கள்: வே. சங்கரலிங்கம், வே. சிவஞானம், என். பாலசுப்பிரமணியம் ஆகியோர்கள் வயலின் வாசித்தனர். திருவாளர்கள்: ஏ எம். சந்திரசேகரன், குமாரசிவம் கெஞ்சிராவும், சோமநாதன் மோர்சிங்கும் வாசித்தனர்.

விழாவினைச் சிறப்புடைய தாக்க கோயில் செயலாளர் திரு. சி. இரத்தின சபாபதிக் குருக்கள், மற்றும் என். சோமாஸ் கந்த சர்மா, என். சண்முகநாதன், சதானந்த சர்மா ஆகியோர் முன்னின்று பணிபுரிந்தனர்.

இசைநிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்வதில் திரு. ஏ. எஸ். நாராயணனும், திரு. எஸ். சந்திரசேகரனும் பெரிதும் உழைத்துள்ளார்கள்.

---

## தோட்டப்பாடசாலையில் "சரஸ்வதி பூஜை"

இரத்தினபுரி வட்டாரத்தைச் சேர்ந்த நிரியெல்லைத் தோட்டத் தமிழ்க் கலவன் பாடசாலையில் வழமைபோல் இவ்வாண்டும் சரஸ்வதி பூஜை சிறந்த முறையில் கொண்டாடப்பட்டது. பூஜைக்கு தோட்டத்து அதிகாரி உயர்திரு பி. எச். பிருக் அவர்கள் தலைமை வகித்தார்கள். அவருடன் உதவி அதிகாரிகளில் ஒருவரான திரு. ஏ. சி. பி. மாறம்மே அவர்களும் பூஜையில் கலந்து கொண்டார்கள். திரு. பி. எச். பிருக் அவர்களாலும் திரு. ஏ. சி. பிமாறம்பே அவர்களாலும் தோட்டத்துக் கணக்கப்பிள்ளை திரு. பரமசிவம் என்பவராலும் முறையே நாடா கத்தரிக்கப்பட்டும் குத்து விளக்கு ஏற்றப்பட்டும் தேங்காய் உடைக்கப்பட்டும் பூஜை ஆரம்பிக்கப்பட்டது.

மாணவர்களும் பெற்றோரும் கூட்டுப் பிரார்த்தனை நடாத்திய பின் முருக பக்தன், திரு. மு. சி. நல்லதம்பி அவர்களால் நவராத்திரி பற்றிய சங்கீத கதாப் பிரசங்கம் நடாத்தப்பட்டது.

---

## பெற்றோர் தின விழா

சேமமடு முதலாம் பருவ அரசினர் பாடசாலைப் பெற்றோர் ஆசிரியர் சங்கச் சார்பாக, 26-10-63 சனிக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் நடைபெற்ற இவ்விழாவுக்கு பண்டித, பொன் சின்னத்துரை அவர்கள் தலைமை வகித்தார்கள்.

பல நூற்றுக்கணக்கான மக்கள் பங்கு பற்றிய இவ்விழாவை நடன, இன்னிசை நிகழ்ச்சிகளும் சிறப்படையச் செய்தன.

அருவி வெட்டு நடனம், சுண்ணன் கோபியர் நடனம், பாலகோபால நடனம், குறவன் குறத்தி நடனம், சுகாதார நடிப்பு, கோலாட்டம், நாட்டுக் கூத்து என்பன, பலரின் பாராட்டுதலைப் பெற்றன.

இரவு இரண்டரை மணியளவில் விழா இனிது நிறைவேறியது.

---

## தோட்டப் பாடசாலையில் வருடாந்தப் பரிசளிப்பு விழா

இரத்தினபுரி மாவட்டத்தைச் சேர்ந்த நிரியெல்லைத் தோட்டத் தமிழ்க் கலவன் பாடசாலையில் அத் தோட்டத்து சிரேஷ்ட உதவி அதிகாரி திரு. ஆர். பி. பெர்னண்டோ அவர்களின் தலைமையில் வருடாந்தப் பரிசளிப்பு விழா 28—10—63 அன்று நடைபெற்றது. தலைமை வகித்த திரு. பெர்னண்டோ அவர்களுக்குத் தலைமை ஆசிரியர் மலர் மாலை அணிவித்தும், திருமதி பெர்னண்டோவுக்கு செல்வி தவமணி சுப்பையா மலர்ச் செண்டு கொடுத்தும் வரவேற்ருர்கள்.

செல்விகள் செ. மகேஸ்வரி, வெ. சரஸ்வதி, ஆகியோர் லரவேற்புப்பாட்டும், செல்வன் வீ. சந்தனம் வாழ்த்துப் பாட்டும் பாடினர்கள். திருமதி பெர்னண்டோ மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர்.

பரிசு பெற்றோர் விபரம்:

குறைந்த வயதில் சிறந்த மாணவர்கள்: 1. செல்வன் இரா. நடராசா, 2. செல்வன் து. கேசவன், 3. செல்வி மகேஸ்வரி செல்லையா.

நாள்தோறும் தவருமல் பாடசாலைக்கு வந்தவர்கள்: செல்வன் இ. அழகப்பன், செல்வன் ம. பொன்னையா, செல்வி பி. இலட்சுமி,

விளையாட்டு வீரர்கள் ஆண்கள்: 1. செல்வன் பெ. தங்கராசா, 2. செல்வன் ந. கலியப்பெருமாள், 3. இ.பெருமாள். பெண்கள்:

1. செல்விகள்: லெ. மலையம்மாவும், இ. செல்லமும். 2. செல்வி வெ. சாலம்மா. 3. செல்வி சி. சிரங்காயி.

பழைய மாணவர்களிலும் செல்வர்கள்: ந. சிவனையா [பரி ஞூக்கா கல்லூரி], ஆ. தேவசகாயன் [சென்ற் அலோசியஸ் கல்லூரி] ஆகியோர்கள் பரிசு பெற்ருர்கள்.

---

## காந்தி வாசிகசாலை

23—10—63ல் சார்ணியா குரூப் தங்கமலை தோட்டத்தில் காந்தி வாசிகசாலையின் புதிய ஆட்சிக்குழுத் தேர்தல் நடைபெற்றது. பின்வருவோர் பதவியாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்;-

தலைவர்: வி. நடராசன், துணைத் தலைவர்: எஸ். பெருமாள், செயலாளர்: ஆர். சண்முகம், துணைச் செயலாளர்: மு. அடைக்கன், பொருளாளர்: மு. சிதம்பரம்.

ஆட்சிக்குழு உறுப்பினர்கள்: [illegible] ராஜ், வி. நடேசன், ப. கிட்ணன், வி. தங்கவேல், பொ. ராமையா.

## அரசாங்க எழுதுவினைஞர் சங்கம்

அரசாங்க எழுது வினைஞர் சங்கத்தில் திருகோணமலைக் கிளை 1963ம் ஆண்டு ஐப்பசி (அக்டோபர்) மாதம் 14ம் திகதி திருகோணமலை இந்துக் கல்லூரி சம்பந்தர் ஞாபகார்த்த மண்டபத்தில் ஓர் விசேட பொதுக் கூட்டம் கூடியது. காலஞ்சென்ற திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந. இ. இராஜவரோதயம் அவர்களின் ஞாபகார்த்தமாக இரண்டு நிமிட மௌனத்தோடு கூட்டம் ஆரம்பமானது. பின்வரும் உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: க. விஸ்வலிங்கம், துணைத் தலைவர்: செ. சிவலிங்கம், செயலாளர்: சி. சண்முகராஜா. ஆட்சிக் குழு உறுப்பினர்கள்: நா. வேல்நாயகம், க. கணேசன், சி. சிங்காரவேல், சோ. வ. இரத்தினம், இ. பத்மநாதன்.

தலைவர் பேசியபோது நமது சங்கத்திற்கு உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுமென்றும், சிங்கள மொழிச் சட்டத்தால் பாதிக்கப்படும் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு திருக்கோணமலையில் இயங்கும் வர்த்தக ஸ்தாபனங்கள் உத்தியோக வசதி கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. செ. சிவலிங்கம் பேசுகையில், கொள்கைகள் பற்றி தாய்ச் சங்கம் கவனிக்க வேண்டுமென்றும் மற்று சேவை விடயங்கள் பற்றி குறிப்பாக இம்மாவட்டத்தில் ஊழியம் பார்க்கும் நமது சங்க உறுப்பினர்களுக்கு இருக்கும் அலுவலகக் கஷ்டங்கள், மாற்றம் வீடு வசதி போன்றவைகளை கிளைச் சங்கம் ஆர்வமாகக் கவனிக்க வேண்டும் என்றும், இப்படி செயல்களில் ஈசுபட்டால்தான் நமது சங்கத்திற்கு மதிப்பும், உறுதியும் பெருகும் என்றும் குறிப்பிட்டார்.

## களுத்துறையில் கலைமகள் விழா

களுத்துறை பொது சுகாதார பரிசோதகர் பயிற்சிக் கலாசாலையில் 26-10-63 சனிக்கிழமை மாலை மேற்படி கலாசாலை தமிழ் மாணவர்களால் கலை மகள் விழா மிக கோலாகலமாகக் கொண்டாடப் பெற்றது. கலைமகள் விழாவையிட்டு சொற்பொழிவு, சக்தி வழிபாடு முதலியன இடம் பெற்றன.

சுகாதார பரிசோதகர் பயிற்சியாளர் சரித்திரத்தில் இதுவே முதற் தடவையாக கலாசாலையில் கலைமகள்விழா இவ்வளவு விமரிசையாக நடைபெற்றுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

---

## பாரதி வித்தியாலயத்தில் சரஸ்வதி பூஜை

பிளாக்வூட், பாரதி வித்தியாலயத்தில் சரஸ்வதிபூஜை 26-10-63 சனிக்கிழமை இந்து இளைஞர் சங்கத்தினரால் அதி விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

திரு. கறுப்பையாவின் சங்கீதக் கச்சேரி முக்கிய இடம் பெற்று விழாவைச் சிறப்புறச் செய்தது.

---


## 'சுதந்திரன்'
### புதிய சந்தா விபரம்

தபால் கட்டணம் அதிகரித்திருப்பதன் காரணமாக, பின்வருமாறு சந்தா உயர்த்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| ஒரு வருடம் | ரூபா 14.00 |
| ஆறு மாதம் | ரூபா 7.50 |

நிர்வாகி
'சுதந்திரன்'



## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரூமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரூமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்.

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

**சுதந்திரன் ரைப் பவுண்டரி,**

194 ஏ. பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) ராஜ் (நீர்கொழும்பு) மொடர்ன் (பதுளை)

விஜிதா (அட்டன்) கல்யாணி (நாவலப்பிட்டி) ஜெமினி (ராகலை)

திடுக்கிடும் சம்பவங்களும் திகைப்பூட்டும் சண்டைகளும் நிறைந்த திரைச் சித்திரம்!



ஆனந்தன் — புதுமுகம் சி. லீலா

எம். ஆர். ராதா—மனோரமா

டி. ஆர். நடராஜன்—நாகேஷ்

ஜெமினி சந்திரா

மற்றும் பலர் நடித்த

# நாகமலை அழகி

கலர் நடனம் : சத்தியவதி—ராஜேஸ்வரி

## 3வது வெற்றி வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டுநகர்)

புதுமையான கதையும், இனிமையான பாடல்களும் சேர்ந்த படம்!



விஜயகுமாரி-முத்துராமன்

பாலாஜி-சகஸ்ரநாமம்

புஷ்பலதா-சந்திரபாபு

மற்றும் பலர் நடிக்கும்

# போலீஸ்காரன் மகள்

திரைக் கதை-வசனம்-டைரக்‌ஷன் : ஸ்ரீதர்

## 2வது மாதம்!

சென்ட்ரல் [மருதானை] ராணி [யாழ்ப்பாணம்] சென்ட்ரல் [நாவலப்பிட்டி]

மீபுர (நீர்கொழும்பு) சீகிரியா (பண்டாரவளை) ஆனந்தா (கம்பளை) சூரியா (ராகலை)

பிரீதி (அட்டன்) நியூவிஜேந்திரா (அனுராதபுரம்) ஸ்ரீபாஸ்கரன் (அச்சுவேலி)

மற்றும் பல திரைகளில்!

பாய்ந்து வரும் புலியைத் தாக்குவதோடல்லாமல் பகையையும் சாடுகிறார் புரட்சி நடிகர்

எம். ஜி. ராமச்சந்திரன், பி. சரோஜாதேவி, எம். ஆர். ராதா, எம். ஆர். ஆர். வாசு, அசோகன், பி. கண்ணும்பா, சாண்டோ சின்னப்பா தேவர்

மற்றும் பலர் நடித்த



# தாயைக் காத்த தனயன்



## வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது!

எல்பின்ஸ்டன் (மருதானை) றெக்ஸி (வெள்ளவத்தை) வின்ஸர் (யாழ்ப்பாணம்) அசோகமாலா (நீர்கொழும்பு)

வேல்ஸ் (கண்டி) நெல்சன் (திருகோணமலை) இம்பீரியல் (மட்டக்களப்பு) கிங்ஸ் (பதுளை)

அதிக செலவுடன் தயாரிக்கப்பட்ட ஒரே படம்!

40 லட்சம் ரூபா செலவில், 4 வருடங்களாக எடுத்த படம்!

டெக்னிக் கலரில் முதலாவது தமிழ்ப் படம்!

ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் புகழீட்டிய நடனராணி கமலா லக்ஷ்மணனின் களிப்பூட்டும் கண்கவர் நடனங்கள்!

ஜெமினி கணேசன்—சாவித்திரி—குசலகுமாரி—முத்துலட்சுமி மனோகர்—சாரங்கபாணி—கமலா லக்ஷ்மண்

மற்றும் பலர் நடித்த

# கொஞ்சும் சலங்கை

இலவச பாஸ்கள் செல்லுபடியாகா — கட்டணம் வழக்கம் போல்

கிழமை நாட்களில் மட்டும் ரீகலில் காலை 10 மணிக் காட்சி.

செல்லமஹால் திரையில் 4-வது வாரம்! **வீரத் திருமகன்**

கெப்பிட்டல் திரையில் 3-வது வாரம்! **வீரபாண்டிய கட்டபொம்மன்**

இப் பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, பண்டாரநாயக்க வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1963-ம் வருடம் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.